12. ஒரு நேர் வட்டக் கூம்பின் நுனியில்லாத துண்டத்தின் (Truncated Cone) உயரம் 1 அடி, அதன் இரு ஓர வட்டங்களின் விட்டங்கள் முறையே 4", 10" என்றால் அத்துண்டத்தின் பருமமென்ன ?

§ 32. வளைவரைக்குட்பட்ட பரப்பு (Area bounnded by a curve)

முதற்பகுதியில் எளிய பயிற்சிகளைக் கொண்டு பரப்பளவுகளைக் கணக்கிடும் முறையைக் கண்டோம். § 33-ல் எவ்வாறு ஒரு வரையறுத்த தொகை பரப்பளவைக் காட்டுமென்று விளக்கினோம். எடுத்துக்காட்டாக,

பரப்பு $BHKC$ = எல்லை Σ நீள் சதுரம் PN



படம் 12

$$= \text{எல்லை } \Sigma\, (MP, MN)$$

$$= \text{எல்லை } \Sigma\, f(x)\, \triangle x$$

$$= \int_a^b f(x) \cdot dx$$

எனவே,

$y = f(x)$, x அச்சு, $x = a$, $x = b$ என்ற எல்லைகட்குட்பட்ட பரப்பளவைக் கணக்கிட அதை x அச்சிற்குச் செங்குத்தான நீள் சதுர வடிவான நுண்பகுதிகளாகப் பிரித்து அவற்றின் கூடுதலின் எல்லை மதிப்பைக் காணவேண்டும்.

$x = f(y)$ என்ற வளைவரைக்கும் $y = \alpha$, $y = \beta$ என்ற கோடுகளுக்குமிடையேயுள்ள பரப்பு, y அச்சிற்குச் செங்குத்தான நுண்ணிய நீள் சதுரக் கூடுதலின் எல்லை மதிப்பாகும்.

$$\therefore \text{ வேண்டிய பரப்பின் எல்லை மதிப்பு } = \int_\alpha^\beta f(y) \cdot dy = \int_\alpha^\beta x \cdot dy$$

பொதுவிதி : வரையறுத்த தொகையீட்டு முறையில் கணக்கிட, வேண்டிய பரப்பு, வில்லின் நீளம், அல்லது பருமம், இவற்றை முதற்படி நுண்பகுதிகளாக்கி (first order of infinitesimals) அவற்றின் கூடுதலின் எல்லை மதிப்பைத் தொகையீட்டு முறையில் (Integration) காணவேண்டும்.


குறிப்பு : $\triangle x$ மிகையாக (positive) இருக்கும்போது $\Sigma\,[f(x) \cdot \triangle x]$, அதாவது பரப்பின் குறி, $f(x)$-ன் குறியைப்

பொருத்து மிகையாகவோ, குறைவாகவோயிருக்கும். $f(x)$-ன் மதிப்பு x அச்சுக்குமேலே இருப்பின் மிகையென்றும், கீழேயிருப்பின் குறையென்றும் கொள்கிறோம். ஆதலால் ஒரு வளைவரையின் பரப்பில் ஒரு பகுதி x அச்சுக்கு மேலும் மறுபகுதி கீழுமாக இருப்பின் உண்மையான பரப்பை (absolute value)க் காண இரு பகுதிகளையும் தனித்தனியாக மதிப்பிட்டுக் கூட்டவேண்டும். இதுபோலவே $\triangle y$ மிகையெனில் $f(y)$-ன் குறி y அச்சுக்கு வலதுபுறம் மிகை, இடதுபுறம் குறை எனப்படும்.

எ. கா. 1

$a^2 y^2 = x^2 (a^2 - x^2)$ என்ற வளைவரைக்கு உட்பட்ட மொத்த பரப்பைக் கணக்கிடுக.

கொடுக்கப்பட்ட சமன்பாடு x, y இவற்றில் இரட்டைப்படையாதலால் இரு அச்சுகளையொட்டி வளைவரை சீராக அமைந்தது. தவிர $x = \mp a$ எனப்பிரதியிட $y = 0$ வாகவும் $x = > + a$, $x < - a$ என்ற மதிப்புகளுக்கு y-ன் மதிப்பு கற்பனை (imaginary) ஆவதால், வளைவரை $x = \pm a$ குத்தாயங்களுக்கிடைப்பட்டது.



படம் 13

A என்ற முழுப்பரப்பு = முதல் நாற்கூறுப் பகுதியிலுள்ள பரப்பில் நான்கு மடங்கு.

$$A = 4 \int_0^a y \cdot dx = 4 \int_0^a \frac{x}{a} \sqrt{a^2 - x^2}\, dx$$

$$= \frac{2}{a} \int_0^a \sqrt{a^2 - x^2} \cdot d(x^2)$$

$$\therefore \quad A = \frac{2}{a}\int_0^{a^2} \sqrt{a^2 - u} \cdot du\,; \qquad u = x^2.$$

$$= \frac{2}{a}\left[-\frac{2}{3}(a^2-u)^{\frac{3}{2}}\right]_0^{a^2} = \frac{-4}{3a}\left[0 - a^2\right]^{\frac{3}{2}}$$

$$= \frac{4}{3a}a^4 = \frac{4}{3}a^2.$$


எ. கா. 2.

$x^2y = 36$ என்ற வளைவரைக்கும், $y = 9, x = 6$ என்ற கோடுகளுக்குமிடையிலுள்ள பரப்பைக் காண்க.

(i) $y = 9$ எனும் போது $x^2 \cdot 9 = 36 \quad \therefore \quad x = \pm 2.$

ஆனல், பரப்பு முதல் நாற்கூறுப் பகுதியிலுள்ளது. $x = -2$ என்பது பொருந்தாது.

$\therefore$ பரப்பளவு $x = 6, x = 2$ குத்தாயங்களுக்கிடைப்பட்டது.



படம் 14.

$A =$ எல்லை $\Sigma\, MPQN \qquad =$ எல்லை Σ (நீள் சதுரம் PN)

$=$ எல்லை $\Sigma\,(PM \cdot MN) =$ எல்லை $\Sigma\,(9 - y)\,\Delta x$

$$= \int_2^6 \left(9 - \frac{36}{x^2}\right) dx.$$

$$= 9\left(x \right)_2^6 + 36\left(\frac{1}{x}\right)_2^6$$

$$= 9\ (6 - 2) + 36\left(\tfrac{1}{6} - \tfrac{1}{2}\right)$$

$$= 36 - 36 \cdot \tfrac{2}{6} = \mathbf{24}$$

(ii) மாற்றுமுறை :

Y-அச்சுக்குச் செங்குத்தாக நீள் சதுரங்கள் வரைந்தால் $x = 6$ எனும் போது, $y = 1$.

$A = \Sigma$ (நீள் சதுரம் PK) $= \Sigma\ (PH \cdot KH)$

$$= \Sigma\ (6 - x) \cdot \Delta y = \int_1^9 (6 - x)\ dy$$


$$= \int_1^9 \left(6 - \frac{6}{\sqrt{y}}\right) dy = 6\left(y - 2\sqrt{y}\right)_1^9$$

$$= 6\ [9 - 2 \cdot 3] - 6 \cdot (1 - 2) = 6\ (3 + 1) = \mathbf{24}$$

எ. கா. 3.

ஓர் உருள்வளை (cycloid)-க்கும் அதன் அடிக்கோட்டிற்கு மிடைப்பட்ட பரப்பைக் கணக்கிடுக.

உருள்வளையின் சமன்பாடுகள்



படம் 15

$x = a\ (\theta - \sin\theta)$

$y = a\ (1 - \cos\theta)$

$P(x, y)$ எனும் புள்ளி ஒரு வளைவரையில் செல்லும் போது θ-ன் மதிப்பு O-விலிருந்து 2π ஆகிறது.

$$\therefore \text{ பரப்பு } = \int y\,dx = \int_0^{2\pi} y \cdot \frac{dx}{d\theta} \cdot d\theta.$$

$$= \int_0^{2\pi} a\,(1 - \cos\theta) \cdot a\,(1 - \cos\theta)\,d\theta.$$

$$= a^2 \int_0^{2\pi} (1 - \cos)^2\,d\theta =$$

$$a^2 \int_0^{\frac{\pi}{2}} (1 - 2\cos\theta + \cos^2\theta)\,d\theta$$

$$= 4a^2 \int_0^{\frac{\pi}{2}} (1 + \cos^2\theta)\,d\theta$$

$$\because \int_0^{2\pi} \cos\theta \cdot d\theta = 0$$

$$= 4a^2 \cdot \Big(\theta\Big)_0^{\frac{\pi}{2}} + 4a^2 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2}$$

$$= 4a^2 \cdot \frac{\pi}{2} + \pi a^2 = 3\pi a^2.$$


எ. கா. 4.

$y = a \sin x$ என்ற வளைவரையின் ஒரு வளைவிற்குட்பட்ட பரப்பு யாது ?

$y = a \sin x$ எனில்

$x = 0, \pi$ எனில்

$y = 0 \quad \therefore$ கீழ், மேல் x-ன் எல்லைகள் முறையே $0, \pi$.



படம் 16

$$\therefore \text{ ஒரு வளைவின் பரப்பு } = \int_0^{\pi} y \cdot dx$$


$$= \int_0^{\pi} a \sin x \cdot dx$$

$$= a\,(-\cos x)_0^{\pi} = -a\,(-1-1) = 2a$$

எ. கா. 5

$\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள் வட்டத்தின் பரப்பளவு யாது ?

சமன்பாடு x, y களின் இருபடி. ∴ நீள்வட்டம் இரு அச்சுகளையொட்டிச் சீரானது.



படம் 17

∴ பரப்பு $A = 4$ கால் நீள் வட்டம்

$$= 4 \int_0^{a} y \cdot dx. \qquad \begin{array}{l} x = a \cos \theta \\ y = b \sin \theta \text{ எனப்} \end{array}$$

பிரதியிட்டால் $x = 0, a$ எனில் $\theta =$ முறையே $\frac{\pi}{2}, 0$.


$$dx = -a \sin\theta \cdot d\theta.$$

$$\therefore \quad A = 4\int_{\frac{\pi}{2}}^{0} b \sin\theta \cdot (-a \sin\theta)\, d\theta.$$

$$= 4\,ab \int_{0}^{\frac{\pi}{2}} \sin^2\theta \cdot d\theta = 4\,ab \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2} = \pi ab$$

எ. கா. 6

$x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ என்ற வளைவரைக்குட்பட்ட பரப்பு யாது? அடுக்கு $\frac{2}{3}$ல் தொகுதி இரட்டைப் படையாதலால் அச்சுகளை யொட்டி வளைவரை சீரானது.



படம் 18

$y = 0$ எனில் $x^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ $\quad\therefore\quad x^2 = a^2, \quad x = \pm a$

$x = 0$ எனில் $y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ $\quad\quad y^2 = a^2, \quad y = \pm a.$

$\therefore$ பரப்பு $A = 4 \times$ பரப்பு OBC

$$= 4 \int_0^a y \cdot dx$$

$x = a\cos^3\theta,\ y = a\sin^3\theta$. எனப் பிரதியிட்டால்

$x = 0$ எனும்போது $\theta = \pi/2$

$x = a$ எனும்போது $\theta = 0$

$dx = -3a\cos^2\theta \cdot \sin\theta \cdot d\theta$.


$$A = 4 \int_{\frac{\pi}{2}}^{0} a\sin^3\theta\,(-3a\cos^2\theta \cdot \sin\theta)\,d\theta.$$

$$= 12a^2 \int_0^{\frac{\pi}{2}} \sin^4\theta \cdot \cos^2\theta \cdot d\theta$$

$$= 12a^2 \cdot \frac{3 \cdot 1 \cdot 1}{6 \cdot 4 \cdot 2} \cdot \frac{\pi}{2} = \frac{3\pi a^2}{8}$$

எ. கா. 7.

$3ay^2 = x(x-a)^2$ என்ற வளைவரையின் வளையத்தின் பரப்பளவைக் காண்க. சமன்பாடு Y-ன் இருபடி. $\therefore$ வளைவரை X-அச்சை யொட்டிச் சீரானது.



படம் 19

$x = 0$ என்றால் $y = 0$ $\therefore$ ஆதிவழியாகச் செல்கிறது.

$x = a$ என்றால், $y = 0$ $\therefore$ x அச்சை $(a, 0)$-ல் வெட்டுகிறது.

$x = \infty$ என்றால் $y = \pm \infty$;

$x =$ குறை மதிப்பு என்றால் y கற்பனையாகும்.

$\therefore$ வளைவரையின் வளைவு y-அச்சுக்கு வலது புறமாக $x = 0, a$ எல்லைக்குள் x-அச்சுக்குச் சீராக அமையும்.

வளைவின் பரப்பு

$A = 2$ பரப்பு OBC

$$= 2 \int_0^a y \cdot dx$$

$$= 2 \int_0^a \frac{\sqrt{x} \cdot (x - a)}{\sqrt{3a}} \cdot dx$$

$$= \frac{2}{\sqrt{3a}} \int_0^a (x^{\frac{3}{2}} - ax^{\frac{1}{2}}) \cdot dx.$$

$$= \frac{2}{\sqrt{3a}} \left[\tfrac{2}{5} \cdot x^{\frac{5}{2}} - a \cdot \tfrac{2}{3} x^{\frac{3}{2}} \right]_0^a$$

$$= \frac{2}{\sqrt{3a}} \left[\tfrac{2}{5} \cdot a^{\frac{5}{2}} - \tfrac{2}{3} \cdot a^{\frac{5}{2}} \right] = \frac{4}{\sqrt{3}} a^2 \left(-\tfrac{2}{15}\right)$$

$$= -\frac{8}{15\sqrt{3}} \cdot a^2$$

பயிற்சிகள் 30

1. $x^2 = 4y$ என்ற பரவளைவிற்கும், x-அச்சு, $x = 2$ என்ற கோடு இவற்றிற்கிடைப்பட்ட பரப்பைக் காண்க.

2. $y = \cos 2x$ என்ற வளைவரையின் ஒரு வளைவுக்கும் x-அச்சுக்குமிடைப்பட்ட பரப்பு யாது ?

3. $x = c$ என்ற கோடு $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தைப் பிரிக்கும் இரு பகுதிகளின் பரப்பு ஒவ்வொன்றையும் காண்க.

4. $ay^2 = x^3$, x-அச்சு, $x = a$ இவற்றிற்குள்ளடங்கிய பரப்பளவைக் கணக்கிடுக.

5. $x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ என்ற வளைவரைக்கும், இரு அச்சுகளுக்கும் இடையிலுள்ள பரப்பளவைக் கணக்கிடுக.

6. இரு அச்சுகளுக்கும் $\sqrt{x} + \sqrt{y} = 1$ என்ற வளைவரைக்கும் இடைப்பட்ட பரப்பைக் காண்க.

7. $y = 5x - x^2 - 4$ என்ற வளைவரைக்கும், x-அச்சுக்குமிடையேயுள்ள பரப்பைக் காண்க.

8. $y = c \cosh \frac{x}{c}$, அச்சுக்கள், $x = c$ இவற்றிற்கிடைப்பட்ட பரப்பு யாது ?

9. பின்வரும் வளைவரைகளின் வளைவுகளின் (loops) பரப்பளவை மதிப்பிடுக.

(i) $y^2 = \frac{x^2(1+x)}{1-x}$ (ii) $y^2 = x^4(x+2)$

(iii) $2y^2 = (1-x)(1+2x)^2$

(iv) $y^2 = (x+1)(x-2)^2$


(v) $ay^2 = (x-a)(x-5a)^2$

10. $y(x^2 + 4a^2) = 8a^3$-க்கும் அதன் அணுகுகோட்டிற்கும் (asymptote) இடையேயுள்ள பரப்பைக் காண்க.

11. $y^2(2a - x) = x^3$ என்ற வளைவரைக்கும் அதன் அணுகு கோட்டிற்குமிடையேயுள்ள பரப்பைக் காண்க.

12. $y^2 = 4ax$, அதன் செவ்வகம் (latus rectum) இவற்றிற்கிடையேயுள்ள பரப்பு என்ன ?

§ 33. முடிய வளைவரையின் பரப்பளவு (Area of a closed curve)



படம் 20

BH, CK என்ற குத்தாயங்கள் வளைவரையின், y-அச்சுக்கு இணையான எல்லைத் தொடுகோடுகள். ஒரு குத்தாயம் வளை வரையை $P_1 (x_1\ y_1)$, $P_2 (x_2, y_2)$ எனும் இரு புள்ளிகளில் வெட்டுகிறது. $y_1 > y_2$, $OH = a$:

$OK = b$ என்போம்.

$$\text{பரப்பு } HBP_1CK = \int_a^b y_1\, dx \qquad \ldots \quad \ldots (i)$$

$$\text{பரப்பு } HBP_2CK = \int_a^b y_2\, dx \qquad \ldots \quad \ldots (ii)$$

$$(i)—(ii), \text{ பரப்பு } BP_1CP_2 = \int_a^b (y_1 - y_2)\, dx$$

அல்லது

$$\text{பரப்பு } BP_1CP_2 = \text{எல்லை } \Sigma \text{ நீள்சதுரம் } P_1M_2$$

$$= \text{எல்லை } \Sigma (P_2 \cdot P_1 \cdot P_2 \cdot M_2)$$

$$= \text{எல்லை } \Sigma (y_1 - y_2) \triangle x$$

$$= \int_a^b (y_1 - y_2)\, dx \qquad \ldots I$$

இங்கு x-ன் a,b எல்லைகளில் $y_1 = y_2$


குறிப்பு : நீள் சதுரங்கள் x-அச்சுக்குச் செங்குத்தாக உள்ளன. ஆனால் அவற்றின் உயரம் $y_1 - y_2$-ம் அகலம் $\triangle x$-ம், x-அச்சு மேலுங்கீழும் இணையாக நகருவதால் மாறா. ஆகையால் x-அச்சு வளைவரையை வெட்டினாலுங்கூட மேற்கண்ட வாய்பாடு I முழுப் பரப்பைக் கொடுக்கும்.

எ. கா. 1.

$y = x^2$ என்ற பரவளைவிற்கும் $2x - y + 3 = 0$ என்ற கோட்டிற்குமிடைப்பட்ட பரப்பைக் காண்க.

$y = x^2$, $2x - y + 3 = 0$ என்ற சமன்பாடுகளிலிருந்து
$2x - x^2 + 3 = 0$, $x^2 - 2x - 3 = 0$, $(x - 3)(x + 1) = 0$

$\therefore$ $x = 3$ அல்லது -1



படம் 21

அடைப்பட்ட பரப்பு, $A = \int_a^b (y_1 - y_2)\, dx$

இங்கு எல்லைகள் $a = -1$, $b = 3$

$$MP_1 = y_1 : \quad MP_2 = y_2$$

$y_1 = 2x + 3$, $y_2 = x^2$

$$\therefore \quad A = \int_{-1}^{3} [(2x + 3) - x^2]\, dx = \left[x^2 + 3x - \frac{x^3}{3} \right]_{-1}^{3}$$

$$= [(9 + 9 - \tfrac{27}{3}) - (1 - 3 + \tfrac{1}{3})]$$

$$= 9 + 1\tfrac{2}{3} = 10\tfrac{2}{3}$$

எ. கா. **2.**
$3x^2 - 10xy + 10y^2 + 8x - 20y + 10 = 0$ என்ற வளை வரையின் பரப்பளவைக் கணக்கிடுக.

x-ன் எம் மதிப்பிற்கும் y-ன் இரு மதிப்புகளைக் காணக் கொடுக்கப்பட்ட சமன்பாட்டை y-ல் இருபடியாகக் கொண்டு மூலங் காண்போம்.

$$10y^2 - 10y(x+2) + (3x^2 + 8x + 10) = 0$$

y_1, y_2 என்பன மூலங்களானல்

$$y_1 + y_2 = \frac{10(x+2)}{10} = (x+2)\,;\; y_1 y_2 = \frac{3x^2+8x+10}{10}$$

$$(y_1 - y_2)^2 = (y_1 + y_2)^2 - 4y_1 y_2$$

$$= (x+2)^2 - \tfrac{4}{10}(3x^2 + 8x + 10)$$

$$= \tfrac{1}{5}[5(x^2 + 4x + 4) - 2(3x^2 + 8x + 10)$$

$$= \tfrac{1}{5}[-x^2 + 4x] = \tfrac{1}{5}x(4-x)$$

$$(y_1 - y_2) = \frac{1}{\sqrt{5}}\sqrt{x(4-x)}$$

$y_1 = y_2$ என்றபொழுது $\frac{1}{\sqrt{5}}\sqrt{x(4-x)} = 0$

$\therefore \quad x = 0$ அல்லது **4**

$$\therefore \text{ பரப்பளவு} = \int_a^b (y_2 - y_1)\,dx$$

$$= \int_0^4 \frac{1}{\sqrt{5}}\sqrt{x(4-x)} \cdot dx$$

இங்கு $x = 4\sin^2\theta$ என ஈடுசெய்தால்

$$dx = 8\sin\theta \cdot \cos\theta \cdot d\theta$$

$x = 0$ எனில் $\theta = 0$; $x = 4$ எனில் $y = \frac{\pi}{}$

$$\therefore \quad \text{பரப்பளவு} = \frac{1}{\sqrt{5}}\int_0^{\frac{\pi}{2}} 2\sin\theta \cdot 2\cos\theta \cdot 8\sin\theta \cdot \cos\theta \cdot d\theta$$

$$= \frac{32}{\sqrt{5}}\int_0^{\frac{\pi}{2}} \sin^2\theta \cdot \cos^2\theta \cdot d\theta$$

$$= \frac{32}{\sqrt{5}} \cdot \frac{1 \cdot 1}{4 \cdot 2} \cdot \frac{\pi}{2} = \frac{2}{5}\sqrt{5} \cdot \pi$$


எ. கா. 3.

$y^2 = 4ax$, $x^2 = 4by$ என்ற பரவளைவுகளுக்குப் பொதுவான பரப்பளவைக் கணக்கிடுக.

$$y^2 = 4ax$$

$$x^2 = 4by$$

இவற்றிலிருந்து x-ஐக் காண,



படம் 22

$$x^2 = 4by, \quad x^4 = 16b^2y^2$$

$$= 16b^2(4ax)$$

$$\therefore \quad x^4 = 64ab^2x$$

$$x^3 = 64ab^2 \qquad \therefore \quad x = 4a^{\frac{1}{3}}b^{\frac{2}{3}}$$

$\therefore$ x-ன் எல்லைகள் $0, 4a^{\frac{1}{3}}b^{\frac{2}{3}}$;

$$y_1 = MP_1 = \sqrt{4ax}\ , \ y_2 = MP_2 = \frac{x^2}{4b}$$

$$A = \int_0^{4a^{\frac{1}{3}}b^{\frac{2}{3}}} (y_1 - y_2)\, dx$$

$$= \int_0^{4a^{\frac{1}{3}}b^{\frac{2}{3}}} \left(\sqrt{4ax} - \frac{x^2}{4b} \right) dx$$

$$= \left[2\sqrt{a} \cdot \tfrac{2}{3} x^{\frac{3}{2}} - \frac{1}{4b} \cdot \frac{x^3}{3} \right]_0^{4a^{\frac{1}{3}}b^{\frac{2}{3}}}$$

$$= \frac{4\sqrt{a}}{3} \left(4a^{\frac{1}{3}} \cdot b^{\frac{2}{3}} \right)^{\frac{3}{2}} - \frac{1}{12b} \cdot \left(4a^{\frac{1}{3}} \cdot b^{\frac{2}{3}} \right)^3$$

$$= \frac{32}{3} ab - \frac{1}{12b} \cdot 64ab^2 = \frac{32}{3} ab - \frac{16}{3} ab$$

$$= \frac{16}{3} ab$$

பயிற்சிகள் 31

1. கொடுத்துள்ள எல்லைகட்குள் பரப்பளவு காண்க.

(i) $y = \sin x, \quad y = \cos x,$ y — அச்சு

(ii) வளைவரைகள் $y = x^3, \quad y^2 = 9x$

(iii) $(y-1)^2 = 4x, \ x^2 = 4(y-1)$

(iv) $y = 3x - x^2, \quad y = x^2 - x$

2. $y^2 = 4a(x+a), \ y^2 = 4b(b-x)$ என்ற பரவளைவுகளுக்கிடைப்பட்ட பரப்பளவு

$\frac{8}{3}(a+b)\sqrt{ab}$ என நிறுவுக.

3. $x^2 + y^2 = 25$ என்ற வட்டத்திற்கும் $3x^2 = 16y$ என்ற பரவளைவிற்கும் பொதுவான பரப்பளவைக் காண்க.

4. $y^2 = 4ax$-க்கும் $x^2 + y^2 = 8ax$-க்கும் பொதுவான பரப்பளவைக் கணக்டுக.

5. $y^2 (a + x) = x^2 (3a - x)$ என்ற வளைவரையின் வளையமும், வளைவரைக்கும் அதன் அணுகு கோட்டிற்கும் (asymptote) இடையிலுள்ள பகுதியும் $3\sqrt{3}\, a^2$ என நிறுவுக.

6. $y = \dfrac{x}{1 + x^2}$-க்கும் $4y = x$-க்கும் பொதுவான பரப்பு யாது ?

7. $x^2 + 4y^2 - 6x + 8y + 9 = 0$ என்ற நீள் வட்டத்தின் பரப்பளவு என்ன ?


8. $5x^2 + 6xy + 2y^2 + 7x + 6y + 6 = 0$ என்ற வளைவரையின் பரப்பளவு யாது ?

§ 34. துருவ ஆயத் தொலைகளில் (Polar Co-ordinates) பரப்பளவு

P, Q என்பன வில் AB-ன் மேலுள்ள அண்மைப் புள்ளிகள். அவற்றின் துருவ ஆய எண்கள் முறையே,

$(r, \theta), (r + \triangle r, \theta + \triangle \theta)$

O-ஐ மையமாகக் கொண்டு $r, r + \triangle r$ ஆரைகளாக வரைந்த வட்டங்கள் OQ, OP-யை முறையே M, N என்ற புள்ளிகளில் வெட்டினால்,



படம் 23.

CPQ-ன் பரப்பு, CPM, OQN என்ற வட்டப் பகுதிகளின் பரப்பளவுகளுக்கு இடைப்பட்டதாகும். $\dfrac{dr}{d\theta}$-ன் குறி A, B புள்ளி

களுக்கிடையில் மாறுவதில்லையென்றால், நுண்பரப்புகள் OPQ-வின் கூட்டுத் தொகை $\Sigma \frac{1}{2} r^2 \triangle \theta$, $\Sigma \frac{1}{2} (r + \triangle r)^2 \cdot \triangle\theta$ இவற்றிற்கு இடைப்பட்டதாகும்.

$\triangle \theta \to 0$ ஆகும் போது $\triangle r \to 0$

$\Sigma \frac{1}{2} r^2 \triangle\theta$, $\Sigma \frac{1}{2} (r + \triangle r)^2 \cdot \triangle\theta$, இவை ஒரே எல்லையை நாடும்.

$$\therefore \Sigma \underset{\triangle \theta \to 0}{\text{எல்லை}} \text{ பரப்பு } OPQ = \underset{\triangle \theta \to 0}{\text{எல்லை}} \Sigma \tfrac{1}{2} r^2 \triangle\theta$$

எனவாகும்.

$$\therefore \text{ பரப்பு } OAB = \int_{\alpha}^{\beta} \tfrac{1}{2} r^2 \cdot d\theta \qquad \text{(i)}$$

இங்கு α, β என்பவை A, B புள்ளிகளின் ஆரைக் (vectorial) கோணங்கள்.


$\therefore$ ஆரைகள் OA, OB, வில் AB இவற்றால் அடைபட்டது (i)ல் கண்ட பரப்பு OAB.

குறிப்பு : $\frac{dr}{d\theta}$ ஒரே (குறை அல்லது மிகை) குறியுள்ள சிறிய பகுதிகளாக, வில் AB-ஐப் பிரித்தால் வாய்பாடு (i) ஒவ்வொன்றுக்கும் ஏற்றதாகுமாதலால் அது முழுவில்லுக்கும் ஏற்றதாகும்.

எ. கா. 1.

நெஞ்சுவளை (cardioid), $r = a(1 + \cos\theta)$-ன் பரப்பளவைக் காண்க.

$a(1 + \cos\theta)$ ஒரு இரட்டைச் சார்பானதால் தொடக்கக் கோடு OX-ஐ ஒட்டிச் சீரானது.



படம் 24.

∴ பரப்பளவு

$$= 2 \int_0^{\pi} \tfrac{1}{2} r^2 \cdot d\theta.$$

$$= \int_0^{\pi} a^2 (1 + \cos\theta)^2 \cdot d\ .$$


$$= a^2 \cdot \int_0^{\pi} 4 \cos^4 \frac{\theta}{2}\, d\left(\frac{\theta}{2}\right) \times 2.$$

$$= 8a^2 \int_0^{\frac{\pi}{2}} \cos^4 \phi\, d\phi,\ \phi = \frac{\theta}{2}$$

$$= 8a^2 \left[\frac{3}{4} \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2}\right] = \frac{3}{2} \pi a^2$$

எ. கா. 2.

வளைவரை $r = a \cdot e^{\theta \cdot \cot\alpha}$, r_1, r_2 என்ற ஆரைத் தொலைகள் இவற்றால் அடைபட்ட பரப்பளவைக் காண்க.



படம் 25

$$\text{பரப்பு} = \int_{\theta_1}^{\theta_2} \tfrac{1}{2} r^2\, d\theta$$

$$= \int_{\theta_1}^{\theta_2} \tfrac{1}{2}\, a^2 \cdot e^{2\theta \cot\alpha} \cdot d\theta$$

$$= \frac{a^2}{2}\left[\frac{e^{2\theta \cdot \cot\alpha}}{2\cot\alpha}\right]_{\theta_1}^{\theta_2}$$


$$= \frac{a^2}{4\cot\alpha}\left[e^{2\theta_2 \cot\alpha} - e^{2\theta_1 \cot\alpha}\right]$$

$$= \frac{1}{4}\tan\alpha\left[\left(a \cdot e^{\theta_2 \cot\alpha}\right)^2 - \left(a\, e^{\theta_1 \cot\alpha}\right)^2\right]$$

$$= \frac{\tan}{4}(r_2{}^2 - r_1{}^2)$$

எ. கா. 3.

$r = a \sin 3\theta$ என்ற வளைவரையின் ஒரு வளையத்தின் பரப்பளவைக் காண்க.



படம் 26

$\theta = 0, \frac{\pi}{3}, \frac{2\pi}{3}, \pi, \frac{4\pi}{3}, \frac{5\pi}{3}$ என்ற மதிப்புகளுக்கு $r = 0$

$$\text{பரப்பு} = \int_0^{\frac{\pi}{3}} \tfrac{1}{2} r^2 \cdot d\theta.$$

$$=\frac{1}{2}\int_0^{\frac{\pi}{3}} a^2 \sin^2 3\theta \cdot d\theta$$

$$= \frac{a^2}{2}\int_0^{\frac{\pi}{3}} \frac{1-\cos 6\theta}{2} d\theta$$

$$\text{பரப்பு} = \frac{a^2}{4}\left[\theta - \frac{\sin 6\theta}{6}\right]_0^{\frac{\pi}{3}}$$

$$\frac{a^2}{4}\left[\frac{\pi}{3} - \frac{1}{6}\sin 2\pi\right] = \frac{\pi a^2}{12}$$

பயிற்சிகள் 32

1. $r = 2a\cos\theta$ என்ற வட்டத்தின் பரப்பு யாது ?

2. $r = 4(1+\cos\theta)$ என்ற நெஞ்சு வளைவின் பரப்பைக் காண்க.

3. $r^2 = a^2\cos^2\theta + b^2\sin^2\theta$ என்ற வளைவரையின் பரப்பைக் கணக்கிடுக.

4. $r = a\sin 2\theta$-ன் ஒரு வளையத்தின் பரப்பைக் காண்க.

5. $r^2 = a^2\cos 2\theta$-ன் ஒரு வளையத்தின் பரப்பு யாது ?

6. $r\theta = c$ என்ற வளைவரைக்கும் இரு ஆரைத் தொலைகளுக்கு மிடைப்பட்ட பரப்பு அவ்விரு திசை ஆரங்களின் வேறுபாட்டிற்கு நேர் விகிதத்தி லமையுமென நிறுவுக.

7. $r = 2 + 4\cos\theta$ என்ற வளைவரை ஒன்றினுள் ஒன்றுகவுள்ள இரு வளையங்களென்றும், பெரிய வளையத்தின் பரப்பு $8\pi + 6\sqrt{3}$ எனவும் நிறுவுக.

8. $r = a(1+\cos\theta)$ என்ற வளைவரையின் பரப்பை முனை வழியாக தொடக்கக் கோட்டுக்குச் செங்குத்தாக வரைந்த நேர்கோடு இருபகுதிகளாக்கினுல் ஒவ்வொன்றின் பரப்பையும் கணக்கிடுக.

10. வரையறுத்த தொகைகளின் பண்பாடுகள்

§ 35. (Properties of Definite Integrals)

$$\text{(i)}\quad \int_a^b f(x)\,dx = \int_a^b f(y)\,dy$$

ஏனெனில் $\int f(x)\,dx = F(x) + C$ எனக் கொண்டால்

$$\int_a^b f(x)\,dx = F(b) - F(a) = \int_a^b f(y)\,dy$$

∴ மாறிகள் மாறுவதால் வரைகளுக்குட்பட்ட தொகையின் மதிப்பு மாறாதென அறியலாம்.

$$\text{(ii)}\quad \int_a^b f(x)dx = -\int_b^a f(x)\,dx$$

ஏனெனில் $\int_a^b f(x)\,dx = F(b) - F(a)$

$F(x)$ தொகையீடு

$$= -[F(a) - F(b)]$$

$$= -\int_b^a f(x)\,dx$$

வரைகளை ஒன்றுக்கு மற்றதாக மாற்றுவதால் தொகையின் குறியீடு மாறுகின்றதென அறியலாம்.

$$\text{(iii)}\quad \int_a^b f(x)\cdot dx = \int_a^c f(x)\,dx + \int_c^b f(x)\,dx$$

$$a<c<b$$

ஏனெனில், வலதுபக்கம்

$$\int_a^c f(x)\,dx + \int_c^b f(x)\,.\,dx$$

$$= [F(c) - F(a)] + [F(b) - F(c)]$$

$$= F(b) - F(a) = \int_a^b F(x)\,dx$$

= இடது பக்கம்.

(iv) $f(x)$ இரட்டைச் சார்பாயின்

$$f(-x) = f(x)$$

எ. கா.

$$x^2,\ x^{2n}\ \frac{\ }{a^2+x^2},\ a\,x^4 + bx^2 + c,\ \cos x,\ \cos^n x\ \sin^{2n} x.$$

(v) $f(x)$ ஒற்றைச் சார்பாயின் $f(-x) = -f(x)$

எ. கா.

$$x,\ x^3,\ x^{2n+1},\ \frac{x^3}{a^2+x^2},\ ax^3 + bx,\ \sin x,\ \cos^2 x\,.\,\sin^{2n+1} x\,.$$

(vi) பண்பு

$$\int_{-a}^{+a} f(x)\,dx = \int_0^a [\,f(x) + f(-x)\,]\,dx$$

ஏனெனில் $\int_{-a}^{0} f(x)\,dx$-ல் $x = -y$ என்றிட $dx = -dy$

$$\int_{-a}^{0} f(x)\,dx = -\int_a^0 f(-y)\,dy = \int_0^a f(-y)\,dy$$

$$= \int_0^a f(-x)\,dx.$$

$$\therefore \int_{-a}^{+a} f(x)\,dx = \int_{-a}^{0} f(x)\,dx + \int_0^a f(x)\,dx$$

$$= \int_0^a f(-x)\,dx + \int_0^a f(x)\,dx$$

$$= \int_0^a [f(x) + f(-x)]\,dx.$$

(vii) $\int_0^a f(x)\,dx = \int_0^a f(a-x)\,dx$

ஏனெனில், $\int_0^a f(a-x)\,dx$-ல் $a - x = y$ என்றிட,

$$-dx = dy$$

மேல் எல்லை $x = a$ எனில் $y = 0$

கீழ் எல்லை $x = 0$ எனில் $y = a$

$$\therefore \int_0^a f(a-x)\,dx = -\int_a^0 f(y)\,dy$$

$$= \int_0^a f(y)\,dy = \int_a^0 f(x)\,dx$$

(viii) பொதுவாக

$$\int_a^b f(x)\,dx = -\int_a^b f(b+a-x)\,dx$$

ஏனெனில், வலது பக்கம் $(a + b - x) = y$ எனில்

$$-dx = dy$$

மேல் எல்லை $x = b$ எனில் $y = a$

கீழ் எல்லை $x = a$ எனில் $y = b$

$$\therefore \int_a^b f(a + b - x)\, dx$$

$$= -\int_b^a f(y)\, dy$$

$$= \int_a^b f(y)\, dy$$

$$= \int_a^b f(x)\, dx$$

எ. கா. 1.

$$\int_0^{\frac{\pi}{2}} f(\sin x)\, dx = \int_0^{\frac{\pi}{2}} f\left(\sin \frac{\pi}{2} - x\right) dx$$

$$= \int_0^{\frac{\pi}{2}} f(\cos x)\, dx$$

(ix) $f(a - x) = f(x)$ என்றால்,

$$\int_0^a f(x)\, dx = 2 \int_0^{\frac{a}{2}} f(x)\, dx$$

ஏனெனில் $$\int_0^a f(x)\, dx = \int_0^{\frac{a}{2}} f(x)\, dx + \int_{\frac{a}{2}}^a f(x)\, dx$$

$\int_{\frac{a}{2}}^{a} f(x)\, dx$-ல் $x = a - y$ என்றிட $dx = -dy$

மேல் எல்லை $x = a$ எனில் $y = 0$

கீழ் எல்லை $x = \frac{a}{2}$ எனில் $y = \frac{a}{2}$

$$\therefore \int_{\frac{a}{2}}^{a} f(x) \cdot dx = -\int_{\frac{a}{2}}^{0} f(a-y) \cdot dy$$

$$= \int_{0}^{\frac{a}{2}} f(a-y)\, dy$$

$$= \int_{0}^{\frac{a}{2}} f(a-x)\, dx = \int_{0}^{\frac{a}{2}} f(x)\, dx,$$

$$\because \ f(a-x) = f(x)$$

$$\therefore \int_{0}^{a} f(x)\, dx = \int_{0}^{\frac{a}{2}} f(x)\, dx + \int_{0}^{\frac{a}{2}} f(x)\, dx$$

$$= 2\int_{0}^{\frac{a}{2}} f(x)\, dx$$

(x) $f(a-x) = -f(x)$ எனில், $\int_{0}^{a} f(x)\, dx = 0$

ஏனெனில், $\int_0^a f(x)\,dx = \int_0^a f(a-x)\,dx$ .... (ix)-ல் காட்டியது

$$= -\int_0^a f(x)\,dx \quad \because f(a-x) = -f(x)$$

$$\therefore \quad 2\int_0^a f(x)\,dx = 0 \text{ அல்லது}$$

$$\int_0^a f(x)\,dx = 0$$

எ. கா. 2.

$$\sin(\pi - x) = \sin x.$$

$$\therefore \quad \int_0^\pi f(\sin x)\,dx = 2\int_0^{\frac{\pi}{2}} f(\sin x)\,dx$$

எ. கா. 3.

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^2 x\,dx = \int_0^{\frac{\pi}{2}} \cos^2 x\,dx = \frac{\pi}{4} \text{ என நிறுவுக.}$$

$$I = \int_0^{\frac{\pi}{2}} \sin^2 x \cdot dx = \int_0^{\frac{\pi}{2}} \sin\left(\frac{\pi}{2} - x\right) dx$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \cos^2 x \cdot dx$$

$$\therefore\ 2I = \int_0^{\frac{\pi}{2}} \sin^2 x\, dx + \int_0^{\frac{\pi}{2}} \cos^2 x \cdot dx.$$

$$= \int_0^{\frac{\pi}{2}} (\sin^2 x + \cos^2 x)\, dx$$

$$= \int_0^{\frac{\pi}{2}} dx = (x)_0^{\frac{\pi}{2}} = \frac{\pi}{2}$$

$$\therefore\ I = \frac{\pi}{4}$$

எ. கா. 4.

$$\int_0^{\frac{\pi}{2}} \frac{(\sin x)^{\frac{3}{2}}\, dx}{(\sin x)^{\frac{3}{2}} + (\cos x)^{\frac{3}{2}}} = \frac{\pi}{4}$$ என நிறுவுக.

$$I = \int_0^{\frac{\pi}{2}} \frac{(\sin x)^{\frac{3}{2}} \cdot dx}{(\sin x)^{\frac{3}{2}} + (\cos x)^{\frac{3}{2}}}$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \frac{\left(\sin \overline{\frac{\pi}{2} - x}\right)^{\frac{3}{2}} dx}{\left(\sin \overline{\frac{\pi}{2} - x}\right)^{\frac{3}{2}} + \left(\cos \overline{\frac{\pi}{2} - x}\right)^{\frac{3}{2}}}$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \frac{(\cos x)^{\frac{3}{2}}\, dx}{(\cos x)^{\frac{3}{2}} + (\sin x)^{\frac{3}{2}}}$$

$$\therefore\ 2I = \int_0^{\frac{\pi}{2}} \frac{\left[(\sin x)^{\frac{3}{2}} + (\cos x)^{\frac{3}{2}}\right]}{(\cos x)^{\frac{3}{2}} + (\sin x)^{\frac{3}{2}}}$$

$$= \int_0^{\frac{\pi}{2}} dx = (x)_0^{\frac{\pi}{2}} = \frac{\pi}{2}$$

$$\therefore\quad I = \frac{\pi}{4}$$

எ. கா. 5.

மதிப்பிடுக : $\displaystyle\int_0^{\pi} \frac{x \sin x}{1 + \cos^2 x}\, dx$

$$I = \int_0^{\pi} \frac{x \sin x}{1 + \cos^2 x}\, dx = \int_0^{\pi} \frac{(\pi - x) \sin \overline{\pi - x}}{1 + \cos^2 \overline{\pi - x}}\, dx$$

$$= \int_0^{\pi} \frac{(\pi - x) \sin x}{1 + \cos^2 x}\, dx$$

$$= \pi \int_0^{\pi} \frac{\sin x}{1 + \cos^2 x} - \int_0^{\pi} \frac{(x \sin x)}{1 + \cos^2 x}\, dx$$

$$\therefore \quad 2I = \pi \int_0^{\pi} \frac{d(-\cos x)}{1+\cos^2 x}$$

$$= -\pi \int_0^{\pi} \frac{d(\cos x)}{1+\cos^2 x}$$

$\cos x = u$ எனப் பிரதியிட

$x = 0$ எனில் $u = 1$

$x = \pi$ எனில் $u = -1$

$$2 \; I = -\pi \int_{+1}^{-1} \frac{du}{1+u^2} = \pi \int_{-1}^{1} \frac{du}{1+u^2}$$

$$= 2\pi \int_0^1 \frac{du}{1+u^2}, \quad 1+u^2 \text{ ஓர் இரட்டைச் சார்பு}$$

$$= 2\pi \left(\tan^{-1} u\right)_0^1 = 2\pi \cdot \frac{\pi}{4} = \frac{\pi^2}{2}$$

$$\therefore \; I = \frac{\pi^2}{4}$$

எ. கா. 6.

மதிப்பிடுக : $\displaystyle\int_0^1 \frac{\log(1+x)}{(1+x^2)}\, dx$

$x = \tan\theta$ என ஈடு செய்ய

$dx = \sec^2\theta \cdot d\theta \qquad x = 1$ எனில் $\theta = \frac{\pi}{4}$

$x = 1$ எனில் $\theta = 0$

$$\therefore \quad I = \int_0^{\frac{\pi}{4}} \frac{\log(1+\tan\theta)}{\sec^2\theta} \cdot \sec^2\theta \cdot d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{4}} \log(1+\tan\theta)\ d$$

$$= \int_0^{\frac{\pi}{4}} \log\left(1 + \tan\overline{\frac{\pi}{4} - \theta}\right) d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{4}} \log\left(1 + \frac{1-\tan\theta}{1+\tan\theta}\right) d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{4}} \log\left(\frac{1+\tan\theta+1-\tan\theta}{1+\tan\theta}\right) d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{4}} \log \frac{2}{1+\tan\theta}\ d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{4}} (\log 2)\ d\theta - \int_0^{\frac{\pi}{4}} \log(1+\tan\theta)\ d\theta$$

$$\therefore \quad 2I = \int_0^{\frac{\pi}{4}} (\log 2)\ d\theta = [\theta]_0^{\frac{\pi}{4}} \log 2 = \frac{\pi}{4} \log 2$$

$$\therefore \quad I = \frac{\pi}{8} \log 2.$$

எ. கா. 7.

$$\int_a^b f(x)\,dx = \int_a^b f(a+b-x)$$

என்ற வாய்பாட்டிலிருந்து

$$\int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} x \cdot \sin^{-2} x \cdot dx\text{-ன் மதிப்பைக் கணக்கிடுக.}$$

இங்கு $a = \dfrac{\pi}{n}$, $b = (n-1)\dfrac{\pi}{n}$

$$(a+b-x) = \frac{\pi}{n} + (n-1)\frac{\pi}{n} - x = \pi - x$$

$$\mathrm{I} = \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} (\pi - x)\sin^{8}(\pi - x)\,dx$$

$$= \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} \pi \cdot \sin^{3} x \cdot dx - \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} x \cdot \sin^{8} x \cdot dx$$

$$\therefore \quad 2\mathrm{I} = \pi \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} \frac{(3\sin x - \sin 3x)}{4}\,dx$$

$$= \frac{3}{4}\pi \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} \sin x \cdot dx - \frac{\pi}{4} \int_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} \sin 3x \, dx$$

$$= \frac{3\pi}{4}\Big(-\cos x\Big)_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}} - \frac{\pi}{4}\Big(-\frac{\cos 3x}{3}\Big)_{\frac{\pi}{n}}^{(n-1)\frac{\pi}{n}}$$

$$= \frac{-3\pi}{4}\Big[\cos \overline{n-1}\,\frac{\pi}{n} - \cos\frac{\pi}{n}\Big]$$

$$+ \frac{\pi}{12}\Big[\cos 3\,(n-1)\frac{\pi}{n} - \cos\frac{3\pi}{n}\Big]$$

$$= \frac{3\pi}{4} \quad 2\sin\frac{\pi}{2} \cdot \sin\Big(\frac{\pi}{2} - \frac{\pi}{n}\Big)$$

$$- \frac{\pi}{12} \cdot 2\sin\frac{3\pi}{2} \cdot \sin\Big(\frac{3\pi}{2} - \frac{3\pi}{n}\Big)$$

$$= \frac{3}{2}\pi \cdot 1 \cdot \cos\frac{\pi}{n} + \frac{}{6}\sin\Big(\pi + \frac{\pi}{2} - \frac{3\pi}{n}\Big)$$

$$= \frac{3\pi}{2}\cos\frac{\pi}{n} - \frac{\pi}{6}\cos\frac{3\pi}{n}$$

எ. கா. 8.

மதிப்பிடுக. $\int_0^1 x^2 (1-x)^{16}\, dx$

$$\int_0^1 x^2 (1-x)^{16} dx = \int_0^1 (1-x)^2 (1-1+x)^{16} dx$$

$$= \int_0^1 (1 - 2x + x^2)\, x^{16} \cdot dx$$

$$= \int_0^1 (x^{16} - 2x^{17} + x^{18})\, dx$$

$$= \left(\frac{x^{17}}{17}\right)_0^1 - 2\left(\frac{x^{18}}{18}\right)_0^1 + \left(\frac{x^{19}}{19}\right)_0^1$$

$$= \tfrac{1}{17} - \tfrac{2}{18} + \tfrac{1}{19}.$$

பயிற்சிகள் 33

1. $\int_a^b x f(x^2)\, dx = \frac{1}{2} \int_{a^2}^{b^2} f(x)\, dx$ • எனக்காட்டுக.

மதிப்பிடுக :—

2. $\int_0^{\frac{\pi}{2}} \frac{f(\sin x)}{f(\sin x) + f(\cos x)}\, dx$

3. $\int_0^{\frac{\pi}{2}} \log \tan x\, dx.$

4. $\int_0^{\pi} \frac{x \tan x}{\sec x + \cos x}\, dx$

5. $\int_0^{\frac{\pi}{4}} \log(1 + \tan \theta)\, d\theta$

6. $\int_0^{\pi} \log(1 + \cos x)\, dx$

7. $\int_0^{\pi} \frac{x}{1 + \sin x}\, dx$

8. $\int_0^{\frac{\pi}{2}} \frac{\sin^2 x \cdot dx}{\sin x + \cos x}$

9. $\int_0^{\frac{\pi}{2}} \log \sin x \, dx$

$[\int_0^{\frac{\pi}{2}} \log \sin 2x \, dx = \frac{1}{2} \int_0^{\pi} \log \sin x \, dx = \int_0^{\frac{\pi}{2}} \sin x \, dx]$

10. $\int_0^2 x \sqrt{2 - x} \cdot dx.$

11. $\int_a^b f(x) \, dx = \int_0^{b-a} f(x + a) \, dx$ என நிறுவுக.

12. $\int_a^b f(mx) \, dx = \frac{1}{m} \int_{ma}^{mb} f(x) \, dx$ என நிறுவுக.

13. $\int_0^1 x^n (1 - x)^m dx = \int_0^1 x^m (1 - x)^n dx$ என நிறுவி

$\int_0^1 x (1 - x)^m dx$-ன் மதிப்பைக் காண்க.

14. $f(2a - x) = -f(x)$ அல்லது $+f(x)$ என முறையே இருக்கும் போது

$\int_0^{2a} f(x) \, dx = 0$ அல்லது $2 \int_0^a f(x) \, dx$ எனக் காட்டுக.

15. $\int_0^{\infty} x^n \cdot e^{-x} dx = n \int_0^{\infty} x^{n-1} \cdot e^{-x} \, dx$ என நிறுவி மதிப்பிடுக.

16. $\int_0^{\frac{\pi}{2}} x \left(\frac{\pi}{2} - x \right) \cos^2 x dx$ — மதிப்பிடுக.

17. $\int_0^2 x(Kx - 1)\,dx = \int_0^{\frac{\pi}{2}} 2x \cdot \cos x \cdot dx$ என்றால்

K-ன் மதிப்பென்ன ?

(xiii) $\int_a^b f(x)\,dx$-ஐ ஒரு முடிவிலாத தொடரின் கூடுதலாகக் கருதுங்கால், $f(x)$-ன் மீப்பெரு மதிப்பு G என்றும், மீச்சிறு மதிப்பு ட என்றும் இருந்தால், தொகையின் மதிப்பு ட $(b - a)$-ஐ விட அதிகமாயும் $G(b - a)$-ஐ விடக் குறைவாகவுமிருக்கும்.

$$ட\,(b - a) < \int_a^b f(x)\,dx < G\,(b - a).$$

இந்த உண்மை அடுத்து வரும் வடிவ கணித விளக்கத்திலிருந்து மேலும் தெளிவாகும்.

எ. கா.

$\int_{\frac{1}{2}}^{1} \sqrt{10 + x^3}\,dx$ ஆனது $1 \cdot 59$, $1 \cdot 62$ மதிப்புகளுக்கு இடைப்பட்டது எனக் காண்க.

$x = \frac{1}{2}$ என்றிட $\sqrt{10 + x^3} = \sqrt{10 + \frac{1}{8}} = \sqrt{\frac{81}{8}}$

$$= \frac{9}{\sqrt{8}}.$$

$x = 1$ என்றிட $\sqrt{10 + x^3} = \sqrt{11}$

$\therefore$ தொகையின் மதிப்பு $\frac{9}{\sqrt{8}}\left(1 - \frac{1}{2}\right) = 1 \cdot 59$ -ஐவிட அதிகம்.

$\sqrt{11}\,(1 - \frac{1}{2}) = 1 \cdot 62$-ஐ விடக் குறைவு.

பயிற்சிகள் 34.

கீழ்க்காணும் தொகைகளின் எல்லைகளை மதிப்பிடுக.

1. $\displaystyle\int_0^{\frac{\pi}{4}} (4 - \cos^2 x)\,\frac{1}{3}\,dx.$


2. $\displaystyle\int_0^{\frac{\pi}{2}} \frac{d\theta}{\sqrt{1 - \frac{1}{8}\sin^2\theta}}$

3. $\displaystyle\int_0^1 \frac{2 + x^n}{1 + x^n}\,dx.$

11. உருளைப் பருமம் (Volume of Revolution)

§ 36. ஒரு வளைவரை ஏதாவதொரு கோட்டையொட்டிச் சுற்றும்போதுண்டாகும் முப்பரிமாணப் பொருளை உருளைப் பருமம் (Volume of Revolution) என்று கூறுகிறோம்.

ப. 26-ல் பரப்பு $APQB$ x அச்சையொட்டிச் சுற்றும்போது, அங்கு காட்டப்பட்ட ஒவ்வொரு நீள் சதுரமும் ஒரு நேர்வட்ட உருளையையுண்டாக்கும். $Pr \times r+1$ என்ற நீள்வட்டம் xr Pr ஆரையும், $xr \times r+1$ உயரமுள்ள ஒரு நேர்வட்ட உருளையை யுண்டாக்கும். உள் நீள் சதுரங்களின் கூட்டுத்தொகையும்,



படம் 26

வெளிநீள் சதுரங்களின் கூட்டுத் தொகையும் பொதுவாக ஒரே எல்லையான $APQB$-யின் பரப்பை நாடுவது போல, இங்கு உள் நீள் சதுரங்கள் சுற்றவுண்டாகும் நேர்வட்ட உருளைப் பருமங்களின் கூட்டுத் தொகையும், பொதுவாக, ஒரே எல்லையை நாடும் இவ்வெல்லை மதிப்பை பரப்பு $APQB$ சுற்றுவதாலுண்டாகும் உருளைப் பருமமென்கிறோம்.

இங்கு படத்தில் $BHKC$ என்ற பரப்பு x-அச்சையொட்டிச் சுற்றும்போதுண்டாகும் உருளைப் பருமம்

$=$ எல்லை Σ நீள்சதுரம் PN செய்யும் நேர்வட்ட உருளை

$=$ எல்லை $\Sigma\ (\pi MP^2 \cdot MN)$

$=$ எல்லை $\Sigma\ (\pi y^2 \cdot \triangle x)$


$= \int_a^b \pi y^2\, dx$, a, b எல்லைகள்.

இதுபோலவே $BFQC$ என்ற பரப்பு y-அச்சையொட்டிச் சுற்றுவதாலுண்டாகும் உருளைப் பருமம் $\int_c^d \pi x^2\, dy$ ஆகும். c, d என்பன B-யிலும் C-யிலும் முறையே குத்தாய மதிப்புகள்.

குறிப்பு : x, y அச்சுகளல்லாது அவற்றிற்கிணையான வேறெந்த அச்சையொட்டி வளைவரை சுற்றினாலும் அப்பொழுதுண்டாகும் உருளைப்பருமத்தை மேற்சொன்னவாறு காணலாம்.

எ. கா. 1.

$y^2 = 4ax$ என்ற பரவளைவிற்கும் அதன் செவ்வகலத்திற்கும் (latus rectum) இடைப்பட்ட பரப்பு செவ்வகலத்தை யொட்டிச் சுற்றுவதாலுண்டாகும் உருளைப்பருமத்தைக் காண்க.



படம் 27

உருளைப்பருமம்

$=$ எல்லை Σ (நீள்சதுரம் PN செய்யும் நேர்வட்ட உருளைப் பருமம்)

$$= \text{எல்லை } \Sigma (\pi PM^2 \cdot MN)$$

$$= \text{எல்லை } \Sigma \pi (a - x)^2 \cdot \Delta y$$

$$= \int_{-2a}^{+2a} \pi (a - x)^2 \cdot dy = 2 \int_0^{2a} \pi (a - x)^2 \, dy$$

$$= 2\pi \int_0^{2a} \left(a - \frac{y^2}{4a} \right)^2 \cdot dy$$

$$= 2\pi \left[a^2 y - \frac{y^3}{6} + \frac{y^5}{80a^2} \right]_0^{2a}$$

$$= 2\pi \left[a^2 \cdot 2a - \frac{8a^3}{6} + \frac{32a^5}{80a^2} \right]$$

$$= 2\pi a \left[2 - \tfrac{4}{3} + \tfrac{2}{5} \right] = \tfrac{32}{15} \pi a^3$$

எ. கா. 2.

உருள்வளை $x = a(\theta - \sin\theta)$


$y = a(1 - \cos\theta)$

(*a*) அடிக்கோட்டையொட்டிச் சுற்றும்போது

(*b*) உச்சியில் வரைந்த தொடு கோட்டையொட்டிச் சுற்றும் போது ஏற்படும் உருளைப் பருமத்தைக் காண்க.

(*a*) அடிக்கோட்டையொட்டி :

உருளைப்பருமம்



படம் 28

$$= \int \pi y^2 \cdot dx$$

$$= \int_0^{2\pi} \pi\, a^2 (1 - \cos\theta)^2 \cdot a\,(1 - \cos\theta)\, d\theta.$$

$$= \pi a^3 \int_0^{2\pi} (1 - \cos\theta)^3\, d\theta = \pi a^3 \int_0^{2\pi} \left(2 \sin^2 \frac{\theta}{2}\right)^3 d\theta$$

$$= 8\pi\, a^3 \int_0^{2\pi} \sin^6 \frac{\theta}{2}\, d\left(\frac{\theta}{2}\right) \times 2$$

$$= 16\pi a^3 \int_0^{\pi} \sin^6 \phi\, d\phi. \quad , \phi = \frac{\theta}{2}$$

$$= 16\,\pi a^3 \cdot 2 \int_0^{\frac{\pi}{2}} \sin^6 \phi\, d\phi$$

$$= 32\,\pi a^3 \cdot \frac{5 \cdot 3 \cdot 1}{6 \cdot 4 \cdot 2} \cdot \frac{\pi}{2} = 5\,\pi^2 \cdot a^3$$

(*b*) உச்சித் தொடு கோட்டையொட்டி :

உருளைப்பருமம் = எல்லை $\Sigma\, \pi\, PK^2 \cdot KL$

= எல்லை $\Sigma\, \pi\, (2a - y)^2 \cdot \triangle x$

$$= \int_0^{2\pi} \pi\, [2a - a\,(1 - \cos\theta)]^2.$$

$$a\,(1 - \cos\theta)\, d\theta.$$

$$= \pi \int_0^{2\pi} a^3\, (1 + \cos\theta)^2 \cdot (1 - \cos\theta)\, d\theta.$$

$$= \pi a^3 \int_0^{2\pi} \left(2 \cos^2 \frac{\theta}{2}\right)^2 \cdot \left(2 \sin^2 \frac{\theta}{2}\right)^3\, d\theta$$

$$= 8\pi a^3 \int_0^{2\pi} \cos^4 \frac{\theta}{2} \sin \frac{2\theta}{2}\, d\left(\frac{\theta}{2}\right) \cdot 2$$


$$= 16\,\pi a^3 \cdot 2 \int_0^{\frac{\pi}{2}} \cos^4 \phi \sin^2 \phi\, d\phi \left[\phi = \frac{\theta}{2}\right]$$

$$= 32\,\pi a^3\, \frac{3 \cdot 1 \cdot 1}{6 \cdot 4 \cdot 2} \cdot \frac{\pi}{2}$$

$\pi^2 a^3$.

எ. கா. 3.

ஒரு கால்வட்டம் அதன் ஒரு முனையில் வரைந்த தொடுகோட்டை யொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமத்தைக் காண்க.



படம் 29

வட்டத்தின் சமன்பாடு,
$x^2 + y^2 = a^2$.

உருளைப் பருமம்

$= \text{எல்லை}\ \Sigma\ (\pi\ PN^2 \cdot MN)$

$= \text{எல்லை}\ \Sigma\ \pi\ (a - x)^2 \cdot \triangle y$

$$= \int_0^a \pi\ (a - x)^2 \cdot dy$$

$x = a \cos\theta,\ y = a \sin\theta$ என ஈடு செய்தால்

எல்லை $y = 0$ என $\theta = 0$, $y = a$ என, $\theta = \frac{\pi}{2}$

$$\therefore\ \text{பருமம்} = \int_0^{\frac{\pi}{2}} \pi\ (a - a \cos\theta)^2 \cdot a \cos\theta \cdot d\theta.$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \pi a^3 (1 - \cos\theta)^2 \cdot \cos\theta \cdot d\theta$$

$$= \pi a^3 \int_0^{\frac{\pi}{2}} (1 - 2\cos\theta + \cos^2\theta) \cos\theta \cdot d\theta.$$

$$= \pi a^3 \int_0^{\frac{\pi}{2}} (\cos\theta - 2\cos^2\theta + \cos^3\theta) \, d\theta.$$

$$= \pi a^3 \left[1 - 2 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2} + \frac{2}{3} \cdot 1 \right]$$

$$= \pi a^3 \left[\frac{5}{3} - \frac{\pi}{2} \right] = \frac{\pi}{6} a^3 (10 - 3\pi)$$

எ. கா. 4.

$(a - x)y^2 = a^2 x$-க்கும் அதன் அணுகு கோட்டிற்கும் இடையிலுள்ள பகுதி அணுகுகோட்டை யொட்டிச் சுற்ற வுண்டாகும் பருமத்தைக் காண்க.

$$y^2 = \frac{a^2 x}{a - x} \text{ என்ற வளைவரையில்}$$

$x = 0$ எனில், $y = 0$ $\therefore$ வளைவரை ஆதிவழியே செல்கிறது.

$x = a$ எனில் $y^2 = \infty$; $y = \pm \infty$ $\therefore$ $x = a$. அணுகு கோடு $x < 0$ எனில், $y^2 =$ குறைமதிப்பு. $\therefore$ Y-அச்சுக்கு இடது பக்கமாக வளைவரை செல்லாது.

படத்தில் $OA = a$, புள்ளி $P\ (x, y)$

$\therefore \quad PM = a - x.$

$$\text{பருமம்} = \text{எல்லை } \Sigma\, (\pi\, PM^2 \cdot MN)$$


$$= \text{எல்லை } \Sigma\, \pi\, (a - x)^2 \cdot \triangle y$$

$$= \int_{-\infty}^{+\infty} \pi\, (a - x)^2 \cdot dy$$

$$y^2(a-x) = a^2 x$$

$$a\,y^2 = x(a^2+y^2) \quad \therefore\ x = \frac{ay^2}{a^2+y^2}$$

$$\therefore\ \text{பருமம்} = 2\int_0^\infty \pi\left(a - \frac{ay^2}{a^2+y^2}\right)^2 dy$$



படம் 30

$$= 2\pi\int_0^\infty \frac{a^6}{(a^2+y^2)^2}\,dy$$

$y = a\,\tan\theta$ எனப் பிரதியிட $dy = a\cdot\sec^2\theta\cdot d\theta.$

எல்லை $y = 0$ எனில் $\theta = 0$; $y = \infty$ எனில் $\theta = \frac{\pi}{2}$

$$\therefore\ \text{பருமம்} = 2\pi\int_0^{\frac{\pi}{2}} \frac{a^6\cdot a\sec^2\theta\cdot d\theta}{a^4\cdot\sec^4\theta}$$

$$= 2\pi a^3\int_0^{\frac{\pi}{2}} \cos^2\theta\cdot d\theta = 2\pi a^3\cdot\frac{1}{2}\cdot\frac{\pi}{2}$$

$$= \frac{\pi^2 a^3}{2}$$

எ. கா. 5.

a ஆரையுள்ள ஒரு கோளத்தை, அதன் மையத்திலிருந்து $\frac{a}{2}$ தூரத்தில் ஒரு சமதளம் இரு பகுதிகளாக வெட்டினால், அவற்றின் பருமங்களின் விகிதம் 5 : 27 எனக் காட்டுக.


கோளத்தின் வெட்டு முக வட்டம்

$$x^2 + y^2 = a^2$$

சமதளம் OA ஆரையை B-யில் செங்குத்தாக வெட்டட்டும்.

$OB = \frac{a}{2}$: X-அச்சை யொட்டி பரப்பு $APCB$ சுற்றும் போது ஏற்படும் உருளைப் பருமம் = எல்லை $\Sigma\,(\pi\, MP^2 \cdot MN)$

$$= \text{எல்லை } \Sigma\,(\pi y^2 \cdot \triangle x)$$



படம் 31

$$= \int_{\frac{a}{2}}^{a} \pi\,(a^2 - x^2)\,dx$$

$$= \pi \left(a^2 x - \frac{x^3}{3}\right)_{\frac{a}{2}}^{a}$$

$$= \pi \left[\left(a^3 - \frac{a^3}{3}\right) - \left(\frac{a^3}{2} - \frac{a^3}{24}\right) \right]$$

$$= \pi a^3 \left(\tfrac{2}{3} - \tfrac{11}{24}\right) = \pi a^3 \tfrac{5}{24} = \tfrac{5}{24} \cdot \pi a^3.$$

கோளத்தின் பருமம் $= \frac{4}{3}\pi a^3$.

$\therefore$ மற்ற பகுதியின் பருமம் $= \pi a^3 \left(\frac{4}{3} - \frac{5}{24}\right)$

$$= \pi a^3 \times \frac{27}{24} = \frac{27}{24}\pi a^3.$$

$\therefore$ இரு பருமங்களின் விகிதம்

$$= \frac{5}{24}\pi a^3 : \frac{27}{24}\pi a^3 = 5 : 27.$$

எ. கா. 6.

$4x^2 + 81y^2 = 324$ என்ற நீள்வட்டம் குத்தாயத்தை யொட்டிச் சுற்றும் போதுண்டாகும் பருமத்தைக் காண்க.

நீள்வட்டம் $\frac{x^2}{81} + \frac{y^2}{4} = 1 \quad \therefore \ a = 9, \ b = 2$

y-அச்சைச் சுற்றுவதால்

$$\text{பருமம்} = \int_{-2}^{+2} \pi x^2 \cdot dy = 2\int_0^2 \pi x^2 \cdot dy$$

$x = 9 \cos\theta, \ y = 2 \sin\theta$ எனப்பிரதியிட

$$\text{பருமம்} = 2\int_0^{\frac{\pi}{2}} \pi \cdot 81 \cdot \cos^2\theta \cdot 2\cos\theta \cdot d\theta$$

$$= 324\,\pi \int_0^{\frac{\pi}{2}} \cos^3\theta \cdot d\theta.$$

$$= 324\,\pi \cdot \tfrac{2}{3} \cdot 1 = 216\pi.$$


எ. கா. 7.

$r = a(1 + \cos\theta)$ என்ற நெஞ்சுவளை அதன் அச்சை யொட்டிச் சுழலும் போதுண்டாகும் பருமத்தை மதிப்பிடுக.

$r = a\,(1 + \cos\theta)$ · நெஞ்சுவளையின் கோண தூரச் சமன்பாடு (Polar Equation) $x = r\cos\theta$, $y = r\sin\theta$ என மாற்ற,

$x = a\ (1 + \cos\theta) \cos\theta,\ y = a\ (1 + \cos\theta) \sin\theta.$

$dx = a\ (-\sin\theta - 2\cos\theta \cdot \sin\theta)\ d\theta$



படம் 32

$= -\ a \sin\theta\ (1 + 2\cos\theta)\ d\theta.$

$\theta = 0$ எனில், $x = 2a = OA$

$\theta = \pi$ எனில் $x = 0$

பருமம் $= V = \int_0^{2a} \pi\ y^2 \cdot dx$

$$= -\int_\pi^0 \pi\ a^2\ (1 + \cos\theta)^2 \cdot \sin^2\theta.\ a \sin\theta\ (1 + 2\cos\theta)\ d\theta$$

$$= \pi a^3 \int_0^\pi (1 + 2\cos\theta + \cos^2\theta)\ (1 + 2\cos\theta)\ \sin^3\theta \cdot d\theta.$$

$$= \pi a^3 \int_0^\pi (1 + 4\cos\theta + 5\cos^2\theta + 2\cos^3\theta) \sin^3\theta \cdot d\theta$$

$$= \pi a^3 \int_0^\pi (1 + 5\cos^2\theta) \sin^3\theta \cdot d\theta$$

[$\because$ $0 - \pi$ இடைவெளியில் $\cos\theta^{2n+1}$-ன் தொகை $= 0$]

$$= 2\pi a^3 \left(\frac{2}{3} \cdot 1 + 5 \cdot \frac{1 \cdot 2}{5 \cdot 3} \cdot 1 \right)$$

$$= 2\pi a^3 \left(\tfrac{2}{3} + \tfrac{2}{3}\right) = \tfrac{8}{3} \pi a^3.$$

பயிற்சிகள் 35—A

1. $x = a\cos^3\theta$, $y = a\sin^3\theta$ என்ற வளைவரை x-அச்சை ஒட்டி ஒருமுறை சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமம் காண்க.

2. ஒரு கோளப் பகுதியின் அடிவட்ட ஆரம் c, உயரம் h என்றால் அதன் பருமம் $\frac{\pi h\,(3c^2 + h^2)}{105}$ என நிறுவுக.

3. $y^2\,(a + x) = x^2\,(3a - x)$ என்ற வளைவரையின் வளையம் (loop) x-அச்சைச் சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமம் காண்க.

4. $y^2 = x_2\ (1 - x^2)$ என்ற வளைவரையின் வளையம் x-அச்சைச் சுற்றும்போதுண்டாகும் உருளைப் பருமம் யாது?

5. $y^4 = x^2\,(4 - x)$-ன் வளையம் x அச்சைச்சுற்றவுண்டாகும் உருளைப்பரும கனஅளவு யாது ?

6. $ay^2 = x^2$ என்ற வளைவரை, $x = 0$, $x = a$ இவற்றிற்கு இடையேயுள்ள பரப்பு x-அச்சைச் சுற்றுவதாலுண்டாகும் உருளைப் பருமத்தைக் கணக்கிடு.

7. $x\,(x^2 + y^2) = a\,(x^2 - y^2)$ என்ற வளைவரையின் வளையத்தின் x-அச்சையொட்டிய உருளைப்பருமத்தை மதிப்பிடுக.

8. உயரம் h, அடிப்பக்க ஆரை r அளவுகளுள்ள நேர் வட்டக்கூம்பின் கனஅளவைக் காண்க.

9. பின்வரும் வளைவரைகளின் வளைவுகள் x அச்சைச் சுற்றும்போது வரும் உருளைப்பருமங்களைக் கணக்கிடுக.

(a) $y^2 = x^4\,(x + 2)$ (b) $ay^2 = x^2\,(a - x)$

10. $y^2 = x^3 + 5x$, $x = 2$, $x = 4$ இவற்றினிடையிலுள்ள பரப்பு x-அச்சையொட்டிச் சுழலும் போதுண்டாகும் உருளைப் பருமத்தைக் கணக்கிடுக.

பயிற்சிகள் 35—B

1. $4y^2 = 5x$ என்ற பரவளைவும், $x = 4$ என்ற இரட்டைக் குத்தாயம் இவற்றினிடையிலுள்ள பகுதி பரவளைவின் உச்சியில் வரைந்த தொடுகோட்டையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் பருமத்தின் மதிப்பைக் கணக்கிடுக.

2. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ அதன் குற்றச்சை (Minor axis) யொட்டிச் சுழல ஏற்படும் உருளைப் பருமம் யாது ?

3. $y^2 = 4ax$ என்ற வளைவரைக்கும் அதன் செவ்வகலத்திற்கும் (latus rectum) உட்பட்ட பகுதி (a) இயக்குவரை (directrix) (b) உச்சியில் வரைந்த தொடுகோடு இவற்றையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தைக் கணக்கிடுக.

4. $y \sin x$, $x = 0$, $x = \pi$ இவற்றிற்கிடைப்பட்ட பரப்பு x-அச்சையொட்டிச்சுற்ற வுண்டாகும் உருளைப்பருமத்தைக் காண்க.

5. $y^2 = 4ax$, அதன் செவ்வகலத்தின் முனைகளில் வரையப் பட்ட தொடுகோடுகள், y அச்சு இவற்றாலடைபட்ட பரப்பானது பரவளைவின் அச்சைச் சுற்றும்போது ஏற்படும் பருமம் $\frac{2}{3} \pi a^3$ கன அலகுகள் எனக்காட்டுக.

6. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தை $x = \frac{a}{2}$ என்ற குத்தாயத்தால் பிரிக்கப்படும் சிறியபகுதி, இக்குத்தாயத்தைச் சுற்றும்போது ஏற்படும் பருமம் $\pi a^2 \cdot b \left(\frac{3\sqrt{3}}{4} - \frac{\pi}{3} \right)$ எனக் காட்டுக.

7. $r = 2 + \cos\theta$ அதன் தொடக்கக்கோட்டை ஒரு முறை சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தை மதிப்பிடுக.

8. $60°$ மையக்கோணமுள்ள ஒரு வட்டக்கோணப்பகுதி அதன் நடு ஆரையையொட்டிச் சுழலும்போதுண்டாகும் உருளைப் பருமத்தைக் கணக்கிடுக.

9. ஒருபக்கம் a நீளமுள்ள ஒரு சமபக்க முக்கோணம் அதன் ஒரு பக்கத்தையொட்டிச்சுற்ற ஏற்படும் உருளைப்பருமம் யாது ?

10. வளைவரை $y = C \cos h \frac{x}{c}$, x அச்சு, $x = \pm C$ என்ற குத்தாயங்கள் இவற்றிற்கிடைப்பட்ட பரப்பு x-அச்சையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தைக் காண்க.

11. r-ஆரையுள்ள ஒருவட்டம் தொடுகோட்டையொட்டிச் சுழலும் போதுண்டாகும் உருளைப்பருமம் யாது ?


12. $y = e^{-x}$ என்ற வளைவரைக்கும், அச்சுகளுக்குமிடைப் பட்ட பரப்பு அச்சுகளை யொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமங்களை ஒப்பிடுக.

§ 37. வளைவரையின் நீளம் (Length of a curve)

ஒரு வளைவரையின் நீளத்தைக்காண அதைப் பல நுண் பகுதிகளாக்கி அடுத்துவரும் அண்மைப் புள்ளிகளை நாண்களால் இணைத்திடுக. இவற்றில் மீப்பெருநாணின் எல்லை 0-ஐ நாடும் போது இந்நாண்களின் கூட்டுத்தொகையின் எல்லையை வளைவரையின் நீளமென்கிறோம்.

வில் AB-யின் நீளம் s,

வில் $PQ = \Delta s$,



படம் 33

(x, y), $(x + \Delta x, y + \Delta y)$ என்பன P, Q புள்ளிகளின் அச்சுத் தூரங்கள் என்றால்,

$$s = \text{எல்லை } \Sigma\, PQ$$

$$= \text{எல்லை } \Sigma \sqrt{(\Delta x)^2 + (\Delta y)^2} \qquad \text{(i)}$$

$$= \text{எல்லை } \sum \sqrt{1 + \left(\frac{\Delta y}{\Delta x}\right)^2} \cdot \Delta x$$

$$= \int_{x_1}^{x_2} \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

$(x_1\ y_1)$, $(x_2\ y_2)$ A, B, புள்ளிகளின் அச்சுத்தூரங்கள்

(i) ஐ, $s = \text{எல்லை } \sum \sqrt{1 + \left(\frac{\Delta x}{\Delta y}\right)^2} \cdot \Delta y$ அல்லது

ராமாறி t-ன் சார்பாகக் கொடுத்திருந்தால்

$$s = \text{எல்லை} \sum \sqrt{\left(\frac{\Delta x}{\Delta t}\right)^2 + \left(\frac{\Delta y}{\Delta t}\right)^2} \cdot \Delta t$$

என்றுங் கொள்ளலாம்.

$$\therefore \quad s = \int_{x_1}^{x_2} \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx = \int_{y_1}^{y_2} \sqrt{1 + \left(\frac{dx}{dy}\right)^2} \cdot dy$$

$$= \int_{t_1}^{t_2} \sqrt{\left(\frac{dx}{dt}\right)^2 + \left(\frac{dy}{dt}\right)^2} \cdot dt$$

t_1, t_2 என்பன A, B என்ற புள்ளிகளில் t-ன் மதிப்புகளாகும்.

எ. கா. 1.

$y^2 = 4ax$ என்ற பரவளைவின் நீளத்தை உச்சியிலிருந்து வளைவரையின் மேலுள்ள (x_1, y_1) புள்ளிவரையில் காண்க.

$$y^2 = 4a \;,\; x = \frac{y^2}{4a} \quad \therefore \quad \frac{dx}{dy} = \frac{y}{2a}$$

$$\therefore \quad s = \int_0^{y_1} \sqrt{1 + \left(\frac{dx}{dy}\right)^2} \cdot dy$$

$$= \int_0^{y_1} \sqrt{1 + \frac{1}{4a^2}^2}\, dy = \frac{1}{2a}\int_0^{y_1} \sqrt{(2a)^2 + y^2} \cdot dy$$

$$= \frac{1}{2a}\left[\frac{y}{2}\sqrt{4a^2 + y^2} + \frac{4a^2}{2}\sinh^{-1}\frac{y}{2a}\right]_0^{y}$$

$$= \frac{1}{4a}\left[y_1 \sqrt{4a^2 + y_1^2} + 4a^2 \sinh^{-1}\frac{y_1}{2a}\right]$$

எ கா 2.

$x = a(\theta - \sin\theta)$, $y = a(1 - \cos\theta)$ என்ற உருள்வளையின் நீளத்தை மதிப்பிடுக.

$$s = \int_0^{2\pi} \sqrt{\left(\frac{d}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2} \cdot d\theta$$

$$= \int_0^{2\pi} \sqrt{a^2(1 - \cos\theta)^2 + a^2\sin^2\theta} \cdot d\theta$$

$$= \int_0^{2\pi} a\sqrt{1 - 2\cos\theta + \cos^2\theta + \sin^2\theta} \cdot d\theta$$

$$= \int_0^{2\pi} a\sqrt{2}\,\sqrt{1 - \cos\theta} \cdot d\theta$$

$$= \sqrt{2} \cdot a \int_0^{2\pi} \sqrt{2}\sin\frac{\theta}{2} \cdot d\theta$$

$$= a \cdot 2 \cdot 2\left[-\cos\frac{\theta}{2}\right]_0^{2\pi} = -4a(-1 - 1) = 8a$$

எ. கா. 3.

$\theta = 0, \theta = \frac{\pi}{2}$ இடைவெளியில் $x = e^{\theta} \cdot \sin\theta$, $y = e^{\theta^2}\cos\theta$ வளைவரையின் நீளம் காண்க.

$$\frac{dx}{d\theta} = e^{0}(\sin\theta + \cos\theta); \quad \frac{dy}{dx} = e^{\theta}(\cos\theta - \sin\theta)$$

$$\therefore \left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2 = e^{2\theta}[(\sin\theta + \cos\theta)^2$$

$$+ (\cos\theta - \sin\theta)^2]$$

$$= e^{2\theta} \times (2)$$

$$\therefore \quad s = \int_0^{\frac{\pi}{2}} \sqrt{2} \cdot e^{\theta} \cdot d\theta = \sqrt{2} \cdot \left(e^{\theta}\right)_0^{\frac{\pi}{2}}$$

$$= \sqrt{2} \left(e^{\frac{\pi}{2}} - 1 \right)$$

எ. கா. 4.

வளைவரை $3y = \sqrt{x}\,(x - 3)$-ன் நீளத்தை $x = 0$, $x = 9$ என்ற எல்லைகளில் கணக்கிடுக.

$$3y = \sqrt{x}\,(x - 3) = x^{\frac{3}{2}} - 3x^{\frac{1}{2}}$$

$$\frac{3dy}{dx} = \frac{3}{2} \cdot x^{\frac{1}{2}} - \frac{3}{2} \cdot \frac{1}{x^{\frac{1}{2}}}$$

$$\therefore \quad \frac{dy}{dx} = \frac{1}{2}\left(\sqrt{x} - \frac{1}{\sqrt{x}} \right)$$

$$1 + \left(\frac{dy}{dx}\right)^2 = 1 + \frac{1}{4}\left(x - 2 + \frac{1}{x} \right)$$

$$= \frac{1}{4}\left(x + 2 + \frac{1}{x} \right) = \frac{1}{4}\left(\sqrt{x} + \frac{1}{\sqrt{x}} \right)^2$$

$$\therefore \quad \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \frac{1}{2} \cdot \left(\sqrt{x} + \frac{1}{\sqrt{x}} \right)$$

$$\therefore \quad s = \int_0^9 \frac{1}{2}\left(x^{\frac{1}{2}} + x^{-\frac{1}{2}} \right) dx$$

$$= \frac{1}{2}\left[\frac{2}{3} x^{\frac{3}{2}} + 2 \cdot x^{\frac{1}{2}} \right]_0^9$$

$$= \frac{1}{2}\left[\frac{2}{3}\, 9^{\frac{3}{2}} + 2 \cdot 9^{\frac{1}{2}}\right] = \frac{1}{2}(18 + 6)$$

$$= \frac{24}{2} = \mathbf{12}$$


எ. கா. 5.

$x = a\cos^3\theta,\ y = a\ \sin^3\theta$ என்ற வளைவரை சுற்றளவைக் காண்க.

$$x = a\cos^3\theta. \qquad \therefore\ \cos\theta = \left(\frac{x}{a}\right)^{\frac{1}{3}}$$

$$y = a\ \sin^3\theta. \qquad \sin\theta = \left(\frac{y}{a}\right)^{\frac{1}{3}}$$

$$\left(\frac{x}{a}\right)^{\frac{2}{3}} + \left(\frac{y}{a}\right)^{\frac{2}{3}} = \cos^2\theta + \sin^2\theta = 1$$



படம் 34.

வளைவரையின் உருவம் படத்தில் அச்சுகளையொட்டிச் சீராக உள்ளதால் ஒரு நாற்கூறுப் பகுதியின் நீளத்தை மட்டும் காண்போம்.

$\theta = 0$ எனில் $x = a\ ;\ y = 0$

$\theta = \frac{\pi}{2}$ எனில் $x = 0\ ;\ y = 1$

$$\frac{dx}{d\theta} = 3a \cdot \cos^2\theta\,(-\sin\theta),\ \frac{dy}{d\theta} = 3a\sin^2\theta \cdot \cos\theta.$$

$$\therefore\ \left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2 = 9a^2 \cdot \cos^2\theta \cdot \sin^2\theta\,(\cos^2\theta + \sin^2\theta)$$

$$\therefore\ \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{dx}\right)^2} = 3a \cdot \cos\theta \cdot \sin\theta.$$

இப்போது நாற்கூறுப் பகுதி $s = \int_0^{\frac{\pi}{2}} \sqrt{\left(\frac{dx}{d}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2}\, d\theta$

$$= \int_0^{\frac{\pi}{2}} 3a \cdot \cos\theta \cdot \sin\theta \cdot d\theta$$

$$= 3a \left(\frac{\sin^2\theta}{2}\right)_0^{\frac{\pi}{2}} = \frac{3}{2} a \cdot 1$$

$\therefore$ முழுச் சுற்றளவு $= 4 \times \frac{3}{2} \cdot a = 6a$

எ. கா. 6.

$4y^2 = (x+2)^3$ என்ற வளைவரையின் நீளத்தை $x = 2$, $x = 7$ என்ற இடைவெளியில் கணக்கிடுக.

$$4y^2 = (x+2)^3, \; y = \frac{(x+2)^{\frac{3}{2}}}{2} \quad \therefore \frac{dy}{dx} = \frac{1}{2} \cdot \frac{3}{2} (x+2)^{\frac{1}{2}}$$

$$1 + \left(\frac{dy}{dx}\right)^2 = 1 + \frac{9}{16}(x+2) = \frac{16 + 9x + 18}{16}$$

$$= \frac{9x + 34}{16}$$

$$\therefore \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \frac{1}{4}\sqrt{9x + 34}$$


இப்போது $s = \int_2^7 \frac{1}{4}\sqrt{9x+34}\, dx =$

$$\left[\frac{1}{4} \frac{(9x+34)^{\frac{3}{2}}}{\frac{3}{2}} \times \frac{1}{9}\right] = \frac{1}{54}\left[(9x+34)^{\frac{3}{2}}\right]_2^7$$


$$= \frac{1}{54}\left[(63+34)^{\frac{3}{2}} - (18+34)^{\frac{3}{2}}\right]$$

$$= \frac{1}{54}\left(97^{\frac{3}{2}} - 52^{\frac{3}{2}}\right)$$

§ 38. கோண தூர அளவுகளில் வளைவரையின் நீளம்.



படம் 35-(i)



படம் 35-(ii)

நிறுவுதல் : கொள்கைப்படி x-ன் மதிப்பு a-க்கு மேல் அதிகரிக்கும்போது, $\frac{f(x)}{g(x)} \sim l$ என்ற வேற்றுமை படிப்படியாகக் குறைந்து $x \to \infty$ ஆக வேற்றுமை $\to 0$ எனவாகும். இவ் வேற்றுமை ϵ என்ற ஒரு மிகை எண்ணைவிடச் சிறியதாக வேண்டு மெனின், அதற்கேற்ற X_0 என்ற x-ன் மதிப்பைக் காணக்கூடும். x-ன் மதிப்பு X_0-ஐயும் எட்டிச் செல்லும்போது, வேற்றுமை ϵ-யை விட இன்னும் குறையும்.

இதைச் சுருக்கமாக எழுதுவோம்.

ϵ ஏதாமொரு மிகை எண். அதற்கேற்ப $x \geq X_0$ என்ற எல்லா மதிப்புகளுக்கும்

$$\left| \frac{f(x)}{g(x)} - l \right| > \epsilon \qquad \text{...(i)}$$

என்றிருக்குமாறு X_0 என்ற எண்ணைக் காணக்கூடும். சமமின்மை (i)-ஐ, $x \geq X_0$ எனும்போது

$$\frac{f(x)}{g(x)} - l < \epsilon, \; l - \frac{f(x)}{g(x)} < \epsilon$$

$$\frac{f(x)}{g(x)} < (l + \epsilon), \quad (l - \epsilon) < \frac{f(x)}{g(x)}$$

அல்லது, $(l - \epsilon)\, g(x) < f(x) < (l + \epsilon)\, g(x)$ என்லாம்.

X_0, X வரம்புகளில் x-ஐ ஒட்டித் தொகையிட

$$\int_{X_0}^{X} (l - \epsilon) \cdot g(x) \cdot dx \leq \int_{X_0}^{X} f(x)\,dx$$

$$\leq \int_{X_0}^{X} (l + \epsilon)\, g(x)\,dx$$

(a) இப்போது $\int_a^\infty g(x)\,dx$, ஒருங்குமெனக் கொள்வோம்.

அதன் பகுதிகளான $\int_{X_0}^{\infty} g(x)\, dx$, $\int_{X_0}^{X} g(x) \cdot dx$-ம் ஒருங்கும்.

$\therefore\ (l+\epsilon) \int_{X_0}^{X} g(x) \cdot dx$ ஒரு மேல் எல்லை கொண்டதாகும்.

ஆனால் $\int_{X_0}^{X} f(x)\, dx \leq (l+\epsilon) \int_{X_0}^{X} g(x)\, dx$ எனக் கண்டோம்.

$\therefore\ \int_{X_0}^{X} f(x)\, dx$-ம் மேல் எல்லை கொண்டதாகும்.

$\therefore\ \int_{X_0}^{\infty} f(x)\, dx$ ஒருங்கும். இங்கு X_0 ஒரு குறிப்பிட்ட எண்.

$\therefore\ \int_{a}^{\infty} f(x)\, dx$ ஒரு முடிவான எல்லைக்கு ஒருங்கும்.

(b) $\int_{a}^{\infty} g(x)\, dx$ ஒருங்காதெனில்

$\int_{X_0}^{X} g(x)\, dx$, $(l-\epsilon) \int_{X_0}^{X} g(x)\, dx$ எல்லையற்றவையாகும்.

ஆனால் $(l-\epsilon) \int_{X_0}^{X} g(x)\, dx \leq \int_{X_0}^{X} f(x)\, dx$

$\therefore\ \int_{X_0}^{X} f(x)\, dx$ எல்லையற்றது.

அதாவது $\int_{a}^{\infty} f(x)\, dx$ மதிப்பற்றதாகும்.

(ii) தொகுபடும் சார்பு முடிவிலியாகுமிடத்து அதன் தொகையீடு ஒருங்குதல்.

தேற்றம்: $f(x)$, $g(x)$ என்ற சார்புகள் (a, b) இடைவெளியில் மிகையாகவும், தொடர்ச்சியாகவுமிருந்து $x \to b$ எனும்போது முடிவிலிகளாகின்றன என்போம்.

எல்லை $\lim\limits_{x \to b} \dfrac{f(x)}{g(x)} = l$, $(l \neq 0$ அல்லது $\infty)$ என்றால் தகாத்

தொகைகள் $\int_a^b f(x)\, dx$, $\int_a^b g(x)\, dx$ ஒன்றுபோல் ஒருங்கும்

அல்லது ஒருங்கா.

நிருவுதல்: ζ-ஏதாமொரு முழு எண். அதற்கேற்ப $b > x \geq X_0 > a$ என்ற எல்லையில் x-ன் எல்லா மதிப்புகளுக்கும்

$$\left| \frac{f(x)}{g(x)} - l \right| > \epsilon \ldots \quad \ldots \text{(i)}$$

என்றிருக்குமாறு X_0 என்ற ஓர் எண்ணைக் குறிக்கலாம்.

சமமின்மை (i)-ஐ

$(l - \epsilon)\, g(x) < f(x) < (l + \epsilon)\, g(x)$ என எழுதலாம். X_0, X வரம்புகளில் x-ஐ ஒட்டித் தொகையிட

$$(l - \epsilon) \int_{X_0}^{X} g(x) \cdot dx \leq \int_{X_0}^{X} f(x)\, dx$$

$$\leq (l + \epsilon) \int_{X_0}^{X} g(x) \cdot dx$$ எனவாகும்.

இப்போது,

(a) $\int_a^b g(x)\, dx$, b-யில் ஒருங்குவதெனக் கொள்வோம்.

அதன் பகுதிகளான $\int_{X_0}^{b} g(x)\, dx$, $\int_{X_0}^{X} g(x)\, dx$-ம் ஒருங்கும்.

அதாவது $(l+\epsilon)\int_{X_0}^{X} g(x)\, dx$-க்கு ஒரு மேல் எல்லை உண்டு.

$$\therefore \int_{X_0}^{X} f(x)\, dx, \quad b\text{-யில் ஒருங்கும்.}$$

$$\text{அதனுல் } \int_{a}^{b} f(x)\, dx\text{-ம் } b\text{-யில் ஒருங்கும்.}$$

(b) $\int_{a}^{b} g(x)\, dx$ ஒருங்குவதில்லையெனில்

$\int_{a}^{b} f(x)dx$-ம் ஒருங்காது என எளிதாகக்காட்டலாம்.

குறிப்பு : இதுபோலவே, தொகுபடும் சார்பு a-யில் முடிவிலியானுல் தகாத்தொகை a-யில் ஒருங்க ஒரு சோதனைத்தேற்றத்தைக் கூறி அதை நிறுவலாம்.

§ 60. ஒப்புமைத் தொகையீடுகள்—(μ சோதனை)

தொகை காணும் முடிவிலா வெளியிலோ (Infinite region of integration) அல்லது தொகுபடும் சார்பு முடிவிலியாகும் வரம்புகளிலோ, தகாத்தொகையீடுகள் ஒருங்குகின்றனவா, இல்லையா என்று ஒப்பிட்டு அறியப் பயன்படும் மூன்று தொகையிடுகளை இங்குக் காண்போம். ஒப்பிடும் தொகையீடுகளாவன :

(i) $\int_{a}^{\infty} \frac{1}{x^{\mu}}\, dx\ (a > 0)$ — (வரம்பு ஒரு முடிவிலியாதல்),

(ii) $\int_a^b \frac{dx}{(b-x)^{\mu}}$ — (மேல் வரம்பில் தொகுபடு சார்பு முடிவிலியாதல்.)

(iii) $\int_a^b \frac{dx}{(x-a)^{\mu}}$ (கீழ் வரம்பில் தொகுபடு சார்பு முடிவிலியாதல்

(i) $\int_a^{\infty} \frac{dx}{x^{\mu}}$ என்ற தகாத்தொகை $\mu > 1$ **எனும் போது ஒருங்கும்.**

$\mu \leq 1$ **எனும் போது விரியும்.**

தகாத் தொகை $\int_a^{\infty} \frac{dx}{x^{\mu}}$ — இங்கு மேல் வரம்பு முடிவிலி.

$\mu \neq 1$ எனில் $\phi(\zeta) = \int_a^{\zeta} \frac{dx}{x^{\mu}} = \frac{1}{-\mu+1}\left[\frac{1}{x^{\mu-1}}\right]_a^{\zeta}$

$$= \frac{1}{-\mu+1}\left[\frac{1}{\zeta^{\mu-1}} - \frac{1}{a^{\mu-1}}\right]$$

1. $\mu > 1$ எனில்,

$\therefore \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \; \phi(\zeta) = \frac{1}{\mu-1} \times \frac{1}{a^{\mu-1}}$

= ஒரு முடிவுள்ள மதிப்பு.

$\therefore\ \mu > 1$ எனில், $\int_a^\infty \frac{dx}{x^\mu}$ ஒருங்கும்.

2. $\mu < 1$ எனில்,

$$\underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \frac{1}{\zeta^{\mu - 1}} = \underset{\zeta \to \infty}{\text{எல்லை}}\ \zeta^{1-\mu} = \infty$$

$$\therefore \int_a^\infty \frac{dx}{x^\mu} \text{ விரியும்.}$$

3. $\mu = 1$ எனில்,

$$\phi(\zeta) = \int_a^\zeta \frac{dx}{x} = (\log x)_a^\zeta$$

$$= \log \zeta - \log a$$

$$\therefore \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \phi(\zeta) = \infty \quad \therefore \int_a^\infty \frac{dx}{x^\mu} \text{ விரியும்.}$$

முடிவு :

$\int_a^\infty \frac{dx}{x^\mu}$ என்ற தகாத் தொகை

$\mu > 1$ எனில் ஒருங்கும்.

$\mu \leq 1$ எனில் விரியும்.

(ii) $\int_a^b \frac{dx}{(b-x)^\mu}$ **என்ற தகாத்தொகை** $\mu < 1$ **எனில்,**

ஒருங்கும் ; $\mu \geq 1$ **எனில் விரியும்**

$x \to b$ எனில் $\dfrac{1}{(b-x)^{\mu}} \to \infty$

$\mu \neq 1$ எனில் $\phi(\zeta) = \displaystyle\int_a^{b-\zeta} \frac{dx}{(b-x)^{\mu}}$

$$= \frac{1}{-\mu+1}\left[\frac{1}{(b-x)^{\mu-1}}\right]_a^{b-\zeta}$$

$$= \frac{1}{-\mu+1}\left[\frac{1}{\zeta^{\mu-1}} - \frac{1}{(b-a)^{\mu-1}}\right]$$

(1) $\mu < 1$ எனில்,

$$\underset{\S \to 0}{\text{எல்லை}}\ \phi(\S) = \underset{\S \to 0}{\text{எல்லை}}\ \frac{1}{-\mu+1}\left[\zeta^{1-\mu} - \frac{1}{(b-a)^{\mu-1}}\right]$$

$$= \frac{-(b-a)^{1-\mu}}{(1-\mu)}$$, முடிவுள்ள மதிப்பு.

$\therefore \displaystyle\int_a^b \frac{dx}{(b-x)^{\mu}}$ ஒருங்கும்.

(2) $\mu > 1$ எனில், $\underset{\S \to 0}{\text{எல்லை}}\ \phi(\S) = \underset{\S \to 0}{\text{எல்லை}}\ \dfrac{1}{-\mu+1}$

$$\left[\frac{1}{\S^{\mu-1}} - \frac{1}{(b-a)^{\mu-1}}\right]$$

$= \infty$ (முடிவிலி)

$\therefore \displaystyle\int_a^b \frac{dx}{(b-x)^{\mu}}$ விரியும்.

(3) $\mu = 1$ எனில் $\phi(\zeta) = \int_{a}^{b-\zeta} \frac{dx}{(b-x)}$

$$= [-\log(b-x)]_{a}^{b-\zeta}$$

$$= -\log\zeta + \log(b-a)$$

$\therefore$ எல்லை

$\zeta \to 0$ ϕ (§) முடிவிலி.

$\therefore \int_{a}^{b} \frac{dx}{(b-x)}$ விரியும்.

முடிவு.

$\int_{a}^{b} \frac{dx}{(b-x)^{\mu}}$ என்ற தாகத்தொகை

$\mu <$ | எனில் ஒருங்கும். $< \geq$ | எனில் விரியும்.

(iii) $\int_{a}^{b} \frac{dx}{(x-a)^{\mu}}$ என்ற தகாத்தொகை $\mu < 1$ எனில் ஒருங்கும். $\mu \geq 1$ எனில் விரியும்.

$\mu \neq 1$ எனில் $\phi(\zeta) = \int_{a+\zeta}^{b} \frac{dx}{(x-a)^{\mu}}$

$$= \frac{1}{-\mu+1}\left[\frac{1}{(x-a)}\mu - 1\right]_{a+\zeta}^{b}$$

$$= \frac{1}{-\mu+1}\left[\frac{1}{(b-a)}\mu - 1 - \frac{1}{\zeta^{\mu-1}}\right]$$

1. $\mu < 1$ எனில் $\lim_{\zeta \to 0} \phi(\zeta) = \frac{(b-a)^{1-\mu}}{-\mu+1}$

$$- \lim_{\zeta \to 0} \frac{\zeta^{1-\mu}}{-\mu+1}$$

$$= \frac{(b-a)^{1-\mu}}{1-\mu},$$ முடிவுள்ள மதிப்பு.

2. $\mu > 1$ எனில், $\lim_{\zeta \to 0} \phi(\zeta)$ முடிவிலி.

3. $\mu = 1$ எனில், $\phi(\zeta) = \int_{a+\zeta}^{b} \frac{dx}{x-a}$

$$= [\log(x-a)]_{a+\zeta}^{b}$$

$$= [\log(b-a) + \log\zeta]$$

= முடிவிலி.

முடிவு ;

$$\int_a^b \frac{dx}{(x-a)^{\mu}}$$ என்ற தகாத்தொகை

$\mu < 1$ எனில் ஒருங்கும். $\mu \geq$ எனில் விரியும்.

எ. கா. 1.

$$\int_1^{\infty} \frac{x \cdot dx}{(1+x)^3}$$ என்ற தகாத்தொகை ஒருங்குவதைச்

சோதனை செய்க.

$1 - \infty$ எல்லைக்குள் $\frac{x}{(1+x)^3}$ மிகையாகவும் தொடர்ச்சியாகவு

முள்ளது.

$x \to \infty$ எனும்போது $f(x) \to 0$

$\therefore$ ஒப்புமைத் தொகையீடு $\int_1^{\infty} \frac{dx}{x^{\mu}}$

$$f(x) = \frac{x}{(1+x)^3} = \frac{1}{x^2\left(1+\frac{1}{x}\right)^3}$$

$\therefore \quad g(x) = \frac{1}{x^2}. \quad \mu = 2$

இப்போது $\lim_{x \to \infty} \frac{f(x)}{g(x)} = \lim_{x \to \infty} \frac{1}{x^2\left(1+\frac{1}{x}\right)^3} \times \frac{x^2}{1}$

$= 1 \quad (\neq 0$ அல்லது $\infty)$

ஆனல் $\mu = 2 > 1$

$\therefore$ முடிவிலியில் $\int_1^{\infty} \frac{1}{x^2}$ ஒருங்கும்.

அதனல் $\int_1^{\infty} \frac{x\,dx}{(1+x)^3}$ -ம் ஒருங்கும்.

எ. கா. 2.

$\int_1^{\infty} \frac{dx}{x^{\frac{1}{3}}(1+x)^{\frac{1}{2}}}$ ஒருங்குகிறதா என்று சோதித்திடுக.

$1 - \infty$ எல்லைக்குள் $f(x)$ மிகையாகவும் தொடர்ச்சியாகவும் இருக்கிறது. $x \to \infty$ எனும்போது $f(x) \to 0$.

$\therefore$ ஒப்புமைத் தொகையீடு $\int_1^{\infty} \frac{dx}{x^{\mu}}$

$$f(x) = \frac{1}{x^{\frac{1}{3}}(1+x)^{\frac{1}{2}}} = \frac{1}{x^{\frac{5}{6}}\left(1+\frac{1}{x}\right)^{\frac{1}{2}}}$$

$$\therefore \quad g(x) = \frac{1}{x^{\frac{5}{6}}}, \text{ இங்கு } \mu = \frac{5}{6}$$

$$\underset{x \to \infty}{\text{எல்லை}} \frac{f(x)}{g(x)} = \underset{x \to \infty}{\text{எல்லை}} \frac{1}{x^{\frac{5}{6}}\left(1+\frac{1}{x}\right)^{\frac{1}{2}}} \times \frac{x^{\frac{5}{6}}}{1} = 1$$

ஆனல் $\mu = \frac{5}{6} < 1$

$\therefore$ முடிவிலியில் $\int_1^\infty g(x)\,dx$ ஒருங்குவதில்லை.

அதனல் $\int_1^\infty \frac{dx}{x^{\frac{1}{3}}(1+x^2)^{\frac{1}{2}}}$ -ம் முடிவிலியில் ஒருங்குவதில்லை

எ. கா. 3.

$\int_0^1 \frac{dx}{x^{\frac{1}{3}}(1+x^2)}$ என்பதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.

0 — 1 எல்லைக்குள் $f(x)$ மிகையானது, தொடர்ச்சியானது. ஆனல் $x \to 0$ எனும்போது கீழ் எல்லையில் $f(x) \to \infty$

$$\therefore \quad \text{ஒப்புமைத் தொகையீடு} \int_0^1 \frac{dx}{(x-a)^\mu}$$

$$f(x) = \frac{1}{(x-0)^{\frac{1}{3}}(1+x^2)}$$

$$\therefore g(x) = \frac{1}{(x-a)^{\frac{1}{3}}}$$ இங்கு $\mu = \frac{1}{3}$

$$\lim_{x \to 0} \frac{f(x)}{g(x)} = \lim_{x \to 0} \frac{1}{x^{\frac{1}{3}}(1+x^2)} \cdot \frac{x^{\frac{1}{3}}}{1} = 1$$

(எல்லை $x \to 0$)

ஆனல் $\mu = \frac{1}{3} < 1$

$$\therefore \int_0^1 \frac{dx}{x^{\frac{1}{3}}}$$ கீழ் எல்லை 0-ல் ஒருங்குகிறது.

$$\therefore \int_0^1 \frac{dx}{x^{\frac{1}{3}}(1+x^2)}$$ -ம் 0-ல் ஒருங்குகிறது.

எ. கா. 4.

$$\int_0^1 \frac{dx}{x^2\ (1+x)^2}$$ என்பதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.

$O - 1$ எல்லைக்குள் $f(x)$ மிகையானது; தொடர்ச்சியானது. கீழ் எல்லை $x \to 0$-ல் $f(x) \to \infty$

$$\therefore \text{ ஒப்புமைத் தொகையீடு} \int_0^1 \frac{dx}{(x-a)^{\mu}}$$

இங்கு, $f(x) = \dfrac{1}{x^2(1+x)^2}$

$$= \frac{1}{(x-0)^2\ (1+x)^2}$$

$$\therefore g(x) = \frac{1}{(x-0)^2}, \quad \mu = 2$$

$$\lim_{x \to 0} \frac{f(x)}{g(x)} = \lim_{x \to 0} \frac{1}{x^2(1+x)^2} \cdot \frac{x^2}{1} = 1$$

(எல்லை $x \to 0$)

ஆனால் $\mu = 2 > 1$

$$\therefore \int_0^1 \frac{dx}{x^2}, \quad x = 0 \text{ வில் ஒருங்குவதில்லை.}$$

ஆதலால் $\displaystyle\int_0^1 \frac{dx}{x^2 (1+x)^2}$ -ம் $x = 0$ வில் ஒருங்காது.

எ. கா. 5.

$\displaystyle\int_{\frac{1}{2}}^1 \frac{dx}{x^{\frac{1}{2}} (1-x)^{\frac{1}{3}}}$ என்பதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.

$\frac{1}{2} - 1$ எல்லைக்குள் $f(x)$ மிகையாகவும், தொடர்ச்சியாகவும் உளது. மேல் எல்லை $x \to 1$-ல் $(fx) \to \infty$.

$$\therefore \text{ ஒப்புமைத் தொகையீடு } \int_{\frac{1}{2}}^1 \frac{dx}{(1-x)^{\frac{1}{3}}}, \quad \mu = \tfrac{1}{3}$$

$$\lim_{x \to 1} \frac{f(x)}{g(x)} = \lim_{x \to 1} \frac{1}{x^{\frac{1}{2}} (1-x)^{\frac{1}{3}}} \times \frac{(1-x)^{\frac{1}{3}}}{1} = 1$$

இங்கு $\mu = \frac{1}{3} < 1$

$$\therefore \int_{\frac{1}{2}}^1 \frac{dx}{(1-x)^{\frac{1}{3}}} \text{ மேல் எல்லையில் ஒருங்குகிறது.}$$

அதுபோலவே $\displaystyle\int_{\frac{1}{2}}^1 \frac{d}{x^{\frac{1}{2}} (1-x)^{\frac{1}{3}}}$ -ம் மேல் எல்லையில் ஒருங்கும்.

§ 61. அறவொருங்கல் (Absolute convergence)

ஒரு கொடுக்கப்பட்ட இடைவெளியில் $f(x)$, $|f(x)|$ இவற்றின் தொகையீடுகள் ஒருங்குவனவாயின், $f(x)$-ன் தொகையீடு அந்த இடைவெளியில் அறவொருங்குகின்றது என்கிறோம். (Converges absolutely).

தொகையீடென்பது ஒரு தொடரின் கூட்டுத் தொகையின் எல்லை என்ற வரையறைப்படி (by definition)

$$\int_a^{\infty} |f(x)|\, dx \text{ ஒருங்குகின்றதெனில்}$$

$$\int_a^{\infty} f(x)\, dx\text{-ம் ஒருங்குமென்பது தொடர்களின் அற}$$

வொருங்கல் விதிப்படித் தெளிவாகும்.

எ. கா. 6.

$$\int_1^{\infty} \frac{\sin x}{x^{\frac{3}{2}}}\, dx \text{ இதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.}$$

$(1 - \infty)$ என்ற இடைவெளிக்குள் $\left|\dfrac{\sin x}{x^{\frac{3}{2}}}\right|$ மிகையாகவும் தொடர்ச்சியாகவும் உள்ளது. $x \to \infty$ எனும்போது $f(x) \to 0$ என ∞-ல் தொடர்ச்சியற்றுப் போகிறது.

$$f(x) = \left|\frac{\sin x}{x^{\frac{3}{2}}}\right|, \; g(x) = \frac{1}{x^{\frac{3}{2}}}$$

$$\therefore \; \text{எல்லை}_{x \to \infty} \frac{\left|\dfrac{\sin x}{x^{\frac{3}{2}}}\right|}{\dfrac{1}{x^{\frac{3}{2}}}} = $$

$$\text{எல்லை}_{x \to \infty} \left|\frac{\sin x}{x^{\frac{3}{2}}} \cdot x^{\frac{3}{2}}\right.$$

$= \leq 1$, ($1 = \infty$ இடைவெளியில் $\neq 0$)

இங்கு $\mu = \frac{3}{2} > 1$

$$\therefore \int_1^\infty \frac{1}{x^{\frac{3}{2}}}\, dx \text{ ஒருங்குவதால்}$$

$$\int_1^\infty \left| \frac{\sin x}{x^{\frac{3}{2}}} \right| dx, \text{ ஆதலால்} \int_1^\infty \frac{\sin x}{x^{\frac{3}{2}}}\, dx$$

ஒருங்கும்.

எ. கா. 7.

$$\int_1^\infty \frac{x^n}{1+x^n}\, dx \text{ இதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.}$$

$1 - \infty$ இடைவெளியில் $f(x)$ மிகையானது, தொடர்ச்சியானது. $n > m$ எனும்போது

$x \to \infty$ எனில் $f(x) \to 0$.

$$f(x) = \frac{x^m}{1+x^n} = \frac{x^m}{x^n\left(1+\frac{1}{x^n}\right)} = \frac{1}{x^{n-m}\left(1+\frac{1}{x^n}\right)}$$

$\therefore$ ஒப்புமைத் தொகையீடு

$$\int_1^\infty \frac{1}{x^{n-m}} \cdot dx, \quad \mu = n - m.$$

$$g(x) = \frac{1}{x^{n-m}}$$

$$\therefore \lim_{x \to \infty} \frac{f(x)}{g(x)} = \lim_{x \to \infty} \frac{1}{x^{n-m}\left(1+\frac{1}{x^n}\right)} \times \frac{x^{n-m}}{1}$$

$$= 1.$$

$\because$ $n - m > 1$ என்றபோது

$$\int_1^{\infty} \frac{1}{x^{n-m}}\, dx \text{ ஒருங்கும்.}$$

$$\text{அதுபோலவே } \int_1^{\infty} \frac{x^m}{1 + x^n}\, dx\text{-ம் ஒருங்கும்.}$$

எ. கா. 8.

$$\int_1^{\infty} \frac{(x^2 + 1)(3x + 5)}{(x + 2)^k}\, dx \text{ என்பதன் ஒருங்குதலைச்}$$

சோதித்திடுக.

$1 - \infty$ இடைவெளியில் $f(x)$ மிகை, தொடர்ச்சியானது.

$k - 3 > 0$ எனும்போது, $x \to \infty$ என $f(x) \to 0$

$$f(x) = \frac{(x^2 + 1)(3x + 5)}{(x + 2)} = x^3 \frac{\left(1 + \frac{1}{x^2}\right)\left(3 + \frac{5}{x}\right)}{x^k \left(1 + \frac{2}{x}\right)^k}$$

$$= \frac{\left(1 + \frac{1}{x^2}\right)\left(3 + \frac{5}{x}\right)}{x^{k-3} \left(1 + \frac{2}{x}\right)^k}$$

$\therefore$ $g(x) = \frac{1}{x^{k-3}}$ இங்கு $\mu = k - 3$

$$\underset{x \to \infty}{\text{எல்லை}} \frac{f(x)}{g(x)} = \underset{x \to \infty}{\text{எல்லை}} \frac{\left(1 + \frac{1}{x^2}\right)\left(3 + \frac{5}{x}\right)}{x^{k-3} \left(1 + \frac{2}{x}\right)^k} \cdot \frac{x^{k-3}}{1} = 3$$

$\therefore$ $k - 3 > 1$ அதாவது $k > 4$ எனும்போது

$$\int_1^\infty \frac{1}{x^{k-3}}\,dx$$ ஒருங்குகிறது. அதுபோலவே

$\therefore$ $k > 4$ எனில் $$\int_1^\infty \frac{(x^2+1)(3x+5)}{(x+2)^k}\,dx$$-ம் ஒருங்கும்.

எ. கா. 9.

$$\int_1^\infty \frac{dx}{\sqrt{x+ax^3}}$$ இதன் ஒருங்குதலைச் சோதித்திடுக.

$1 - \infty$ இடைவெளியில் $f(x)$ மிகையானது, தொடர்ச்சியுள்ளது. $x \to \infty$ என $f(x) \to 0$

$$\text{இங்கு } f(x) = \frac{1}{(x+ax^3)^{\frac{1}{2}}} = \frac{1}{x^{\frac{3}{2}}\left(a + \frac{1}{x^2}\right)}$$

$$\therefore \quad g(x) = \frac{1}{x^{\frac{3}{2}}}, \mu = \frac{3}{2}$$

$$\text{எல்லை}_{x\to\infty} \frac{f(x)}{g(x)} = \text{எல்லை}_{x\to\infty} \frac{1}{x^{\frac{3}{2}}\left(a+\frac{1}{x^2}\right)} \times \frac{x^{\frac{3}{2}}}{1}$$

$$= \frac{1}{a} \ (\neq 0 \text{ அல்லது } \infty)$$

இங்கு $\mu = \frac{3}{2} > 1$

$\therefore$ $$\int_1^\infty \frac{1}{x^{\frac{3}{2}}} \cdot dx$$ ஒருங்கும். அதுபோலவே

$$\int_1^\infty \frac{dx}{\sqrt{x+ax^3}}$$ ம் ஒருங்கும்.

பயிற்சிகள் 45

கீழ்க்கண்ட தொகையீடுகள் ஒருங்குகின்றனவா வெனச் சோதனை செய்திடுக.

1. $\int_1^\infty \frac{dx}{\sqrt{x}(1+x)}$

2. $\int_0^1 \frac{x^{a-1}}{1+x} \cdot dx$

3. $\int_0^{\frac{\pi}{2}} \frac{\sqrt{x}}{\sin x} \cdot dx$

4. $\int_0^1 \frac{dx}{[(x-1)^6(x-2)]^{\frac{1}{5}}}$

5. $\int_1^\infty \frac{x \cdot dx}{(1+x)^3}$

6. $\int_a^\infty \frac{\sin x \cdot dx}{x^2}$

7. $\int_1^\infty \frac{dx}{\sqrt{a^2-x^2}}$

8. $\int_1^\infty \frac{\cos x}{(x^6+3)} dx$

9. $\int_1^\infty \frac{x^3 \cdot dx}{(a^3+x^3)^2}$

10. $\int_1^\infty \frac{\sqrt{x} \cdot dx}{(ax+b)}$

11. $\int_1^\infty \frac{x^{2m}}{1+x^{2n}} \cdot dx$

12. $\int_a^\infty \frac{dx}{x(\log x)^{p+1}}$

16. பீட்டா, காமா சார்புகள்
(Beta and Gamma Functions)

§ **62.** $\int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\cdot dx,\ \int_0^\infty x^{n-1}\cdot e^{-x}\cdot dx$ ஆயிலரின் தொகையீடுகள் (Eulerian Integrals) எனப்படுவன. இவற்றை முறையே $\beta(m, n)$ $\Gamma(n)$ எனக்குறித்து பீட்டா, காமா சார்புகள் என அழைக்கிறோம்.

§ **63. பீட்டா சார்பு** (Beta Function)

$\int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\cdot dx$ என்பது ஒரு m, n-ன் சார்பு.

(i) $m \geq 1$ என்ற மதிப்புகளுக்குத் தொகுபடு சார்பு $x = 0$ எனும் புள்ளியில் தொடர்ச்சியாக உள்ளது. ஆனால் $m < 1$ மதிப்புகளுக்கு $x \to 0$ எனும்போது தொகுபடு சார்பு முடிவிலியை நெருங்குகிறது.

(ii) $n \geq 1$ மதிப்புகளுக்கு, $x = 1$ எனும் புள்ளியில், தொடர்ச்சியாகவுளது. $n < 1$ மதிப்புகளுக்கு, $x \to 1$ எனும்போது முடிவிலியை நெருங்குகிறது.

(iii) 0 அல்லது 1 தவிர மற்ற x-ன் மதிப்புகளுக்குச் சார்பு தொடர்ச்சியாகவுளது.

எனவே, $\int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\cdot dx$ என்ற $\beta(m, n)$ சார்பு $m \geq 1$, $n \geq 1$ என்ற வெளியில் m, n என்ற சாராமாறிகளில் ஒரு வரையறுத்த தொகையீடாகும்.

§ 64. $m < 1 \, , n < 1$ **மதிப்புகளுக்கு** $\beta\,(m, n)$ **ஒருங்குதல்.**

$$\int_0^1 x^{m-1}\,(1-x)^{n-1}\,dx = \int_0^{\frac{1}{2}} x^{m-1}\,(1-x)^{n-1}\cdot dx$$

$$+ \int_{\frac{1}{2}}^1 x^{m-1}\,(1-x)^{n-1}\cdot dx$$

$$= I_1 + I_2 \text{ என்போம்.}$$

$n = 0$ **எல்லையில் ஒருங்குதல்**

$$I_1 = \int_0^{\frac{1}{2}} x^{m-1}\,(1-x)^{n-1}\cdot dx$$

$f(x) = \dfrac{(1-x)^{n-1}}{x^{1-m}}$ என்றும், ஒப்புமைச்சார்பு

$g(x) = \dfrac{1}{x^{1-m}}$ என்றுங் கொண்டால்

$$\underset{x \to 0}{\text{எல்லை}} \frac{f(x)}{g(x)} = \underset{x \to 0}{\text{எல்லை}} \frac{(1-x)^{n-1}}{x^{1-m}} \cdot \frac{x^{1-m}}{1} = 1$$

இங்கு $\mu = 1 - m$

$\therefore$ ஒருங்கக் கட்டுப்பாடு $\mu < 1$ என்பதிலிருந்து

$1 - m < 1 \qquad \therefore \; -m < 0$

அதாவது, $m > 0$ எனில் I_1 ஒருங்கும்.

$x = 1$ **எல்லையில் ஒருங்குதல்**

$$I_2 = \int_{\frac{1}{2}}^1 x^{m-1}\cdot(1-x)^{n-1}\cdot dx$$

இங்கு $f(x) = \dfrac{x^{m-1}}{(1-x)^{1-n}}$

$(g\,x) = \dfrac{1}{(1-x)^{1-n}}$

$$\therefore \lim_{x\to 1} \frac{f(x)}{g(x)} = \lim_{x\to 1} \frac{x^{m-1}}{(1-x)^{1-n}} \cdot \frac{(1-x)^{1-n}}{1} = 1$$

(எல்லை = limit)

$$\mu = 1 - n$$

$\therefore$ $1 - n < 1$ அதாவது $n > 0$ எனில் I_2 ஒருங்கும்.

முடிவு : $\int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\,dx$ **என்ற தொகை** m, n **மிகை எண்களானுல்** (> 0), **வரையறுத்த தொகையீடாகும்.** m, n **வெவ்வேறு மிகை மதிப்புகள் பெற்றுவரும் தொகையீடுகளே பீட்டா சார்புகள் ஆகும்.**

$\beta(m, n) = \int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\cdot dx$ $(m > 0, n > 0)$ என்ற தொகையீட்டில், $x = \sin^2\theta$ எனப்பிரதியிட

$x = 0$ என, $\theta = 0$; $x = 1$ என, $\theta = \frac{\pi}{2}$

$dx = 2\sin\theta \cdot \cos\theta \cdot d\theta$

$$\therefore \int_0^1 x^{m-1}(1-x)^{n-1}\cdot dx$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \sin^{2m-2}\theta \cdot \cos^{2n-2}\theta \cdot 2\sin\theta \cdot \cos\theta\, d\theta$$

$$= 2\int_0^{\frac{\pi}{2}} \sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta \cdot d\theta$$

$$= 2\frac{(2m-2)(2m-4)\ldots\ldots(2n-2)(2n-4)\ldots}{(2m+2n-2)(2m+2n-4)\ldots\ldots}$$

குறிப்பு : $(2m-1), 2n-1)$ இரட்டைப்படை முழு **எண்** களானுல் முடிவுப் பெருக்கல் $\frac{\pi}{2}$.

§ 65. பீட்டா சார்பின் பண்புகள்

பண்பு : 1 படிக்குறைப்பு

$$\beta(m, n) = \int_0^1 x^{m-1} \cdot (1-x)^{n-1} \cdot dx$$

$$= \int_0^1 (1-x)^{n-1} \, d\left(\frac{x^m}{m}\right)$$

$$= \frac{1}{m}\Big[x^m \cdot (1-x)^{n-1}\Big]_0^1 - \frac{1}{m}\int_0^1 x^m \cdot (n-1)(1-x)^{n-2}(-1)\, dx$$

$$= +\frac{(n-1)}{m}\int_0^1 x^m \cdot (1-x)^{n-2} \cdot dx$$

$$= \frac{(n-1)}{m}\,\beta(m+1,\, n-1) \qquad \ldots\text{(i)}$$

$$= -\frac{(n-1)}{m}\int_0^1 (-x) \cdot x^{m-1} \cdot (1-x)^{n-2} \cdot dx$$

$$= -\frac{(n-1)}{m}\int_0^1 \overline{(1-x}-1) \cdot x^{m-1} \cdot (1-x)^{n-2} \cdot dx$$

$$= -\frac{n-1}{m}\int_0^1 x^{m-1}(1-x)^{n-1} \cdot dx$$

$$+\frac{n-1}{m}\int_0^1 x^{m-1}(1-x)^{n-2} \cdot dx$$

$$= -\left(\frac{n-1}{m}\right)\beta(m, n) + \left(\frac{n-1}{m}\right)\beta(m, n-1)$$

$$\therefore \left(1 + \frac{n-1}{m}\beta(m, n) = \frac{n-1}{m} \cdot \beta(m, n-1)\right.$$

$$\therefore \quad \beta(m, n) = \frac{n-1}{m+n-1}\beta(m, n-1) \ldots \text{(ii)}$$

(i)-லிருந்து, (a) n ஒரு மிகை முழுஎண் எனில்,

$$\beta(m, n) = \frac{n-1}{m}\beta(m+1, n-1)$$

இங்கு n-ன்படி குறைந்த அளவுக்கு m-ன்படி உயர்கிறதைக் காணலாம்.

$$\therefore \quad \beta(m, n) = \frac{(n-1)(n-2)}{m(m+1)} \cdot \beta(m+2, n-2)$$

$$\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots$$

$$= \frac{(n-1)(n-2)\ldots\ldots 2 \cdot 1}{m(m+1)\ldots(m+n-2)} \beta(m+n-1, 1)$$

$$= \frac{(n-1)!}{m(m+1)\ldots(m+n-2)} \int_0^1 x^{m+n-2}\, dx$$

$$= \frac{(n-1)!}{(m(m+1)\ldots(m+n-2)} \cdot \frac{1}{(m+n-1)}$$

(b) m, n இரண்டும் முழு எண்களெனில்

$$\beta(m, n) = \frac{(m-1)!\,(n-1)!}{m+n-1)!}$$

(ii)-லிருந்து, $\beta(m, n) = \dfrac{n-1}{(m+n-1)}\beta(m, n-1)$

$$= \frac{(n-1)(n-2)}{(m+n-1)(m+n-2)}\beta(m, n-2)$$

$$\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots$$

$$= \frac{(n-1)(n-2)\ldots\ldots 1}{(m+n-1)(m+n-2)\ldots(m+1)} \beta(m, 1)$$

$$= \frac{(n-1)!}{(m+n-1)\ldots(m+1)} \int_0^1 x^{m-1} \cdot dx$$

$$= \frac{(n-1)!}{(m+n-1)(m+n-2)\ldots(m+1)} \cdot \frac{1}{m}$$

$$= \frac{(n-1)!\,(m-1)!}{(m+n-1)!}$$

§ 64-ல் $(2m-1)$, $(2n-1)$ இரட்டைப்படை முழு எண்களானல்,

$$\beta(m, n) = 2\,\frac{(2m-2)(2m-4)\ldots(2n-2)(2n-4)}{(2m+2n-2)(2m+2n-4)\ldots\ldots\ldots} \times \frac{\pi}{2}$$

எனக் கண்டோம்.

இதைச் சுருக்க, $\beta(m, n) = \dfrac{(m-1)(m-2)\ldots(n-1)(n-2)}{(m+n-1)(m+n-2)\ldots} \cdot \pi$

$(2m-1)$, $(2n-1)$ ஒற்றைப் படையானல்,

$$\beta(m, n) = 2\,\frac{(2m-2)(2m-4)\ldots 2\,(2n-2)(2n-4)\ldots 2}{(2m+2n-2)(2m+2n-4)\ldots\ldots\ldots 4} \times \int_0^{\frac{\pi}{2}} \sin\theta \cdot \cos\theta \cdot d\theta.$$

$$= \frac{2\,(m-1)(m-2)\ldots 1\,(n-1)(n-2)\ldots 1}{(m+n-1)(m+n-2)\ldots\ldots 2\ldots\ldots 2} \cdot \frac{1}{2}$$

$$= \frac{(m-1)!\,(n-1)!}{(m+n-1)!}$$ எனவாகும்.

குறிப்பு : (i) $\beta\ (m,\ n)$-ன் மதிப்பைத் தொடர் காரணியப் பெருக்கல்களாகக் காட்ட (factorial) m, n இரண்டும் மிகை முழு எண்களாக இருக்கவேண்டும்.

(ii) m அல்லது n முழு எண்ணுக இருப்பின் $(m-1)!$ அல்லது $(n-1)!$ தொகுதியில் வரும்.

பண்பு : 2.

$\beta\ (m, n) = \beta\ (n, m)$ எனக்காட்டலாம்.

$$\beta\ (m, n) = \int_0^1 x^{m-1}\ (1-x)^{n-1} \cdot dx$$

$1 - x = u$ என்க, $-dx = du$

$x = 0$ எனில் $u = 1$, $x = 1$ எனில் $u = 0$,

$$\therefore \quad \beta\ (m, n) = -\int_1^0 (1-u)^{m-1} \cdot u^{n-1} \cdot du$$

$$= \int_0^1 u^{n-1} \cdot (1-u)^{m-1}\ du.$$

$$= \beta\ (n, m).$$

எ. கா. 1.

$\int_0^1 x^3\ (1-x)^{\frac{5}{2}} \cdot dx$-ன் மதிப்பைக் காண்க.

$m - 1 = 3 \qquad \therefore \quad m = 4$

$n - 1 = \frac{5}{2} \qquad \therefore \quad n = \frac{7}{2}$

$$\therefore \quad \beta\left(4, \frac{7}{2}\right) = \beta\left(\frac{7}{2} \cdot 4\right) = \frac{1 \cdot 2 \cdot 3}{\frac{7}{2} \cdot \frac{9}{2} \cdot \frac{11}{2} \cdot \frac{13}{2}}$$

$$= \frac{2^5}{3 \cdot 7 \cdot 11 \cdot 13}$$

எ: கா. 2.

$$\int_0^1 x^4 (1-x)^{\frac{1}{4}} \cdot dx$$ — மதிப்புக் காண்க.

இங்கு $m = 5$, $n = \frac{5}{4}$

$$\therefore \quad \beta\left(5, \frac{5}{4}\right) = \frac{4 \cdot 3 \cdot 2 \cdot 1}{\frac{5}{4} \cdot \frac{9}{4} \cdot \frac{13}{4} \cdot \frac{17}{4} \cdot \frac{21}{4}} = \frac{2 \cdot 3 \cdot 4^6}{5 \cdot 9 \cdot 13 \cdot 17 \cdot 21}$$

$$= \frac{2^{13}}{5 \cdot 7 \cdot 9 \cdot 13 \cdot 17}$$

எ கா. 3.

$$\frac{\beta(p, q+1)}{q} = \frac{\beta(p+1, q)}{p} = \frac{\beta(p, q)}{p+q}$$

எனக்காட்டுக.

$$\beta(p, q+1) = \int_0^1 x^{p-1} (1-x)^q \, dx$$

$$= \int_0^1 (1-x)^q . d\frac{(x^p)}{p}$$

$$= \frac{1}{p} \left[x^p \cdot (1-x)^p\right]_0^1$$

$$+ \frac{1}{p}\int_0^1 x^p \cdot q \, (1-x)^{q-1} \cdot dx$$

$$= +\frac{q}{p}\int_0^1 x^p \cdot (1-x)^{q-1} \cdot dx.$$

$$= \frac{q}{p}\beta(p+1, q) \qquad \text{...... (1)}$$

$$\therefore \quad \frac{\beta(p, q+1)}{q} = \frac{\beta(p+1, q)}{p}$$

(1)-லிருந்து, $\beta(p, q+1) = \frac{q}{p}\,\beta(p+1, q)$

$$= \frac{q}{p}\int_0^1 x^p (1-x)^{q-1}\,dx$$

$$= -\frac{q}{p}\int_0^1 x^{p-1}\cdot(-x)(1-x)^{q-1}\cdot dx$$

$$= -\frac{q}{p}\int_0^1 x^{p-1}\,(\overline{1-x}-1)(1-x)^{q-1}\cdot dx$$

$$= -\frac{q}{p},\ \beta(p, q+1) + \frac{q}{p}\,\beta(p, q)$$

$$\therefore \quad \left(1+\frac{q}{p}\right),\ \beta(p, q+1) = \frac{q}{p}\,\beta(p, q)$$

$$\therefore \quad \frac{\beta(p, q+1)}{q} = \frac{\beta(p, q)}{(p+q)}$$

$$\therefore \quad \frac{\beta(p, q+1)}{q} = \frac{\beta(p+1, q)}{p} = \frac{\beta(p, q)}{p+q}$$

எ. கா. **4.**

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^p\theta \cdot \cos^q\theta\cdot d\theta.$$

$p > -1, = \frac{1}{2}\beta\left(\frac{p+1}{2}, \frac{q+1}{2}\right)$

$q > -1$

$$B\left(\frac{p+1}{2}, \frac{q+1}{2}\right) = \int_0^1 x^{\frac{p-1}{2}} (1-x)^{\frac{q-1}{2}} dx$$

0, 1 எல்லைகளில் தொகுபடும் சார்பு ஒருங்கக் கட்டுப்பாடு

$\frac{p+1}{2} > 0,$ அதாவது $p > -1$

$\frac{q+1}{2} < 0$ அதாவது $q > -1$

$x = \sin^2\theta$ என்றிட,

$$\beta\left(\frac{p+1}{2}, \frac{q+1}{2}\right) = \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cos^{q-1}\theta \cdot 2\sin\theta \cdot \cos\theta \cdot d\theta$$

$$= 2\int_0^{\frac{\pi}{2}} \sin^p\theta \cdot \cos^q\theta \cdot d\theta$$

$$\therefore \int_0^{\frac{\pi}{2}} \sin^p\theta \cdot \cos^q\theta \cdot d\theta = \frac{1}{2} B\left(\frac{p+1}{1}, \frac{q+1}{2}\right)$$

எ. கா. 5.

மதிப்பிடுக. $\int_0^2 x^4 (8-x^3)^{-\frac{1}{3}} \cdot dx$

$x^3 = 8u$ என்றிட

$x = 2u^{\frac{1}{3}}, \ 3x^2\, dx = 8\, du$

$x = 0$ எனில், $u = 0$; $x = 2$ எனில், $u = 1$

$$\therefore \int_0^2 x^4 (8 - x^3)^{-\frac{1}{3}} dx = \int_0^1 4u^{\frac{2}{3}} 8^{-\frac{1}{3}} (1-u)^{-\frac{1}{3}} \times \tfrac{8}{3} . du.$$

$$= \tfrac{16}{3} \int_0^1 u^{\frac{5}{3}-1} (1-u)^{\frac{2}{3}-1} \; du$$

$$= \tfrac{16}{3} \beta \left(\tfrac{5}{3}, \tfrac{2}{3}\right)$$

பண்பு : 3.

$$\beta (m, n) = \int_0^\infty \frac{x^{n-1}}{(1 \times x)^{m+n}} dx \text{ எனக்காண்க.}$$

$$\beta (m, n) = \int_0^1 x^{m-1} \cdot (1-x)^{n-1} \, dx$$

இங்கு $x = \dfrac{1}{1+y}$ எனப்பிரதியிட

$$dx = -\frac{1}{(1+y)^2} dy$$

$x = 0$ எனில், $y = \infty$

$x = 1$ எனின, $y = 0$

$$\therefore \beta (m, n) = -\int_\infty^0 \left(\frac{1}{1+y}\right)^{m-1} \cdot \left(1 - \frac{1}{1+y}\right)^{n-1} \cdot \frac{1}{(1+y)^2} \cdot dy$$

$$= \int_0^\infty \frac{1}{(1+y)^{m-1}} \cdot \frac{y^{n-1}}{(1+y)^{n-1}} \cdot \frac{1}{(1+y)^2} \cdot dy$$

$$= \int_0^\infty \frac{y^{n-1}}{(1+y)^{m+n}} \cdot dy = \int_0^\infty \frac{x^{n-1}}{(1+x)^{m+n}} \cdot dx$$

குறிப்பு :

$$\beta(m, n) = \beta(n, m)$$

$$\therefore \int_0^\infty \frac{x^{n-1} \cdot dx}{(1+x)^{m+n}} = \int \frac{x^{m-1} \cdot dx}{(1+x)^{m+n}}$$

எ. கா. 1.

$$\int_0^\infty \frac{x^{m-1} \cdot dx}{(a+bx)^{m+n}} = \frac{1}{a^n \cdot b^m} \cdot \beta(m, n)$$ என நிறுவுக.

$\dfrac{x}{a+bx} = \dfrac{u}{b}$ என்றிட,

$$bx = au + bu \cdot x \qquad \therefore \quad bx(1-u) = au$$

$$\therefore \quad x = \frac{au}{b(1-u)}$$

$$\therefore \quad dx = \frac{a}{b} \frac{[(1-u) - (-1) \cdot u]\, dx}{(1-u)^2}$$

$$= \frac{a \cdot du}{b(1-u)^2}$$

$x = 0$ எனில், $u = 0$; $x = \infty$ எனில், $u = 1$

$$\therefore \int_0^\infty \frac{x^{m-1} \cdot dx}{(a+bx)^{m+n}} = \int_0^\infty \frac{x^{m+n} \cdot x^{-n-1}}{(a+bx)^{m+n}} \cdot dx$$

$$= \int_0^\infty \left[\frac{x}{(a+bx)}\right]^{m+n} \cdot \frac{dx}{x^{n+1}}$$

$$= \int_0^1 \frac{u^{m+n}}{b^{m+n}} \times \frac{b^{n+1}(1-u)^{n+1}}{(au)^{n+1}} \cdot \frac{a\,du}{b(1-u)^2}.$$

$$= \frac{ab^{n+1}}{b^{m+n+1}\cdot a^{n+1}} \int_0^1 u^{m-1}(1-u)^{n-1}\cdot du$$

$$= \frac{1}{a^n \cdot b^m}\beta(m, n)$$

எ. கா. 2.

$$\int_0^\infty \frac{x^{m-1}+x^{n-1}}{(1+x)^{m+n}}\,dx = 2\beta(m, n)$$ எனக்காட்டுக.

$$\int_0^\infty \frac{x^{m-1}+x^{n-1}}{(1+x)^{m+n}} = \int_0^\infty \frac{x^{m-1}\cdot dx}{(1+x)^{m+n}} + \int_0^\infty \frac{x^{n-1}\cdot dx}{(1+x)^{m+n}}$$

$$= \beta(m, n) + \beta(n, m)$$

$$= 2\beta(m, n)$$

எ. கா. 3.

$$\int_0^1 \frac{x^{m-1}+x^{n-1}}{(1+x)^{m+n}}\cdot dx = \beta(m, n)$$ என நிறுவுக.

$$\beta(m, n) = \int_0^\infty \frac{x^{m-1}}{(1+x)^{m+n}}\cdot dx = \int_0^1 \frac{x^{m-1}\cdot dx}{(1+x)^{m+n}}$$

$$+ \int_1^\infty \frac{x^{m-1}\cdot dx}{(1+x)^{m+n}}$$

2-வது தொகையீடு $\int_1^\infty \frac{x^{m-1}}{(1+x)^{m+n}} \cdot dx$-ல்

$x = \frac{1}{t}$ என்றிட, $x = 1$ எனில் $t = 1$

$x = \infty$ எனில் $t = \frac{1}{\infty} = 0.$

$$dx = -\frac{1}{t^2}\,dt.$$

$$\therefore \int_1^\infty \frac{x^{m-1} \cdot dx}{(1+x)^{m+n}} = \int_1^0 \frac{1}{t^{m-1}\left(1+\frac{1}{t}\right)^{m+n}}\left(-\frac{1}{t^2}\right) dt$$

$$= \int_0^1 \frac{1 \cdot t^{m+n}}{t^{m+1}(1+t)^{m+n}}\,dt.$$

$$= \int_0^1 \frac{t^{n-1}}{(1+t)^{m+n}} \cdot dt = \int_0^1 \frac{x^{n-1} \cdot dx}{(1+x)^{m+n}}$$

$$\therefore \quad \beta(m, n) = \int_0^1 \frac{x^{m-1} \cdot dx}{(1+x)^{m+n}} + \int_0^1 \frac{x^{n-1} \cdot dx}{(1+x)^{m+n}}$$

$$= \int_0^1 \frac{x^{m-1} + x^{n-1}}{(1+x)^{m+u}} \cdot dx.$$

எ. கா. 4.

$\int_a^b (x-a)^{l-1}(b-x)^{m-1} \cdot dx$ — மதிப்பிடுக.

$x = py + q$ என்று பிரதியிட்டு

$x = a$ எனும்போது, $y = 0$ ஆனால், $a = 0 + q$ (1)

$x = b$ எனும்போது $y = 1$ ஆனால் $b = p + q$ (2)

$= p + a$

$\therefore$ (1), (2) லிருந்து, $x = (b - a)\,y + a$

$$\therefore\quad (b - x) = (b - a) - (b - a)y$$

$$= (b - a)(1 - y)$$

$$\therefore\quad dx = (b - a) \cdot dy$$

$$\therefore \int_a^b (x - a)^{l-1} \cdot (b - x)^{m-1} \cdot dx = \int_0^1 (b - a)^{l-1} \cdot$$

$$y^{l-1} \cdot (b - a)^{m-1} \cdot (1 - y)^{m-1} (b - a) \cdot dy$$

$$= (b - a)^{l+m-1} \int_0^1 y^{l-1} \cdot (1 - y)^{m-1} \cdot dy$$

$$= (b - a)^{l+m-1}\, \beta\,(l, m)$$

எ.கா. 5

$$\int_0^n \left(1 - \frac{t}{n}\right)^n \cdot t^{x-1} \cdot dt$$

$= n^x \cdot \beta\,(x, n + 1)$ எனக் காட்டுக

$\frac{t}{n} = u$ என்க.

$\frac{1}{n} \cdot dt = du \quad t = 0$ எனில், $u = 0$

$t = n$ எனில், $u = 1$

$$tn^{-1} = n^{x-1} \cdot u^{x-1}$$

$$\therefore \int_0^n \left(1 - \frac{t}{n}\right)^n \cdot t^{x-1} \cdot dt = \int_0^1 (1 - u)^{n+1-1} \cdot n^{x-1} \cdot u^{x-1} \cdot du$$

$$= n^x \int_0^1 u^{x-1} \cdot (1-u)^{\overline{n+1}-1}\, du$$

$$= n^x \cdot \beta\,(x, n+1),\ [x<0\,;\ n+1>0]$$

இங்கு $n = 1, 2, 3 \ldots\ldots$ என மிகை முழு எண்களானுல்

$$n^x\,\beta\,(x, n+1) = \frac{n^x \cdot n!}{x\,(x+1)\ldots\ldots(x+n)}$$

பயிற்சி 46

பின்வருவனவற்றை நிறுவுக.

1. $\beta\,(p, q) = \beta\,(p+1, q) + \beta\,(p, q+1)$

2. $\displaystyle\int_0^1 x^{m-1} \cdot (1-x^2)^{n-1} \cdot dx = \frac{1}{2}\,\beta\left(\frac{m}{2}, n\right)$

3. $\displaystyle\int_0^1 \frac{x \cdot dx}{\sqrt{1-x^5}} = \frac{1}{5}\,\beta\left(\frac{2}{5}, \frac{1}{2}\right)$

4. $\displaystyle\int_0^p x^m \cdot (p^q - x^q)^n \cdot dx = \frac{p^{\,qn+m+1}}{q}\,\beta\left(n+1, \frac{m+1}{q}\right)$

$p > 0,\ q > 0,\ m+1 > 0,\ n+1 > 0$

5. $\displaystyle\int_0^\infty \frac{x^{p-1}}{(1+x)^{p+q}}\, dx = \beta\,(p, q)$

6. $\displaystyle\int_0^1 x^{-\frac{1}{3}} \cdot (1-x)^{-\frac{2}{3}} \cdot dx = \frac{1}{9^{\frac{1}{3}}}\,\beta\left(\frac{2}{3}, \frac{1}{3}\right)$

$t =$ (இங்கு $\dfrac{x}{1-x} = \dfrac{at}{1-t}$ எனக்கொள்க.)

7. $$\int_0^1 \frac{x^{l-1}(1-x)^{m-1}}{(b+cx)^{l+m}} \cdot dx = \frac{\beta(l, m)}{(b+c)^l \cdot b^m}$$

8. $$\int_0^\pi \frac{\sin^{n-1} x \cdot dx}{(a+b\cos x)^n} = \frac{2^{n-1}}{(a^2-b^2)^{\frac{1}{2}n}}\, \beta\left(\frac{n}{2}, \frac{n}{2}\right) (a^2 > b^2$$ எனும்போது)

மதிப்பு காண்க :

9. $$\int_0^1 \frac{x^2\, dx}{(1-x^4)^{\frac{1}{2}}}$$

10. $$\int_0^1 \frac{dx}{(1+x^4)^{\frac{1}{2}}}$$

§ 66. காமா சார்புகள்

$\int_0^\infty e^{-x} \cdot x^n \cdot dx$, n ஒரு மிகை முழு எண் எனில், பகுத்துப் பிரித்தல் முறைப்படி n-ன் படியைக் குறைக்க.

$$In = \int e^{-x} \cdot x^n \cdot dx = \int x^n \cdot d(-e^{-x})$$

$$= -e^{-x} \cdot x^n + n \int e^{-x} \cdot x^{n-1} \cdot dx$$

$$= -e^{-x} \cdot x^n + n \cdot I_{n-1}$$

$$\therefore \int_0^\infty e^{-x} \cdot x^n \cdot dx = -\left[e^{-x} \cdot x^n\right]_0^\infty + n \cdot I_{n-1}$$

$$= n(n-1) \cdot I_{n-2}$$

$$\cdots\cdots\cdots\cdots\cdots\cdots\cdots\cdots$$

$$= n(n-1)\ldots\ldots 2 \cdot 1 \int_0^\infty e^{-x} \cdot dx$$

$$= n!\,\left(-e^{-x}\right)_0^\infty = n!\left(-\frac{1}{e^\infty} + 1\right)$$

$$= n!$$

விளா : 1.

$$\int_0^\infty e^{-az} \cdot z^n \cdot dz$$

$$= \int_0^\infty e^{-az} \cdot (az)^n \cdot \frac{d(az)}{a^{n+1}}$$

$$= \frac{1}{a^{n+1}} \int_0^\infty e^{-x} \cdot x^n \cdot dx, \quad az = x$$

$$= \frac{n!}{a^{n+1}}$$, இங்கு a ஒரு மிகை எண்.

விளா : 2.

$$\int_0^1 x^m (\log x)^n \cdot dx$$

$x = e^{-z}$ எனப்பிரதியிட்டால்

$dx = -e^{-z} \cdot dz$ $\quad x = 0$ எனில், $z = \infty$

$x = 1$ எனில், $z = 0$

$$\therefore \int_0^1 x^m (\log x)^n \cdot dx = -\int_\infty^0 e^{-mz} (-z)^{n-z} \cdot e \cdot dz$$

$$= (-1)^n \int_0^\infty e^{-(m+1)z} z^n \cdot dz$$

$$= (-1)^n \cdot \frac{n!}{(m+1)^{n+1}}$$

$$\therefore \int_0^1 x^m \left(\log \frac{1}{x}\right)^n \cdot dx = \int_0^1 x^m \cdot (\log 1 - \log x)^n \cdot dx$$

$$= (-1)^n \cdot \int_0^1 x^m (\log x)^n \cdot dx$$

$$= (-1)^{2n} \cdot \frac{n!}{(m+1)^{n+1}} = \frac{n!}{(m+1)^{n+1}}$$

§ **67.** $\int_0^\infty e^{-x} \cdot x^{n-1} \cdot dx$ என்ற தகாத்தொகை ஆயிலரின் இரண்டாவது வரையறுத்த தொகை அல்லது காமா சர்பு $\Gamma(n)$ என வழங்கப்படுகிறது.

(ஆயிலரின் முதல் வரையறுத்த தொகை

$\int_0^1 x^{m-1} \cdot (1-x)^{n-1} \cdot dx$-ஐ முன்பே கண்டோம்)

$$\Gamma(n+1) = \int_0^\infty e^{-x} \cdot x^n \cdot dx \qquad \int_0^\infty x^n \, d(-e^{-x})$$

$$= \left[-e^{-x} x^n\right]_0^\infty + \int^\infty e^{-x} \, dx^n$$

$$= 0 + n \int_0^\infty e^{-x} \cdot x^{n-1} \, dx$$

$$= n \, \Gamma(n)$$

$\therefore$ n ஒரு மிகை முழு எண் எனில்

$$\Gamma(n+1) = 1 \cdot 2 \cdot 3 \ldots\ldots n = n! \quad (\S\ 66)$$

கிளை 1.

$$\int_0^1 \frac{\log x}{(1-x)} \cdot dx$$

$$= \int_0^1 \log x \, (1 + x + x^2 + \ldots\ldots) \, dx$$

$\because \quad x < 1$ எனில் $\dfrac{1}{1-x} = 1 + x + x^2 + \ldots\ldots \infty$ க்கு

$$= \int_0^1 \log x \cdot dx + \int_0^1 x \log x \, dx + \ldots\ldots +$$

$$= \sum_{n=0}^{\infty} \int_0^1 x^n (\log x)^1 dx$$

$$= \sum_{n=0}^{\infty} (-1) \frac{1}{(n+1)^{1+1}} \quad [\S\ 66 \text{ கிளை 2-ல் கண்டபடி}]$$

$$= -\left(1 + \frac{1}{2^2} + \frac{1}{3^2} + \ldots\ldots \right)$$

அதுபோலவே,

$$\int_0^1 \frac{\log x}{1+x} \cdot dx$$

$$= \int_0^1 \log x \,(1 - x + x^2 - x^3 + \ldots\ldots)\, dx \quad x < 1$$

$$= -\left(1 - \frac{1}{2^2} + \frac{1}{3^2} - \ldots\ldots \right)$$

பயிற்சிகள் 47

நிறுவுக :

1. $\displaystyle\int_0^1 \left[\log \left(\frac{1}{x} \right) \right]^n \cdot dx = n\,!$

2. $\displaystyle\int_0^\infty a^{-x} \cdot x^n \cdot dx = \frac{n\,!}{(\log a)^{n+1}}$

3. $$\int_0^1 \frac{\log x}{(1 - x^2)}\, dx = -\frac{\pi^2}{8}$$

4. $$\int_0^1 \frac{1}{x} \log \frac{(1 + x)}{(1 - x)}\, dx = \frac{\pi^2}{4}$$

5. $$\int_0^1 \frac{(\log x)^{2n-1}}{1 - x} \cdot dx = -1 \cdot 2 \cdot 3 \ldots (2n - 1)$$

$$\times \left[1 + \frac{1}{2^{2n}} + \frac{1}{3^{2n}} + \ldots \right]$$

§ **68.** கொடுத்த 0, 1 எல்லைகளில் காமா சார்பு ஒருங்குதலை இங்கு ஆராய்வோம்.

$$\Gamma(n) = \int_0^\infty e^{-x} \cdot x^{n-1} \cdot dx$$

(i) $n \geq 1$ எனும்போது தொகுபடும் சார்பு, $x = 0$ புள்ளியில் தொடர்ச்சியாயுள்ளது.

(ii) $n < 1$ எனும்போது, $x = 0$ புள்ளியில், தொடர்ச்சியற்று முடிவிலியாகிறது.

இப்போது

$$\Gamma(n) = \int_0^\infty e^{-x} \cdot x^{n-1} \cdot dx = \int_0^1 e^{-x} \cdot x^{n-1} \cdot dx$$

$$+ \int_1^\infty e^{-x} \cdot x^{n-1} \cdot dx$$

$$= I_1 + I_2$$

எனப்பிரித்து $n < 1$ எனும் மதிப்புகளில் ஆராய்வோம்.

0-ல் ஒருங்குதல் :

$$I_1 = \int_{0}^{1} e^{-x} \cdot x^{n-1}\, dx$$

இங்கு, $f(x) = \dfrac{e^{-x}}{x^{1-n}}$, ஒப்புமைச் சார்பு $g(x) = \dfrac{1}{x^{1-n}}$

$$\therefore \underset{x \to 0}{\text{எல்லை}} \frac{f(x)}{g(x)} = \underset{x \to 0}{\text{எல்லை}} \frac{e^{-x}}{x^{1-n}} \times \frac{x^{1-n}}{1} = 1$$

$$\mu = 1 - n < 1$$

அதாவது $n > 0$ மதிப்புகளுக்கு

$$\int_0^1 \frac{1}{x^{1-n}} \cdot dx, \text{ அல்லது } \int_0^1 x^{n-1} \cdot dx \text{ ஒருங்கும்.}$$

அதுபோலவே, $I_1 = - e^{-x} \cdot x^{n-1} \cdot dx$-ம் ஒருங்கும்.

∞-ல் ஒருங்குதல்:

$$e^x = 1 + \frac{x}{1!} + \frac{x^2}{2!} + \dots + \frac{x^{n+1}}{(n+1)!} + \dots \text{ என்ற}$$

முடிவிலித் தொடரிலிருந்து $e^x > e^{n+1}$ என அறிகின்றோ

$$\therefore \quad e^{-x} < x^{-n-1}$$

$$\therefore \quad x^{n-1} e^{-x} < x^{n-1} \cdot x^{-n-1}$$

$$< \frac{1}{x^2}$$

$$\therefore \quad I_2 = \int_1^X x^{n-1} \cdot e^{-x} \cdot dx < \int_1^X \frac{1}{x^2}\, dx$$

$$< \left(- \frac{1}{x} \right)_1^X$$

$$< - \frac{1}{X} + 1$$

$\therefore \quad X > 1$ எனும்போது $\int_1^X \frac{1}{x^2}\, dx$ மேல் வரம்புள்ளது. அது

போலவே, $\int_1^X x^{n-1} \cdot e^{-x} \cdot dx$ மேல் வரம்பு கொண்டது.

அதாவது,

n-ன் எல்லா மிகை மதிப்புகளுக்கும் $x \to \infty$ எனும்போது

$I_2 = \int_1^\infty x^{n-1} \cdot e^{-x} \cdot dx$ ஒருங்கும்.

முடிவு

$$\Gamma(n) = \int_0^\infty x^{n-1} \cdot e^{-x} \cdot dx$$

n-ன் எல்லா மிகை மதிப்புகட்கும் ஒரு வரையறுத்த தொகையாகும்.

கிளை : **1.** $\Gamma(1) = \int_0^\infty e^{-x} \cdot dx = -\left(e^{-x}\right)_0^\infty$

$\therefore \quad \Gamma(1) = 1 \qquad\qquad = 1 - \frac{1}{e^\infty} = 1$

கிளை : **2.** $\Gamma(0) = \int^\infty \frac{e^{-x}}{x} \cdot dx = \infty$ எனக்காணலாம்.

கிளை : **3.** n — மிகை முழு எண் எனில்,

$$\begin{aligned}
\Gamma(n+1) &= n\,\Gamma(n) \\
\Gamma(n) &= (n-1)\,\Gamma(n-1) \\
&= (n-1)\,(n-2)\,\Gamma(n-2) \\
&= (n-1)\,(n-2) \ldots\ldots 2\cdot1\,\Gamma(1) \\
&= 1\cdot2\cdot3 \ldots\ldots (n-1) = (n-1)!
\end{aligned}$$

§ 69. காமா பீட்டர் சார்புகளிடையேயுள்ள தொடர்புகள்.

(1) $\beta(m, n) = \dfrac{\Gamma(m)\,\Gamma(n)}{\Gamma(m+n)}$ என நிறுவுதல்.

$\int_0^\infty x^{n-1}\cdot e^{-x}\cdot dx$-ல் x-இருக்குமிடத்து zx என்றிட எல்லைகள் மாரு. இங்கு z ஆனது x-ஐயொட்டி ஒரு மாறிலி.

$$\Gamma(m) = \int_0^\infty (zx)^{m-1}\cdot e^{-zx}\cdot z\cdot dx$$

$$= \int_0^\infty z^{m} x^{m-1}\cdot e^{-zx}.\, zx\cdot dx \qquad \ldots\ldots (A)$$

$$\therefore \int_0^\infty x^{m-1}\cdot e^{-zx}\cdot dx = \frac{\Gamma(m)}{z^m} \qquad \ldots\ldots (B)$$

(A)-யிலிருந்து, $\Gamma(m)\cdot e^{-z}\cdot z^{n-1}$

$$= \int_0^\infty z^{m+n-1}\cdot e^{-z(1+x)}.\; x^{m-1}\cdot dx.$$

இரு புறமும் z-ன் சார்பாக, z-ஐயொட்டி $(0, \infty)$ எல்லைக்குள் தொகையிட,

$$\Gamma(m)\int_0^\infty e^{-z}\cdot z^{n-1}\cdot dz$$

$$= \int_0^\infty \left[\int_0^\infty e^{-z(1+x)}\cdot z^{m+n+1}\, dz\right] x^{m-1}\cdot dx.$$

$$\therefore \quad \Gamma(m)\,\Gamma(n) = \int_0^\infty \frac{\Gamma(m+n)}{(1+x)^{m+n}}\cdot x^{m-1}\cdot dx$$

(B)-யிலிருந்து

$$= \Gamma(m+n)\int_0^\infty \frac{x^{m-1}}{(1+x)^{m+n}}\cdot dx.$$

$$= \Gamma(m+n) . \beta(m,n)$$

$$\therefore \quad \beta(m,n) = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{\Gamma(m+n)}$$

(2) $\Gamma(\tfrac{1}{2}) = \sqrt{\pi}$ என நிறுவுதல்.

$$\beta(m,n) = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{\Gamma(m+n)}$$

$m = n = \frac{1}{2}$ என மதிப்பிட,

$$\beta(\tfrac{1}{2}, \tfrac{1}{2}) = \frac{\Gamma(\frac{1}{2})\,\Gamma(\frac{1}{2})}{\Gamma(1)} = [\Gamma(\tfrac{1}{2})]^2$$

$\because \quad \Gamma(1) = 1$

ஆனால்

$$\beta(m,n) = \int_0^1 x^{m-1}(1-x)^{n-1}.dx.$$

$x = \sin^2\theta$ என்றிட, $dx = 2\sin\theta\cos\theta\, d\theta$.

$$\beta(m,n) = 2\int_0^{\frac{\pi}{2}} \sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta\, d\theta.$$

$$\therefore \quad \beta(\tfrac{1}{2}, \tfrac{1}{2}) = 2\int_0^{\frac{\pi}{2}} \sin^0\theta \cdot \cos^0\theta \cdot d\theta.$$

$$= 2\int_0^{\frac{\pi}{2}} d\theta = 2.\frac{\pi}{2} = \pi$$

$$\therefore \quad [\Gamma(\tfrac{1}{2})]^2 = \pi$$

$$\Gamma(\tfrac{1}{2}) = \sqrt{\pi}$$

3. $\int_0^{\infty} e^{-x^2} \cdot dx = \frac{1}{2} \sqrt{\pi}$ என நிறுவுதல்.

$x^2 = t$ என்றிட, $2x \cdot dx = dt$

$$\therefore \quad dx = \frac{1}{2} \cdot \frac{dt}{\sqrt{t}}$$

$$\int_0^{\infty} e^{-x^2} \cdot dx = \int^{\infty} e^{-t} \cdot \frac{dt}{2t^{\frac{1}{2}}} = \frac{1}{2}\int_0^{\infty} e^{-t} \cdot t^{-\frac{1}{2}} \cdot dt$$

$$= \frac{1}{2} \int_0^{\infty} e^{-t} \cdot t^{\frac{1}{2}-1} \cdot dt$$

$$= \frac{1}{2} \Gamma\left(\tfrac{1}{2}\right) = \frac{1}{2} \sqrt{\pi}$$

4. $x + y < 1$ எனும்போது,

$$\int_0^1 x^{m-1} \left[\int_0^{1-x} y^{n-1} \cdot dy \right] dx = \frac{\Gamma(m)\Gamma(n)}{\Gamma(m+n+1)}$$

$$\int_0^{1-x} y^{n-1}\, dy = \frac{1}{n} \Big(y^n \Big)_0^{1-x} = \frac{(1-x)^n}{n}$$

$$\therefore \int_0^1 x^{m-1} \left[\int_0^{1-x} y^{n-1} \cdot dy \right] dx$$

$$= \frac{1}{n} \int_0^1 x^{m-1} (1-x)^n \cdot dx$$

$$= \frac{1}{n} \beta(m, n+1)$$

$$= \frac{1}{n} \frac{\Gamma(m)\,\Gamma(n+1)}{\Gamma(m+n+1)}$$

$$= \frac{1}{n} \frac{\Gamma(m)\, n \cdot \Gamma(n)}{\Gamma(m+n+1)}$$

$$= \frac{\Gamma(m)\,\Gamma(n)}{\Gamma(m+n+1)}$$

$\therefore \quad x + y < 1$ எனும்போது

$$\iint x^{m-1} \cdot y^{n-1} \cdot dx\, dy = \frac{\Gamma \cdot (m)\,\Gamma(n)}{\Gamma(m+n+1)}$$

5. $\int_0^1 \frac{x^{m-1} + x^{n-1}}{(1+x)^{m+n}} = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{\Gamma(m+n)}$ எனக் காட்டுக.

$$\beta(m, n) = \int_0^\infty \frac{y^{m-1} \cdot dy}{(1+y)^{m+1}}$$

$$= \int_0^1 \frac{y^{m-1} \cdot dy}{(1+y)^{m+n}} + \int_1^\infty \frac{y^{m-1}}{(1+y)^{m+n}}\, dy$$

$$= I_1 + I_2$$

I_2-ல், $y = \frac{1}{x}$ என்றிட, $I_2 = \int_0^1 \frac{x^{-1}}{(1+x)^{m+n}} dx$ எனவாகும்.

$\therefore \; y = x$ என, $I_1 = \int_0^1 \frac{x^{m-1}}{(1+x)^{m+1}}\, dx$

$$\therefore \; \beta(m, n) = \int_0^1 \frac{x^{m-1}}{(1+x)} \frac{dx}{m+n} + \int_0^1 \frac{x^{n-1}}{(1+x)^{m+n}}$$

$$= \int_0^1 \frac{x^{m-1} + x^{n-1}}{(1 + x)^{m+n}} dx$$

ஆனால், $\beta(m, n) = \frac{\Gamma(m)\Gamma(n)}{\Gamma(m+n)}$

$$\therefore \int_0^1 \frac{x^{m-1} + x^{n-1}}{(1 + x)^{m+n}} \cdot dx = \frac{\Gamma(m)\Gamma(n)}{\Gamma(m+n)}$$

6. $\int_0^\infty \frac{y^{m-1} \cdot dy}{(ay + b)^{m+n}} = \frac{1}{a^m b^n} \cdot \frac{\Gamma(m) \Gamma(n)}{\Gamma(m+n)}$ என நிறுவுக.

$$\int_0^\infty \frac{x^{m-1} \cdot dx}{(1 + x)^{m+u}} = m, n)$$

இங்கு, $x = \frac{ay}{b}$ என்றிட $dx = \frac{a}{b} \cdot dy$

$$\therefore \beta(m, n) = \int_0^\infty \frac{a^{m-1}}{b^{m-1}} \cdot \frac{y^{m-1}}{\left(1 + \frac{ay}{b}\right)^{m+n}} \times \frac{a}{b} \cdot dy$$

$$= \frac{a^m \cdot b^{m+n}}{b^m} \int_0^\infty \frac{y^{m-1} \cdot dy}{(ay+b)^{m+n}}$$

$$= a^m \cdot b^n \int_0^\infty \frac{y^{m-1} \cdot dy}{(ay + b)^{m+n}}$$

$$\therefore \int_0^\infty \frac{y^{m-1} \cdot dy}{(ay + b)^{m+n}} = \frac{B(m, n)}{a^m \cdot b^n} = \frac{1}{a^m \cdot b^n} \frac{\Gamma(m)\Gamma(n)}{\Gamma(m+x)}$$

7. $x = \sin^2\theta$ என்று பிரதியிட,

$$B(m, n) = \int_0^1 x^{m-1}(1-x)^{n-1} \cdot dx$$

$$= 2\int_0^{\frac{\pi}{2}} \sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta \cdot d\theta$$

$$\therefore \int_0^{\frac{\pi}{2}} \sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta \cdot d\theta = \tfrac{1}{2} B(m, n)$$

$$= \frac{\Gamma(m)\,\Gamma(n)}{2\,\Gamma(m+n)}$$

இங்கு $2m = p,\ 2n = q$ என்றால்,

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cdot \cos^{q-1}\theta\, d\theta = \frac{\Gamma\left(\frac{p}{2}\right) \cdot \Gamma\left(\frac{q}{2}\right)}{2\,\Gamma\left(\frac{p+q}{2}\right)}$$

கிளை : 1.

$q = 1$ என்றால்

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cdot d\theta = \frac{\Gamma\left(\frac{p}{2}\right)\Gamma\left(\frac{1}{2}\right)}{2\,\Gamma\left(\frac{p+1}{2}\right)}$$

$$= \frac{\Gamma\left(\frac{p}{2}\right)}{\Gamma\left(\frac{p+1}{2}\right)} \cdot \frac{\sqrt{\pi}}{2}$$

விளா 2.

$p = q$ என்றால்

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cdot \cos^{p-1}\theta \cdot d\theta = \frac{\left[\Gamma\left(\frac{p}{2}\right)\right]^2}{2\,\Gamma(p)}$$

இடது பக்கம் $\int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cdot \cos^{p-1}\theta \cdot d\theta.$

$$= \int_0^{\frac{\pi}{2}} \frac{(2\sin\theta \cdot \cos\theta)^{p-1}}{2^{p-1}} \cdot d\theta$$

$$= \frac{1}{2^{p-1}} \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1} 2\theta \cdot d\theta$$

$$= \frac{1}{2^p} \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1} 2\theta \cdot d\theta$$

$$= \frac{1}{2^p} \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1} z \cdot dz\,;\quad z = 2\theta$$

$$= \frac{1}{2^p} \cdot 2 \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1} z \cdot dz$$

$$= \frac{1}{2^{p-1}} \int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1} 2 \cdot dz$$

$$= \frac{1}{2^{p-1}} \frac{\Gamma\left(\frac{p}{2}\right)}{\Gamma\frac{(p+1)}{2}} \cdot \frac{\sqrt{\pi}}{2} = \frac{\sqrt{\pi}}{2 \cdot 2^{p-1}} \cdot \frac{\Gamma\left(\frac{p}{2}\right)}{\Gamma\frac{(p+1)}{2}}$$

$$\therefore \frac{\left[\Gamma\left(\frac{p}{2}\right)\right]^2}{2\,\Gamma(p)} = \frac{\sqrt{\pi} \cdot \Gamma\left(\frac{p}{2}\right)}{2 \cdot 2^{p-1}\,\Gamma\left(\frac{p+1}{2}\right)}$$

$$\therefore \Gamma\left(\frac{p}{2}\right) \cdot \Gamma\left(\frac{p+1}{2}\right) = \frac{\sqrt{\pi}}{2^{p-1}} \cdot \Gamma(p)$$

இங்கு $p = 2m$ எனில்,

$$\Gamma(m) \cdot \Gamma\left(m + \frac{1}{2}\right) = \frac{\sqrt{\pi}}{2^{2m-1}} \cdot \Gamma(2m)$$

குறிப்பு, இதற்கு இரட்டிக்கும் வாய்பாடு (Duplication Formula) என்று பெயர்.

8. $$\int_0^{\infty} \frac{y^{m-1} \cdot dy}{(ay+b)^{m+n}} = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{a^m \cdot b^n \cdot \Gamma(m+n)}$$

என்று முன்பு அறிந்த முடிவில், $y = \tan^2\theta$ எனப் பிரதியிட, $dy = 2\tan\theta \cdot \sec^2\theta \cdot d\theta$

$y = 0$ என, $\theta = 0$; $y = \infty$ என $\theta = \frac{\pi}{2}$

$$\therefore \int_0^{\infty} \frac{y^{m-1} \cdot dy}{(ay+b)^{m+n}} = \int_0^{\frac{\pi}{2}} \frac{\tan^{2m-2}\theta \cdot 2\tan\theta \cdot \sec^2\theta \cdot d\theta}{(a\tan^2\theta + b)^{m+n}}$$

$$= 2 \int_0^{\frac{\pi}{2}} \frac{\sin^{2m-1}\theta \cdot \cos^{2m+2n}\theta \cdot d\theta}{(a\sin^2\theta + b\cos^2\theta)^{m+n} \cdot \cos^{2m-1}\theta \cos^2\theta}$$

$$= 2 \int_0^{\frac{\pi}{2}} \frac{\sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta \cdot d\theta}{(a\sin^2\theta + b\cos^2\theta)^{m+n}}$$

$$\therefore \int_0^{\frac{\pi}{2}} \frac{\sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta \cdot d\theta}{(a\sin^2\theta + b\cos^2\theta)^{m+n}}$$

$$= \frac{\Gamma(m)\,\Gamma(n)}{2a^m \cdot b^n \cdot \Gamma(m+n)}$$

9. $\displaystyle\int_0^{\infty} \frac{x^{n-1}}{1+x}\,dx = \frac{\pi}{\sin n\pi}$ என்று கொண்டு,

$\Gamma(n)\,\Gamma(1-n) = \dfrac{\pi}{\sin n\pi}$ எனக் காட்டுக.

$\displaystyle\int_0^{\infty} \frac{x^{n-1}}{1+x} \cdot dx$-ல் $x = \dfrac{y}{1-y}$ எனப் பிரதியிடுக.

$$dx = \frac{(1-y)\cdot 1 - y(-1)\,dy}{(1-y)^2}$$

$$= \frac{dy}{(1-y)^2}$$

$x = 0$ எனில் $y = 0$

$x = \infty$ எனில் $1 - y = 0$ i.e. $y = 1$

$$\int_0^\infty \frac{x^{n-1} \cdot dx}{(1+x)} = \int_0^1 \frac{y^{n-1} \cdot dy}{(1-y)^{n-1}\left(1+\frac{y}{1-y}\right)(i-y)^2}$$

$$= \int_0^1 y^{n-1} \cdot (1-y)^{-n} \cdot dy$$

$$= \int_0^1 y^{n-1} (1-y)^{\overline{1-n}-1} \cdot dy$$

$$= \beta(n, 1-n) = \frac{\Gamma(n)\,\Gamma(1-n)}{\Gamma(1)}$$

ஆனால் கொள்கைப்படி, $\displaystyle\int_0^\infty \frac{x^{n-1}}{1+x} \cdot dx = \frac{\pi}{\sin n\pi}$

$$\therefore \quad \Gamma(n)\,\Gamma(1-n) = \frac{\pi}{\sin n\pi} \quad \because \quad \Gamma(1) = 1$$

குறிப்பு : இங்கு $n = \frac{1}{2}$ என்றிட

$$[\Gamma(\tfrac{1}{2})]^2 = \frac{\pi}{\sin\frac{\pi}{2}} = \pi$$

$$\therefore \quad [\Gamma(\tfrac{1}{2})] = \pi$$ (முன்பு க்ண்டது)

10. $\Gamma\left(\frac{1}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \cdot \Gamma\left(\frac{3}{n}\right) \cdots\cdots \Gamma\left(\frac{n-1}{n}\right)$

$$= \frac{(2\pi)^{\frac{n-1}{2}}}{n^{\frac{1}{2}}}$$ என நிறுவுக.

இடது பக்கப் பெருக்கத்தை P என்போம்.

$$P^2 = \Gamma\left(\frac{1}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \Gamma\left(\frac{3}{n}\right) \cdots\cdots \Gamma\left(\frac{n-1}{n}\right)$$

$$\times \Gamma\left(\frac{n-1}{n}\right) \times \Gamma\left(\frac{n-2}{n}\right) \cdot \Gamma\left(\frac{n-3}{n}\right)$$

$$\ldots\ldots \Gamma\left(\frac{3}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \cdot \Gamma\left(\frac{1}{n}\right)$$

$$= \left[\Gamma\left(\frac{1}{3}\right) \cdot \Gamma\left(1-\frac{1}{n}\right)\right]\left[\Gamma\left(\frac{2}{n}\right) \Gamma\left(1-\frac{2}{n}\right)\cdots\right]$$

$$= a^2 \left[\frac{\pi}{12} - \left(1 - \frac{\sqrt{3}}{2} \right) \right]$$

$$\frac{a^2}{12} [\pi + 6\sqrt{3} - 12]$$

எ. கா. 4.


$\theta = 0,\ r = 3,\ r = 4$ என்ற கோடுகளுக்கும் $r = 5 \sin 2\theta$ என்ற வளைவரையின் கீழ்வரைக்கும் இடைப்பட்ட முதல் நாற்கூறுப் பகுதி (first quadrant) யிலுள்ள பரப்பைக் காண்க.

$\theta = 0$ என்பது x-அச்சு

$r = 3,\ r = 4$-வட்டங்கள்

இங்கு r-ன் எல்லைகள் 3, 4

θ-ன் எல்லைகள் $0, \frac{1}{2} \sin^{-1} \frac{r}{5}$



படம் 91.

பரப்புகாண அமைப்பு $\int [\int r\, d\theta]\, dr$

$$\therefore \quad A = \int_0^4 \left[\int_0^{\frac{1}{2}\sin^{-1}\frac{r}{5}} r \cdot d\theta \right] dr$$

r-ஐ மாறிலியாகக் கொள்ள

$$A = \int_0^4 r\,[\theta]_0^{\frac{1}{2}\sin^{-1}\frac{r}{5}} \cdot dr.$$

$$= \int_3^4 r\,\frac{1}{2}\,\sin^{-1}\left(\frac{r}{5}\right) \cdot dr$$

$$= \frac{1}{2}\int_3^4 r\,\sin^{-1}\left(\frac{r}{5}\right) \cdot dr$$

$\int r\,\sin^{-1}\left(\frac{r}{5}\right)\,dr$-ன் தொகை காண

$\frac{r}{5} = \sin u$ எனில், $r = 5\sin u$

$$\therefore \quad dr = 5\cos u \cdot du$$

$$\therefore \int r\,\sin^{-1}\left(\frac{r}{5}\right) dr = \int 5\sin u \cdot u \cdot 5\cos u \cdot du.$$

$$= \frac{25}{2}\int u \cdot (\sin 2u)\,du$$

$$= \frac{25}{2}\int u \cdot d\left(-\frac{\cos 2u}{2}\right)$$

$$= -\frac{25}{4}\left[u\cos 2u - \frac{1}{2}\sin 2u\right]$$

$$= -\frac{25}{4}u\,(1 - 2\sin^2 u) + \frac{25}{4}\sin u \cdot \cos u$$

$$= -\frac{25}{4}\sin^{-1}\frac{r}{5}\left(1 - \frac{2r^2}{25}\right) + \frac{25}{4} \cdot \frac{r}{5} \times \sqrt{1 - \frac{r^2}{25}}$$

$$= \frac{1}{4} r \sqrt{25 - r^2} + \frac{1}{4}(2r^2 - 25) \sin^{-1} \frac{r}{5}$$

$$\therefore \quad A = \frac{1}{8}\left[r \sqrt{25 - r^2} + (2r^2 - 25) \sin^{-1} \frac{r}{5} \right]_3^4$$

$$= \tfrac{1}{8} [(32 - 25) \sin^{-1} \tfrac{4}{5} - [18 - 25] \sin^{-1} \tfrac{3}{5}]$$

$$= \tfrac{7}{8} (\sin^{-1} \tfrac{4}{5} + \sin^{-1} \tfrac{3}{5})$$

$$= \frac{7}{8} \times \frac{\pi}{2} \quad \because \quad \sin^{-1}\frac{4}{5} + \sin^{-1}\frac{3}{5} = \frac{\pi}{2}$$

$$= \tfrac{7}{16} \pi$$

பயிற்சிகள் 54

இரு மாறித் தொகை முறையில் காண்க.

1. வளைவரை $r^2 = a^2 \cos 2\theta$-ன் பரப்பளவைக் காண்க.

2. $r = 2a \cos \theta$ என்ற வட்டத்திற்கு வெளிப்புறமாகவும் $r = a(1 + \cos \theta)$ என்ற நெஞ்சு வளைக்குட்புறமாகவுள்ள பரப்பளவைக் கணக்கிடுக.

3. வட்டம் $r = 2a \cos \theta$-க்கு உட்புறமாகவும், வட்டம் $r = a$-க்கு வெளிப்புறமாகவுமுள்ள பரப்பளவைக் காண்க.

4. $r = a(3 - \sin \theta)$, $r = 2a \cos 2\theta$ என்ற வளைவரைகளுக்கும் $\theta = 0$, $\theta = \dfrac{\pi}{6}$ என்ற கோடுகளுக்குமிடைப்பட்ட பரப்பளவைக் கணக்கிடுக.

5. $r = 2(\sin \theta + \cos \theta)$ என்ற வட்டத்திற்கு உள்ளும், $r = 2 \sin \theta$ என்ற வட்டத்திற்கு வெளியும் அடங்கிய, அச்சுகளின் முதல் நாற்கூறுப் பகுதியிலுள்ள பரப்பைக் காண்க.

6. $r(1 + \cos \theta) = a$ என்ற பரவளைவிற்கு வெளிப்புறமாகவும், $r = a(1 + \cos \theta)$ என்ற நெஞ்சு வளையத்திற்கு உட்புறமாகவும் அடங்கிய பரப்பை காண்க.

7. $r = 8 \cos \theta$, $r = 4$ என்ற வட்டங்களுக்குப் பொதுவான பரப்பைக் காணவும்.

8. $r^2 = a^2 \sin 2\theta$ என்ற வளைவரைக்கு உட்புறமாகவும், $r = a\sqrt{2} \sin \theta$ என்ற வட்டத்திற்கு வெளிப்புறமாகவும் முதற் நாற்கூறுப் பகுதியிலடங்கிய பரப்பைக் மதிப்பிடுக.

§ 78. துருவ ஆய எண்களில் ஒரு பரப்பின் பு.க. மையமும், நி. நெ. திறனும் காணல். (C. G. and M. I. in polar Co-ordinates)

(r, θ) என்ற ஒரு புள்ளியில் அடர்த்தி $= \rho\,(r, \theta)$ என்று கொள்வோம். நுண் பரப்பின் நிறை $= \rho \cdot r \cdot dr \cdot d\theta$.

$x = r \cos \theta$, $\quad y = r \sin \theta$ எனப் பிரதியிட

பு. க. மையம் : அமைப்புகளாவன

$$\bar{x} = \frac{\int\int \rho \cdot r^2 \cos \theta \cdot dr \cdot d\theta}{\int\int \rho \cdot r \cdot dr \cdot d\theta} \qquad \text{...... (i)}$$

$$\bar{y} = \frac{\int\int \rho \cdot r^2 \sin \theta \; dr \cdot d\theta}{\int\int \rho \cdot r \cdot dr \cdot d\theta} \qquad \text{...... (ii)}$$

$$\therefore \quad \bar{r} = \sqrt{\bar{x}^2 + \bar{y}^2} \qquad \text{...... (iii)}$$

$$\bar{\theta} = \tan^{-1}\left(\frac{\bar{y}}{\bar{x}}\right) \qquad \text{...... (iv)}$$

∴ துருவ ஆய எண்களில் பு. க. மையம் $(\bar{r}, \bar{\theta})$ என்பதை இந்நான்கு அடிப்படை அமைப்புகளிலிருந்து பெறலாம்.

நி. நெ. தி.

y-அச்சையொட்டி

$$I_y = \int\int \rho\, r^3 \cos^2\theta \cdot dr \cdot d\theta$$

x-அச்சையொட்டி $I_x = \int\int \rho\, r^3 \sin^2\theta \cdot dr \cdot d\theta$

∴ துருவ ஆய நி. நெ. தி. அல்லது

$$I_0 = I_y + I_x = \int\int \rho \cdot r^3 \cdot dr \cdot d\theta.$$

எ. கா. 1.

இரு மாறித் தொகையீட்டில் $r = a\,(1 + \cos\theta)$ என்ற நெஞ்சுவளையின் பு. க. மையம் காண்க. (அடர்த்தி மாறிலியெனக் கொள்க).

நெஞ்சுவளை தொடக்கக் கோட்டை யொட்டிச் சீராக அமைந்துள்ளது. ஆதலால் $\bar{y} = 0$

$$\bar{x} = \frac{\int\int \rho \cdot r\cos\theta \cdot r \cdot dr \cdot d\theta}{\int\int \rho \cdot r\, dr \cdot d\theta}$$

$$= \frac{\int_{-\pi}^{\pi}\int_{0}^{a(1+\cos\theta)} r^2 \cos\theta \cdot dr\, d}{\int_{-\pi}^{\pi}\int_{0}^{a(1+\cos\theta)} r \cdot dr \cdot a\theta}$$, அடர்த்தி மாறிலி.

$$= \frac{\int_{-\pi}^{\pi} \left(\frac{r^2}{2}\right)_0^{a(1+\cos\theta)} \cdot \cos\theta \cdot d\theta}{\int_{-\pi}^{\pi} \left(\frac{r^2}{2}\right)_0^{a(1+\cos\theta)} d\theta}$$

$$= \frac{\frac{1}{3}\int_{-\pi}^{\pi} a^3 (1 + \cos\theta)^3 \cdot \cos\theta \cdot d\theta}{\frac{1}{2}\int_{-\pi}^{+\pi} a^2 (1 + \cos\theta)^2\, d\theta}$$

$$= \frac{\frac{2}{3}a^3 \int_0^{\pi} 8\cos^6\frac{\theta}{2}\left(2\cos^2\frac{\theta}{2} - 1\right) \cdot d\theta}{a^2 \int_0^{\pi} 4\cos^4\frac{\theta}{2} \cdot d\theta}$$

$$= \frac{\frac{4}{3}\ a \cdot 2 \int_0^{\frac{\pi}{2}} \cos^6\phi\ (2\cos^2\phi - 1)\ d\phi}{2 \int_0^{\frac{\pi}{2}} \cos^4\phi \cdot d\phi}$$

$$= \frac{\frac{4}{3}\ a \int_0^{\frac{\pi}{2}} (2\cos^8\phi - \cos^6\phi)\ d\phi}{\int_0^{\frac{\pi}{2}} \cos^4\phi\ d\phi}$$

$$= \frac{\frac{4}{3}\ a \left(\frac{2 \cdot 7 \cdot 5 \cdot 3 \cdot 1}{8 \cdot 6 \cdot 4 \cdot 2} - \frac{5 \cdot 3 \cdot 1}{6\ \ 4 \cdot 2}\right) \frac{\pi}{2}}{\frac{3 \cdot 1}{4 \cdot 2}\ \frac{\pi}{2}}$$

$$= \frac{4}{3}\ a\ \frac{5 \cdot 3 \cdot 1}{6 \cdot 4 \cdot 2} \times \frac{4\ \ 2}{3 \cdot 1} \left[\frac{7}{4} - 1\right]$$

$$= \frac{4 \cdot 5}{3 \cdot 6} \cdot \frac{3}{4} \cdot a = \frac{5}{6}\ a$$

எ. கா. 2.

$r^2 = a^2 \cos 2\theta$ என்ற வளைவரையின் ஒரு வளையத்தின் நி. நெ. திறனை அதன் தொடக்கக் கோட்டையொட்டி இருமாறித் தொகையீட்டில் கணக்கிடுக.

(i) $r^2 = a^2 \cos 2\theta$ வளைவரையின் சமன்பாடு $\pm\theta$ மதிப்புகளால் மாறுவதில்லை. ∴ தொடக்கக் கோட்டையொட்டிச் சீராக வுள்ளது.

(ii) $\frac{\pi}{4} < \theta < \frac{\pi}{2}$ மதிப்புகளுக்கு r^2 குறை மதிப்பு கொள்கிறது; ∴ இங்கு r கற்பனையாகும்.


(iii) $\theta = 0$ எனில் $r = \pm a$

$$\theta = \pm \frac{\pi}{4} \text{ எனில் } r = 0$$

$\therefore$ θ-வின் எல்லைகள் $-\frac{\pi}{4}, \frac{\pi}{4}$

r-ன் எல்லைகள் $0, a\sqrt{\cos 2\theta}$.

$\therefore$ OXஐ யொட்டி



படம் 92

நி. நெ. தி.

$$= \int_{-\frac{\pi}{4}}^{\frac{\pi}{4}} \int_{0}^{a\sqrt{\cos 2\theta}} \rho\, r^2 \sin^2 \theta \cdot r\, dr\, d\theta$$

$$= \rho \int_{-\frac{\pi}{4}}^{\frac{\pi}{4}} \left[\int_{0}^{a\sqrt{\cos 2\theta}} \cdot r^3 \cdot dr \right] \sin^2 \theta \cdot d\theta.$$

$$= \rho \int_{\frac{\pi}{4}}^{\frac{\pi}{4}} \left(\frac{r^4}{4}\right)_{0}^{a\sqrt{\cos 2\theta}} \cdot \sin^2 \theta \cdot d\theta.$$

$$= 2 \times \frac{1}{4} \rho \int_{0}^{-\frac{\pi}{4}} a^4 \cdot \cos^2 2\theta \cdot \sin^2 \theta \cdot d\theta.$$

$$= \frac{a^4 \rho}{2} \int_0^{\frac{\pi}{2}} \cdot \cos^2 \alpha \cdot \sin^2 \frac{\alpha}{2} \cdot d\left(\frac{\alpha}{2}\right); \quad \alpha = 2\theta.$$

$$= \frac{a^4 \rho}{4} \int_0^{\frac{\pi}{2}} \cos^2 \alpha \, \frac{(1 - \cos \alpha)}{2} \cdot d\alpha.$$

$$= \frac{a^4 \rho}{8} \int_0^{\frac{\pi}{2}} (\cos^2 \alpha - \cos^3 \alpha) \, d\alpha$$

$$= \frac{a^4 \rho}{8} \left(\frac{1}{2} \cdot \frac{\pi}{2} - \frac{2}{3} \right) = \frac{a^4 \rho}{96} (3\pi - 8)$$

வளையின் நிறை

$$M = \int_{-\frac{\pi}{4}}^{\frac{\pi}{4}} \int_0^{a\sqrt{\cos 2\theta}} \rho \cdot r \cdot dr \cdot d\theta.$$

$$= 2\rho \int_0^{\frac{\pi}{4}} \left(\frac{r^2}{2}\right)_0^{a\sqrt{\cos^2 \theta}} \cdot d\theta.$$

$$= \rho \int_0^{\frac{\pi}{4}} a^2 \cos 2\theta \cdot d\theta$$

$$= \rho \cdot a^2 \left(\frac{\sin 2\theta}{2}\right)_0^{\frac{\pi}{4}} = \frac{\rho a^2}{2}$$

$$\therefore \quad \text{நி. நெ. தி.} = \left(\frac{\rho a^2}{2}\right) \cdot \frac{a^2}{48}(3\pi - 8)$$

$$= M \cdot \frac{a^2}{48}(3\pi - 8)$$

பயிற்சிகள் 55

இருமாறித் தொகையீட்டில் துருவ ஆய அளவுகளில் பின்வருவனவற்றைச் செய்க.

1. ஒரு வட்டத்தினுள் அடர்த்தி ஒவ்வொரு புள்ளியிலும், வட்டத்தின் சுற்றளவின் மேலுள்ள ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்து அதன் தூரத்திற்கு நேர்விகிதத்திலிருந்தால் வட்டத்தின் நிறையைக் கணக்கிடுக.

2. ஒரு வட்டத்தின் அடர்த்தி அதன் ஒரு குறிப்பிட்ட விட்டத்திலிருந்து உள்ள தூரத்தில் K மடங்கானல், வட்டத்தின் நிறையைக் கணக்கிடுக.

3. நெஞ்சுவளை $r = a(1 + \cos\theta)$-ன் அடர்த்தி தொடக்கக் கோட்டிலிருந்துள்ள தூரத்தின் இருபடிக்கு நேர் விகிதத்திலிருந்தால் அதன் நிறை மையம் காண்க.


4. $r = \sin 2\theta$ என்ற வளைவரையின் வளையத்தில் $\theta = 0$, $\theta = \frac{\pi}{2}$ என்ற கோடுகளுக்கிடைப்பட்ட பரப்பின் பு. க. மையம் காண்க.

5. $r^2 = a^2\cos 2\theta$ என்ற வளைவரை வடிவத் தகட்டின் நி. நெ. திறனை அதன் தளத்திற்குச் செங்குத்தாயும் ஆதி வழியாகச் செல்லும் அச்சையொட்டிக் காண்க.

6. ஒரு வட்டத் தகட்டின் அடர்த்தி அதன் சுற்றளவின் மேலுள்ள 0 என்ற, ஒரு புள்ளியிலிருந்துள்ள தூரத்தின் இருபடிக்கு நேர்விகிதத்திலுள்ளது. அதன் நி. நெ. திறனை, தளத்திற்குச் செங்குத்தாக O வழியாகச் செல்லும் அச்சையொட்டி மதிப்பிடுக.

§ 79 இருமாறித் தொகையீட்டு முறையில் உருளைப் பருமம் காணல். (Volume of Revolution)

(*a*) **தெக்காட்டி ஆய** எண்களில் (Cartesian Co-ordinates)



படம் 93

படத்தில் P என்ற (x, y) புள்ளி ஒரு அடைபட்ட பரப்பினுள் உள்ளது. OX-ஐயொட்டிப் பரப்புச் சுழலும்போது ஓர் உருளைப் பருமம் ஏற்படுகிறது. அதனைக் காண வேண்டும்.

P-யிலுள்ள நுண் பரப்பு $= \triangle x \cdot \triangle y$

OXஐ ஒரு முறை சுற்றும்போது நுண் பருமம் அண்ணளவாக

$$= 2\pi y(\triangle y \cdot \triangle x), \text{ பாப்பசு தேற்றப்படி}$$


$$\therefore \text{ உருளைப் பருமம்} = \int \int 2\pi y \cdot dy\, dx$$

ஏற்ற எல்லைகளில்

(*b*) **துருவ ஆய எண்களில்** (Polar Co-ordinates) **உருளைப் பருமம்**

அடைபட்ட வளைவரையின் சமன்பாடு $r = f(\theta)$ என்போம்.

$P(r, \theta)$ என்ற புள்ளியில் நுண் பரப்பு $= r \cdot d\theta \cdot dr$ தொடக்கக் கோட்டையொட்டிச் சுற்றும் ஆரை $MP = r \sin\theta$.



படம் 94


$\therefore$ ஒரு சுற்றில் ஏற்படும் நுண்பருமம்

$$= (2\pi \sin\theta)(r\, d\theta \cdot dr)$$
$$= 2\pi r^2 \sin\theta \cdot dr \cdot d\theta$$

$$\therefore \text{ உருளை நுண்பருமம்} = \int \int 2\pi r^2 \sin\theta \cdot dr \cdot d\theta$$

ஏற்ற எல்லைகளில்

எ. கா. 1



ஆரை a கொண்ட ஒரு கோளத்தின் பருமனை இருமாறித் தொகையீட்டு முறையில் கணக்கிடுக.

வட்டத்தின் சமன்பாடு

$$x^2 + y^2 = a^2$$

படம் 95

கோளத்தின் பருமம்

$$= \int_{-a}^{+a} \int_{0}^{y} 2\pi y \cdot dy \cdot dx$$

$$= 2\pi \int_{-a}^{+a} \int_{0}^{\sqrt{a^2 - x^2}} y \cdot dy \cdot dx.$$

$$= 2\pi \int_{-a}^{+a} \left(\frac{y^2}{2}\right)^{\sqrt{a^2 - x^2}} \cdot dx = \frac{2\pi}{2} \times 2 \int_{0}^{+a} (a^2 - x^2)\ dx$$

$$= 2\pi \left((a^2 x - \frac{x^3}{3}\right)_0^a = 2\pi \times \left(a^3 - \frac{a^3}{3}\right)$$

$$= \frac{4\pi\ a^3}{3}$$

எ. கா. 2.

$r = a\ (1 + \cos\theta)$ என்ற வளைவரை அதன் தொடக்கக் கோட்டை யொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமத்தை இருமாறித் தொகையீட்டு முறையில் காண்க.

$$V = \int_{0}^{\pi} \int_{0}^{r} 2\pi r^2 \sin\theta \cdot dr \cdot d\theta$$

$$= 2\pi \int_0^{\pi} \left[\int_0^{a(1+\cos\theta)} r^2 \cdot dr. \right] \sin\theta \cdot d\theta$$

$$= 2\pi \int_0^{\pi} \left(\frac{a^3}{3}\right)_0^{a(1+\cos\theta)} \sin\theta \cdot d\theta.$$

$$= \frac{2\pi a^3}{3} \int_0^{\pi} (1+\cos\theta)^3 \sin\theta \cdot d\theta$$

$$= \frac{\pi a^3}{3} \int_0^{\pi} 8\cos^6\frac{\theta}{2} \cdot 2\sin\frac{\theta}{2} \cdot \cos\frac{\theta}{2}\, d\left(\frac{\theta}{2}\right) \cdot 2.$$

$$= \frac{64\pi a^3}{3} \int_0^{\frac{\pi}{2}} \cos^7\phi \cdot \sin\phi\, d\phi \,; \qquad \frac{\theta}{2} = \phi$$

$$= \frac{64}{3}\pi a^3 \left(-\frac{\cos^8\phi}{8}\right)_0^{\frac{\pi}{2}}$$

$$= \frac{64}{3} \times \pi a^3 \cdot \frac{1}{8} = \frac{3}{8}\pi a^3.$$


§ **80.** **ஒரு வளைபரப்பின் கீழுள்ள பருமனை இருமாறித் தொகையீட்டில் காண்க.** (Volume under a Surface)

(i) தெக்காட்டின் ஆயங்கள் :

படத்தில் $Z = F(x, y)$ என்ற வளைபரப்பின் பகுதி S-ன் கீழ் ஒரு முப்பரிமாணப் பொருள் XY அடித்தளத்தின் மேலுள்ளது.

அடித்தளப்பரப்பை A என்போம். இப்பரப்பு $y = g(x)$, $y=f(x)$ $x=a$, $x=b$ என்ற எல்லைகளுக்கிடைப்பட்டது. மேல். கீழ் பரப்புகளை அடைக்கும் பக்கங்களாவன $x = a$, $x = b$ என்ற சம தளங்களும், $y = g(x)$, $y = f(x)$ என்ற நேர் உருளைகளுமாகும்.

கொடுக்கப்பட்ட எல்லைகளுக்கிடையிலுள்ள பொருளை Z ஆயத்திற்கு இணையான இணைகரத் திண்மம் (Parallelopiped) வடிவத்துள்ள நுண் பகுதிகளாகச் செய்வோம். பரப்பு A-யை X, y அச்சுகளுக்கிணையான பக்கங்களுள்ள நுண்ணிய $(\triangle x \cdot \triangle y)$ நீள் சதுரங்களாக்கினுல் அவை இத்திண்மங்களின் அடிப்பக்கங்களாகும்.



படம் 96

மேற்பரப்பு S-ல் P எனும் (x, y, z) புள்ளி ஒரு நுண் திண்மத்தின் ஒரு முனையென்றுல்,

P-யின் கீழுள்ள நுண்பகுதியின் பருமம் $= z \cdot \triangle y \cdot \triangle x.$

படத்தில் காட்டியவாறு,

முதலில் yz தளத்திற்கு இணையாகவுள்ள நுண் திண்மங்களை ஒன்று சேர்க்க, $\triangle y \to 0$ எனும்போது, $\triangle x$ ஓரம் மாறிலியாகவுள்ள மெல்லிய தகடு ஏற்படும்.

அதன் பருமம் $\triangle V$ எனில்

$$\triangle V = \left[\underset{\triangle y \to 0}{\text{எல்லை}} \sum_{g(x)}^{f(x)} (z \cdot dy) \right] \triangle x \cdot \text{ ஆகும்.}$$

$$= \left[\int_{y=g(x)}^{y=f(x)} z \cdot dy \right] \triangle x$$

பிறகு,

நுண்தகடுகளை $x = b$, $x = a$ என்ற எல்லைகளுக்குள் ஒன்று சேர்க்க, $\triangle x \to 0$ எனும் எல்லையின் பொருளின் பருமம் V கிடைக்கும்.

$$V = \underset{\triangle x \to a}{\text{எல்லை}} \sum_{x=a}^{x=b} \left[\int_{g(x)}^{f(x)} z \cdot dy \right] \triangle x$$

$$= \int_a^b \int_{g(x)}^{f(x)} z \cdot dy \cdot dx.$$

$$= \int_a^b \int_{g(x)}^{f(x)} F(x, y)\, dy \cdot dx$$ எனவாகும்.


குறிப்பு : xy தளத்திலுள்ள எல்லைகள்

$x = \psi(y)$, $x = \phi(y)$, $y = c$, $y = d$ என்றால்

$$V = \int_c^d \int_{\psi(y)}^{\phi(y)} F(x, y)\, dx \cdot dy$$ என்று எளிதில் அறியலாம்.

எ. கா. 1.

$x^2 + y^2 = 4$ என்ற நேர்வட்ட உருளை, $z = 0$, $y + 2 = 3$ என்ற சமதளங்கள் இவற்றிற்கிடைப்பட்ட பருமத்தை மதிப்பிடுக.



படம் 97

$x^2 + y^2 = 4$ என்ற வட்டம், உருளையின் xy தளத்தின்வெட்டு முகம்.

$y + z = 3$ என்ற தளம், X-அச்சுக்கு இணையாக உருளையை மேலே வெட்டி நீள் வட்டம் செய்கிறது.

இங்கு $z = f(x, y) = (3 - y)$

x-ன் எல்லைகள் $x^2 + y^2 = 4$-லிருந்து

$x = \pm \sqrt{4 - y^2}$

xy தளத்தில் வட்டம் Y-அச்சை வெட்டும் எல்லைகளைக் காண, $x = 0$ என்றிட, $y = \pm 2$

$$\therefore \quad V = \int_{-2}^{+2} \left[\int_{-\sqrt{4-y^2}}^{+\sqrt{4-y^2}} (3 - y) \cdot dx \right] dy.$$

$$= \int_{-2}^{+2} \left[\left(3x - \frac{xy}{2} \right)_{-\sqrt{4-y^2}}^{+\sqrt{4-y^2}} \right] dy$$

$$= 2 \int_0^2 [2 \cdot 3\sqrt{4 - y^2}]\, dy = 12 \int_0^2 \sqrt{4 - y^2} \cdot dy$$

$$= 12 \int_0^{\frac{\pi}{2}} 2\cos\theta \cdot 2\cos\theta \cdot d\theta, \; y = 2\sin\theta \text{ என்றிட}$$

$$\therefore \quad V = 48 \int_0^{\frac{\pi}{2}} \cos^2 d\theta = 48 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2} = 12\pi$$

எ. கா. 2.

$x^2 + y^2 = 1$ என்ற நேர்வட்ட உருளை, சமதளம் $Z = 0$, கனபரவளைவு $x^2 + y^2 = 4 - Z$ இவற்றிலடங்கிய பருமத்தைக் காண்க.

இங்கு,

$$Z = 4 - (x^2 + y^2); \; x^2 + y^2 = 1 \text{ ல் } y = 0 \text{ எனில் } x = \pm 1$$

$$V = \int_{-1}^{+1} \left[\int_{-\sqrt{1-x^2}}^{+\sqrt{1-x^2}} (4 - x^2 - y^2)\, dy \right] dx$$

$$= 2 \int_0 \left(4y - x^2 y - \frac{y^3}{3} \right)_{y = -\sqrt{1-x^2}}^{y = +\sqrt{1-x^2}} dx$$

$$= 4 \int_0^1 \left[\left(4\sqrt{1-x^2} - x^2\sqrt{1-x^2} - \frac{(1-x^2)^{\frac{3}{2}}}{3}\right)\right] dx$$

$x = \sin\theta$ என்றிட,

$$= 4 \int_0^{\frac{\pi}{2}} (4\cos\theta - \sin^2\theta \cdot \cos\theta - \tfrac{1}{3} \cdot \cos^3\theta) \cdot \cos\theta \, d\theta,$$

$$= 4 \int_0^{\frac{\pi}{2}} \left(4\cos^2\theta - \sin^2\theta \cdot \cos^2\theta - \frac{\cos^4\theta}{3}\right) d\theta$$

$$= 4 \left[4 \cdot \frac{1}{2} - \frac{1 \cdot 1}{4 \cdot 2} - \frac{1}{3} \cdot \frac{3 \cdot 1}{4 \cdot 2}\right] \frac{\pi}{2}$$

$$= 4 \left[2 - \frac{1}{8} - \frac{1}{8}\right] \frac{\pi}{2} = 4 \times \frac{7}{4} \cdot \frac{\pi}{2} = \frac{7}{2}\pi$$

எ. கா. 3.

$Z = x^2 + y^2$ என்ற கனபரவளைவுப் பரப்பின்கீழ் xy தளத்தில் $x = 1$, $y = 1$, $x + y = 3$ என்ற கோடுகளாலடைபடும் முக்கோணத்தின் மேலுள்ள பருமனைக் கணக்கிடுக.

இங்கு, $Z = f(x, y) = x^2 + y^2$

$y = 1$, $x + y = 3$ கோடுகள் வெட்டும் புள்ளியில் $x = 2$

$\therefore$ x-ன் எல்லைகள் $1, 2$

y-ன் எல்லைகள் $1, 3 - x$

$$\therefore \quad V = \int_1^2 \left[\int_1^{3-x} (x^2 + y^2) \cdot dy\right] dx$$

$$= \int_1^2 \left(x^2 y + \frac{y^3}{3}\right)_1^{3-x} \cdot dx$$

$$= \int_1^2 \{ x^2 (3 - x - 1) + \tfrac{1}{3} [(3 - x)^3 - 1] \} \; dx$$

$$= \int_1^2 [3x^2 - x^3 - x^2 + \tfrac{1}{3} (27 - x^3 - 27x + 9x^2 - 1)] \, dx$$

$$= \int_1^2 \left(2x^2 - x^3 + 9 - \frac{x^3}{3} - 9x + 3x^2 - \frac{1}{3} \right) dx$$

$$= \int_1^2 (- \tfrac{4}{3} x^3 + 5x^2 - 9x + \tfrac{26}{3}) \, dx$$

$$= \left[- \frac{4}{3}\left(\frac{x^4}{4} \right)_1^2 + \frac{5}{3} \cdot (x^3)_1^2 - \frac{9}{2}(x^2)_1^2 + \frac{26}{3} (x)_1^2 \right]$$

$$= [- \tfrac{1}{3} (15) + \tfrac{5}{3} \times 7 - \tfrac{9}{2} \times 3 + \tfrac{26}{3}]$$

$$= \left(- 5 + \frac{35}{3} - \frac{27}{2} + \frac{26}{3} \right) = \frac{-30+70-81+52}{6}$$

$$= \frac{11}{6}$$

எ. கா. 4.

$2x + y + z = 4$ என்ற தளத்தின் கீழும், $x^2 + y^2 = 1$ என்ற உருளையினுள்ளும் அமைந்த பருமத்தை முதல் அரைக்கால் வட்டப் பகுதியில் (frist octant) கணக்கிடுக.

$$z = f (x, y) = 4 - 2x - y$$

xy-தளத்திலுள்ள வட்டம் $x^2 + y^2 = 1$, x-அச்சை வெட்டும் புள்ளி $x = \pm 1$

$\therefore$ x-ன் எல்லைகள் XY-ன் நாற்பகுதியில் 0, 1

Y-ன் எல்லைகள் 0, $\sqrt{1 - x^2}$

$$V = \int_0^1 [\int_0^{\sqrt{1 - x^2}} (4 - 2x - y) \cdot dy] \, dx$$

$$= \int_0^1 \left(4y - 2xy - \frac{y^2}{y}\right) \cdot dx \Big|_{y=0}^{y=\sqrt{1-x^3}}$$

$$= 4\int_0^1 \left[4\sqrt{1-x^2} - 2x\sqrt{1-x^2} - \left(\frac{1-x^2}{2}\right)\right] dx$$

$$= 4\int_0^1 \sqrt{1-x^2} \cdot dx + \int_0^1 \sqrt{1-x^2}\, d(-x^2)$$

$$- \frac{1}{2}\left(x - \frac{x^3}{}\right)_0^1$$

$$= 4 \cdot \frac{\pi}{4} + \frac{2}{3}\left[\left(1-x^2\right)^{\frac{3}{2}}\right]_0^1 - \frac{1}{2}\left(1 - \frac{1}{3}\right)$$

$$= \pi + \tfrac{2}{3}(-1) - \tfrac{1}{2} \cdot \tfrac{2}{3} = \pi - 1$$

பயிற்சிகள் 56

இருமாறித் தொகையீட்டு முறையில் பின்வரும் முப்பரிமாணப் பொருள்களின் பருமம் காண்க :--

1. அச்சுகளாலும், $4x + 6y + 3z - 12$ என்ற தளத்தாலும் அடைபட்டது.

2. $y = e^x$ என்ற வளைவரைசார்ந்த உருளை தளங்கள் $z = y$, $z = 0$ $x = 2$ இவற்றிற்கிடைப்பட்டது.

3. $z = 9 - x^2 - y^2$ என்ற கன பரவளைவுக்குக் கீழாகவும் $x + 2y = 2$ என்ற தளத்திற்குப் பின்புறமாகவும் முதல் அரைக்கால் வட்டப் பகுதியில் (Frist Octant) அடங்கியது.

4. முதல் அரைக்கால் வட்டப்பகுதியில் $z = xy$ என்ற வளைபரப்புக்கும் $y = \dfrac{8}{x^2 + 4}$ என்ற உருளைக்கும் இடைப்பட்டது.

5. xy-தளம், $x + y^2 - 2y = 0$ என்ற உருளை, $z = 2y$ என்ற தளம் இவற்றாலடைபட்டது.


6. $z = 9 - x^2 - 9y$ என்ற வளைபரப்பு, xy-தளம் இவற்றினிடையேயுள்ளது.

7. $z = z^2 + y^2$, $y = 1 - x^2$ அச்சுகள், இவற்றிற்கிடையே முதல் அரைக்கால் வட்டப்பகுதியிலுள்ளது.

8. முதல் அரைக்கால் வட்டப்பகுதியில் $x^2 + y^2 = 1$ என்ற நேர்வட்ட உருளையினுள், அவ்வுருளையினுலும், $z = 4 - 2x - y$, $x = 0, y = 0, z = 0$ என்ற தளங்களினுலும் அடைக்கப்பட்டது.

§ 81. வளைவரப்பின் கீழுள்ள பருமம் — உருளை ஆயத் தொலைவுகள் (Volume under a surface in cylindrical Co-ordinates)

XY-தளத்தில் P-ன் வீழ்ச்சி P' (Projection of P) P'-ன் அளவுகள் (r, θ) $P'P = z$ என்றால், r, θ, z என்பன P-யின் உருளை ஆயத் தொலைவுகளாகும். $z = \theta\ (x, y)$ என்ற ஒரு வளை பரப்பின் சமன்பாட்டை $x = r \cos\ \theta$, $y = r \sin\theta$ எனப் பிரதியிட்டு $z = f\ (r, \theta)$ என்று மாற்றியமைக்கலாம்.



படம் 98

இப்போது, $z = f\ (r, \theta)$ என்ற வளைபரப்பின் ஒரு பகுதி S xy தளத்தில் வளைபரப்பு S-ன் வீழ்ச்சி $r = \phi\ (\theta)$, $r = \psi\ (\theta)$ என்ற வளைவரைகளுக்கும் $\theta = \alpha$, $\theta = \beta$ என்ற கோடுகளுக்கு மிடைப்பட்ட முப்பரிமாணப் பொருளின் பருமத்தை இருமாறித் தொகையீட்டு முறையில் காண்பதை விளக்குவோம்.

xy தளத்தில் P-யின் வீழ்ச்சி P^1


P'-ன் அளவுகள் (r, θ)

P-யின் அளவுகள் (r, θ, z)

$q = f\ (r, \theta)$

XY தளத்தில் கோணம் $(\beta - \alpha)$-ஐ, ஆரைக் கோடுகள் வரைந்து $\Delta\theta$ அளவுள்ள கணக்கற்ற நுண்கோணங்களாகவும், ஒன்றுக் கொன்று சமமாகவும் பிரிக்கின்றோம்.

பிறகு, O-ஐ மையமாகக் கொண்டு ஒன்றுக்கொன்று சம இடைவெளி $\triangle r$ உள்ள பொது மைய வட்டங்கள் வரைகின்றோம். இப்போது பரப்பு A ஆனது, P' எனும் புள்ளியிலுள்ளது போல்



படம் 99

கணக்கற்ற நுண் பரப்புகள் $rd\theta \cdot dr$, ஆகின்றன. P'-லுள்ள நுண்பரப்பின் மேல் உயர்த்திய நுண்பட்டகம் (prism)-Pயை ஒரு முனையாகக் கொண்டு S-வளை பரப்பின் கீழிருக்கும்

நுண்பட்டகத்தின் பருமம்

$$= z \cdot (r \cdot \triangle r \cdot \triangle\theta), \text{ அண்ணளவாக}$$

$\triangle\theta$யை மாறிலியாக வைத்து, θ. $\theta + \triangle\theta$ இவற்றிற்கு இடைப்பட்ட நுண் பட்டகங்களை யொன்று சேர்க்க, மெல்லிய ஒரு முனையில் வெட்டப்பட்ட முக்கோண வடிவப் பகுதி தகட்டின் பருமம்,

$$\triangle V = \left[\underset{\triangle r \to 0}{\text{எல்லை}} \sum_{\psi(\phi)}^{\phi(\theta)} (z \cdot r \cdot \triangle r) \right] \triangle\theta$$

$$= \left[\int_{\psi(\theta)}^{\phi(\theta)} zr \cdot dr \right] \cdot \Delta\theta$$ எனவாகும்.

பிறகு

இத்தகடுகளை ஒன்று சேர்க்கப்

பருமம் $V = $ எல்லை $\displaystyle\lim_{\Delta\theta \to \theta} \sum_{\theta=\alpha}^{\theta=\beta} \left[\int_{\psi(\theta)}^{\phi(\theta)} z \cdot r\, dr \right] \Delta\theta$

$$= \int_{\alpha}^{\beta} \int_{\psi(\theta)}^{\phi(\theta)} z \cdot r \cdot dr \cdot d\theta$$

$$= \int_{\alpha}^{\beta} \int_{\psi(\theta)}^{\phi(\theta)} \cdot f(r, \theta)\, r \cdot dr \cdot d\theta$$ என்ற அமைப்பாகும்.

எ. கா. 1.

$2x + y + z = 4$ என்ற சமதளத்தின் கீழும் $x^2 + y^2 = 1$ என்ற வட்டத்தின் சார்பான உருளையின் உள்ளும் அடங்கிய முதல் நாற்கூறுப் பகுதி (first quadrant) யிலுள்ள பருமத்தை, உருளை ஆயத் தொலைவுகள் (Cylindrical Co-ordinates) கொண்டு மதிப்பிடவும்.

இங்கு $x = r\cos\theta, \quad y = r\sin\theta$

$\therefore$ தளத்தின் சமன்பாடு, $z = 4 - 2x - y$

அதாவது $f(r, \theta) = 4 - 2r\cos\theta - r\sin\theta$

உருளையின் சமன்பாட்டில் $x = r\cos\theta, \quad y = r\sin\theta$

என்றிட

$r^2\cos^2\theta + r^2\sin^2\theta = 1 \;\therefore\; r = 1$

முதல் நாற்கூறுப் பகுதியில் (first quadrant)

r-ன் எல்லைகள் $(0, 1)$

θ-ன் எல்லைகள் $\left(0, \dfrac{\pi}{2}\right)$

$\therefore \quad V = \int \int f(r, \theta) \cdot r \cdot dr \cdot d\theta$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left[\int_0^1 (4 - 2r\cos\theta - r\sin\theta) \cdot r\, dr \right] d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left[\int_0^1 (4r - 2\cos\theta\, r^2 - \sin\theta \cdot r^2)\, dr \right] d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left(4 \cdot \frac{r^2}{2} - 2\cos\theta \cdot \frac{r^3}{3} - \sin\theta\ \frac{r^3}{3} \right)_0^1 d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{2}} (2 - \tfrac{2}{3}\cos\theta - \tfrac{1}{3}\sin\theta)\, d\theta.$$

$$= (2\theta - \tfrac{2}{3}\sin\theta + \tfrac{1}{3}\cos\theta)_0^{\frac{\pi}{2}}$$

$$= 2\frac{\pi}{2} - \frac{2}{3} - \frac{1}{3} = \pi - 1.$$

எ. கா. 2.

$Z = x$ என்ற சமதளத்திறகுக் கீழும், xy தளத்திலுள்ள $r = a\cos 2\theta$ என்ற வளைவரைக்கு மேல் $-\frac{\pi}{2} \leq \theta \leq +\frac{\pi}{4}$ என்ற வரம்பில் அடைபட்டுள்ள பருமத்தைக் கணக்கிடு க.

$$Z = x = r\cos = f(\theta)$$

$$V = \int\int f(r, \theta) \cdot r \cdot dr \cdot d\theta.$$

$$= \int_{-\frac{\pi}{4}}^{+\frac{\pi}{4}} \left[\int_0^{a\cos 2\theta} (r\cos\theta) \cdot r \cdot dr \right] d\theta.$$

$$= 2 \int_{0}^{\frac{\pi}{4}} \left[\cos\theta \cdot \frac{r^3}{4} \right]_{r=0}^{r = a\cos 2\theta} d\theta.$$

$$= \tfrac{2}{3} \int_{0}^{\frac{\pi}{4}} a^3 (\cos^3 2\theta) \cdot \cos\theta \cdot d\theta.$$

$$= \frac{2a^3}{3} \int_{0}^{\frac{\pi}{4}} (1 - 2\sin^2\theta)^3 \cos\theta \cdot d\theta.$$

$$= \frac{2a^3}{3} \int_{0}^{\frac{\pi}{4}} (1 - 2\sin^2\theta)^3 d(\sin\theta)$$

$$= \frac{2a^3}{3} \int_{0}^{\frac{1}{\sqrt{2}}} (1 - 2u^2)^3 du \; ; \quad u = \sin\theta.$$

$$= \frac{2a^3}{3} \int_{0}^{\frac{1}{\sqrt{2}}} (1 - 6u^2 + 12u^4 - 8u^6)\, du$$

$$= \frac{2a^3}{3} \left[\frac{1}{\sqrt{2}} - \frac{6}{3} \cdot \frac{1}{2\sqrt{2}} + \frac{12}{5} \cdot \frac{1}{4\sqrt{2}} - \frac{8}{7} \cdot \frac{1}{8\sqrt{2}} \right]$$

$$= \frac{2a^3}{3} \left[\frac{3}{5\sqrt{2}} - \frac{1}{7\sqrt{2}} \right] = \frac{\sqrt{2} \cdot a^3 \cdot 16}{3 \cdot 5 \cdot 7} = \frac{16\sqrt{2}\, a^3}{105}$$

பயிற்சிகள் 57

உருளை ஆய அளவுகளைக் கொண்டு இரு மாறித்தொகையீட்டு முறையில் பருமம் காண்க.

1. $z = r$ என்ற கூம்பின் வெளிப்புறமாகவும், $r = a \sin 2\theta$ என்ற (வளைவரையின்) உருளையின் உட்புறமாகவும முதல் அரைக்கால் வட்டப்பகுதியில் உள்ள பருமம்.

2. $x^2 + y^2 + z^2 = a^2$ என்ற கோளத்திற்கும், $r^2 = a^2 \cos 2\theta$ என்ற (வளைவரையின்) உருளைக்கும் பொதுவான பருமம்.

3. $r^2 + z^2 = a^2$ என்ற கோளத்திற்கும், $r = a \cos\theta$ என்ற (வளைவரையின்) உருளைக்கும் பொதுவான பருமம்.


4. $z = r\cos 2\theta$ என்ற வளைபரப்புக்கும், $r = a \cos 2\theta$ என்ற (வளைவரையின்) உருளைக்கும், $z = 0, \theta = 0$ என்ற சம தளங்களுக்குமிடையில் முதல் அரைக்கால் வட்டப்பகுதியிலுள்ள பருமம்.

5. முதல் அரைக்கால் வட்டப் பகுதியில் $az = a^2 - r^2$, $r = a\tan\theta, \theta = \frac{\pi}{4}, z = 0$ இவற்றிற்கிடைப்பட்ட பருமம்.

18. வளைவுத் தளங்களின் பரப்பளவுகள்

(Areas of Curved Surfaces)

§ 82.



படம் 100

S—வளைவுத் தளம் $z = f(x, y)$-ன் ஒரு பகுதி

P—S-ன் மேல் ஒரு புள்ளி (x, y, z)

P'—XY-ன் தளத்தின் P-யின் வீழ்ச்சி $(x, y, 0)$

A—XY தளத்தில் $y = g(x)$, $y = f(x)$ வளைவரைகளுக்கும், $x = a$, $x = b$ கோடுகளுக்குமிடைப்பட்ட பரப்பு.

$\triangle A$ — x, y அச்சுகளுக்கிணையாக முறையே $\triangle x$, $\triangle y$ சம இடைவெளிகள் விட்டு, A-யில் வரைந்த கோடுகளால் அடைபட்ட நுண் பரப்புகளில் ஒன்று, இது P'-ஐ ஒரு முனையாகக் கொண்டுள்ளது.

$\triangle A'$ என்பது என்பது $\triangle A$-யின் மேல் உயர்த்திய பட்டகம் (prism) P-யில் வளைதளத்திற்கு வரையப்பட்ட தொடு தளத்தில் வெட்டும் நுண் பகுதியின் பரப்பு.

r என்பது P-ல் வரைந்த தொடுதளம் XY-தளத்துடன் செய்யும் குறுங்கோணம், அல்லது OZ அச்சுக்கும் P-யில் தொடு தளத்திற்குச் செங்குத்துக் கோட்டிற்கும் இடைக்கோணம்.
இப்போது

$\triangle A'$-ன் வீழ்ச்சி XY-தளத்தில் $\triangle A$

$$\therefore \quad \triangle A = \triangle A' \cos r \qquad \ldots\ldots \text{(i)}$$

ஆனல், $\cos r$ என்பது P-யில் வளைவுத் தளத்தின் குத்துக் கோட்டிற்கு (Normal) திசைக் கிடக்கை (direction cosine). வளைவுத் தளத்தின் சமன்பாடு $z = f(x, y)$. குத்துக் கோட்டின் மற்ற திசைக் கோணங்கள்

α, β எனில்,

$$\frac{\cos \alpha}{-\left(\frac{\partial z}{\partial x}\right)} = \frac{\cos \beta}{-\left(\frac{\partial z}{\partial y}\right)} = \frac{\cos r}{+1}$$

$$= \frac{1}{\sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial x}\right)^2 + 1}}$$

என அறிவோம்.

$$\therefore \quad \cos r = \frac{1}{\sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1}}$$

இதை (i)-ல் பிரதியிட

$$\triangle A = \triangle A' \frac{1}{\sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1}}$$

$$\therefore \quad \triangle A' = \sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right) + 1}\ \triangle x \triangle y,$$

$$\therefore \quad \triangle A = \triangle x \cdot \triangle y$$

$$\therefore \quad S = \lim_{\substack{\Delta x \to 0 \\ \Delta y \to 0}} \sum \Delta A', \text{ உரிய எல்லைகளில்}$$

$$= \int_a^b \int_{g(x)}^{f(x)} \sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1}\; dy \cdot dx.$$

குறிப்பு : 1. $z = f(x, y)$-யிலிருந்து $\frac{\partial z}{\partial x}$, $\frac{\partial z}{\partial x}$ மதிப்புகளை x, y-ன் சார்புகளாகக் காணலாம்.

2. வளைவுத் தளத்தி லுள்ள பரப்பை yz தளத்திலோ அல்லது zx தளத்திலோ செங்குத்து வீழ்ச்சிகளாக்கினல் பரப்பு காணும் அமைப்புகளை ஏற்றவாறு மாற்றியமைக்கவேண்டும்.

எ. கா. 1.

$z = 4 - x^2$ என்ற உருளையின் வளைவு பரப்பை $y = x$ என்ற சமதளம் வெட்டிய பகுதியை முதல் அரைக்கால் வட்டப் பகுதி (First octant) எல்லையில் காண்க.

உருளை xy தளத்தை வெட்டும் கோட்டைக்காண $z = 0$ என்றிட, $0 = 4 - x^2$

$\therefore \quad x = 2$ (முதல் அரைக்கால் வட்டப் பகுதியில்)

$\therefore \quad x$-ன் எல்லைகள் $(0, 2)$

y-ன் எல்லைகள் $(0, x)$

$$\frac{\partial z}{\partial x} = -2x, \quad \frac{\partial z}{\partial y} = 0$$

$$\sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1} = \sqrt{4x^2 + 1}$$

$$\therefore \quad S = \int_0^2 \left[\int_{y=0}^{y=x} \sqrt{1 + x^2} \cdot dy \right] dx.$$

$$= \int_0^2 \sqrt{1 + 4x^2} \cdot x\, dx$$

$4x^2 = u$ எனில், $8x \cdot dx = du$

$x\, dx = \frac{du}{8}$; u-ன் எல்லைகள் 0, 16

$$\therefore \quad S = \int_0^{16} \sqrt{1+u}\ \frac{du}{8} = \frac{1}{8} \cdot \frac{2}{3} \Big[(1+u)^{\frac{3}{2}} \Big]_0^{16}$$

$$= \tfrac{1}{12}\ [17^{\frac{3}{2}} - 1] = \tfrac{1}{12}\ (17\sqrt{17} - 1)$$

எ. கா. 2.

இருமாறித்தொகையீட்டு முறையில் ஒரு கோளத்தின் புறப் பரப்பைக் காண்க.

கோளத்தின் சமன்பாடு $x^2 + y^2 + z^2 = a^2$ என்போம். xy தளத்தில் புறப்பரப்பின் எல்லைகள் (முதல் அரைக்கால் வட்டப் பகுதியில்) x-ன் எல்லைகள் $0, a$

y-ன் எல்லைகள் $0, \sqrt{a^2 - x^2}$.

$$z^2 = a^2 - x^2 - y^2$$

$$\therefore \quad z = \sqrt{a^2 - x^2 - y^2}$$

$$\frac{\partial z}{\partial x} = \frac{1\,(-2x)}{2\sqrt{a^2 - x^2 - y^2}}, \quad \frac{\partial z}{\partial y} = \frac{1\,(-2y)}{2\sqrt{a^2 - x^2 - y^2}}$$

$$\therefore \quad \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + \left(\frac{\partial ^2}{\partial y}\right)^2 + 1 = \frac{\not 4\,(x^2 + y^2)}{\not 4\,(a^2 - x^2 - y^2)} + 1$$

$$= \frac{x^2 + y^2 + a^2 - x^2 - y^2}{a^2 - x^2 - y^2} = \frac{a^2}{a^2 - x^2 - y^2}$$

$\therefore$ கோளத்தின் புறப்பரப்பு

$$= 8 \int_0^a \int_{y=0}^{y=\sqrt{a^2 - x^2}} \frac{a}{\sqrt{a^2 - x^2 - y^2}}\, dy \cdot dx$$

$$= 8a \int_0^a \left[\int_0^{\sqrt{a^2 - x^2}} \frac{1}{\sqrt{(a^2 - x^2) - y^2}} \, dy \cdot \right] dx.$$

$$= 8a \int_0^a \left[\sin^{-1} \frac{y}{\sqrt{a^2 - x^2}} \right]_0^{\sqrt{a^2 - x^2}} \cdot dx.$$

$$= 8a \int_0^a \frac{\pi}{2} \cdot dx = 8a \cdot \frac{\pi}{2} \left(x \right)_0^a$$

$$= 4\pi a^2$$

பயிற்சிகள் 58

இரு மாறித் தொகையீட்டு முறையில் பரப்பு காணவும்.

1. $y = 0, y = \frac{a}{2}$ தளங்களுக்கிடையிலுள்ள $x^2 + z^2 = a^2$ என்ற உருளையின் புறப்பரப்பு.

2. $x^2 + z^2 = a^2$ என்ற உருளையின் வளைபரப்பை, $x^2 + y^2 = a^2$ என்ற உருளை வெட்டிய பகுதி.

3. $x^2 - 2ax + 2^2 = 0$ என்ற உருளையின் புறப்பரப்பை $x^2 + y^2 + z^2 = 4a^2$ என்ற கோளம் வெட்டிய பகுதி.

4. $z = \sqrt{x^2 + y^2}$ என்ற கூம்பின் புறப்பரப்பு $x^2 + y^2 - 2x = 0$ என்ற உருளையினுள் இருக்கும் பகுதி.

5. $z = \frac{1}{2} y$ என்ற தளத்தின் பரப்பு $x^2 + y^2 = a^2$ என்ற உருளையினுள் முதல் அரைக்கால் வட்டப் பகுதியிலுள்ள பகுதி.

§ 83. தளங்களின் வளைபரப்பை உருளை ஆய தூரங்களில் கணக்கிடும் முறை (Cylindrical Co-ordinates)

தெக்காட்டின் ஆயத்தொலைவுகளில் வளைபரப்பு காணும் அமைப்பு $S = \int \int \sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1} \cdot dy \cdot dx.$

இங்கு வளைவுத்தளத்தின் சமன்பாடு $z = F(x. y)$

$x = r \cos\theta, y = r \sin\theta$ எனப் பிரதியிட, $z = f(r, \theta)$ என ஆகுமென்போம்.

இப்போது, $x = r \cos\theta, y = r \sin\theta$-விலிருந்து பகுத்து வகைக்கெழு காண,

$$\frac{\partial x}{\partial r} = \cos\theta, \quad \frac{\partial x}{\partial \theta} = -r\sin\theta \qquad \ldots\ldots \text{(i)}$$

$$\frac{\partial y}{\partial r} = \sin\theta, \quad \frac{\partial y}{\partial \theta} = r\cos\theta \qquad \ldots\ldots \text{(ii)}$$

தவிர $Z = F(x, y)$ யிலிருந்து

$$\frac{\partial z}{\partial r} = \frac{\partial z}{\partial x}\cdot\frac{\partial x}{\partial r} + \frac{\partial z}{\partial y}\cdot\frac{\partial y}{\partial r}$$

$$= \frac{\partial z}{\partial x}\cdot\cos\theta + \frac{\partial z}{\partial y}\cdot\sin\theta \qquad \ldots\ldots \text{(iii)}$$

$$\frac{\partial z}{\partial \theta} = \frac{\partial z}{\partial x}\cdot\frac{\partial x}{\partial \theta} + \frac{\partial z}{\partial y}\cdot\frac{\partial y}{\partial \theta}$$

$$= \frac{\partial z}{\partial y}(-r\sin\theta) + \frac{\partial z}{\partial y}(r\cos\theta)$$

$$\therefore \frac{1}{r}\cdot\frac{\partial z}{\partial x} = -\frac{\partial z}{\delta x}\cdot\sin\theta + \frac{\partial z}{\partial y}\cdot\cos\theta \qquad \ldots\ldots \text{(iv)}$$

∴ (iii), (iv) வர்க்கமாக்கிக் கூட்ட

$$\left(\frac{\partial z}{\partial r}\right)^2 + \frac{1}{r^2}\left(\frac{\partial z}{\partial y}\right)^2 = \left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2$$

எனவாகும்.

$$\therefore \sqrt{\left(\frac{\partial z}{\partial x}\right)^2 + \left(\frac{\partial z}{\partial y}\right)^2 + 1} = \sqrt{\left(\frac{\partial z}{\partial r}\right)^2 + \frac{1}{r^2}\left(\frac{\partial z}{\partial \theta}\right)^2 + 1}$$

நுண்பரப்பு $dx \cdot dx = r \cdot dr \cdot d\theta$ என்று கொண்டு உரிய எல்லைக்குள்

$$S \int\int \sqrt{1 + \left(\frac{\partial z}{\partial r}\right)^2 + \frac{1}{r^2}\left(\frac{z}{\partial \theta}\right)^2} \cdot r\, dr \cdot d\theta$$

எனவாகும்.

எ. கா.

$x^2 + y^2 + z^2 = 25$ என்ற கோளத்தின் புறப் பரப்பை $z = 19 - x^2 - y^2$ என்ற கனபரவளைவினுள் கணக்குடுக.


$$x^2 + y^2 + z^2 = 25 \text{ கோளம்} \qquad \ldots\ldots \quad \text{(i)}$$

$$x^2 + y^2 + z = 19 \text{ கனபரவளைவு} \qquad \ldots\ldots \quad \text{(ii)}$$

(i), (ii) லிருந்து, பொதுவான புள்ளிகள்

$$z^2 - 2 - 6 = 0$$

$$\therefore \quad z = +3, -2.$$



படம் 101

இங்கு $z = 3$யில் கோளத்தின் மேல் பரப்புள்ளது

கோளத்தின் ஆரை — 5

$$\therefore \quad \text{எல்லை } r = \sqrt{5^2 - 3^2}$$

$$= 4$$

அல்லது

$$r^2 (\cos^2 \theta + \sin^2 \theta) = 16$$

$$r = 4$$

θ-ன் எல்லை $\left(\theta, \dfrac{\pi}{2}\right)$ எடுத்து, வந்த பரப்பை நான்கு மடங்காக்கவும்.

$$Z = F(r, \theta)$$

$$= 19 - r^2 (\cos^2 \theta + \sin^2 \theta) = 19 - r^2$$

$$\therefore \quad \frac{\partial z}{\partial r} = -2r, \ \frac{\partial z}{\partial \theta} = 0.$$

$$\therefore \quad \sqrt{1 + \left(\frac{\partial z}{\partial r}\right)^2 + \frac{1}{r^2}\left(\frac{\partial z}{\partial \theta}\right)^2} = \sqrt{1 + 4r^2}$$

$$\therefore\ S = 4 \int_0^{\frac{\pi}{2}} \int_0^{4} \sqrt{1 + 4r^2} \cdot r\, dr \cdot d\theta.$$

$$= 4 \int_0^{\frac{\pi}{2}} \left[\sqrt{1 + 4r^2}\; d\frac{(r^2)}{2} \right]_0^4 d\theta.$$

$$= 4 \int_0^{\frac{\pi}{2}} \left[\frac{(1 + 4r^2)^{\frac{3}{2}}}{\frac{3}{2} \times 2 \times 4} \right]_0^4 d\theta.$$

$$= \frac{1}{3} \int_0^{\frac{\pi}{2}} (65^{\frac{3}{2}} - 1)\, d\theta$$

$$= \frac{65^{\frac{3}{2}} - 1}{3} \cdot \frac{\pi}{2} = \frac{(65\sqrt{65} - 1) \times \pi}{6}$$

பயிற்சிகள் 59

உருளை ஆயத் தொலைகள் கொண்டு இருமாறித் தொகை யீட்டில் செய்க :

1. $x^2 + y^2 + z^2 = 20$ என்ற கோளத்தினுள்ளிருக்கும் $8z = x^2 + y^2$ என்ற கன பரவளைவின் மேல் பரப்பைக் கணக்கிடுக.

2. $r = a(1 + \cos\theta)$ என்ற வளைவரை சார்ந்ததான உருளை $r^2 + z^2 = 4a^2$ என்ற கோளத்தின் மேற்பரப்பை முதல் அரைக் கால் வட்டப் பகுதியில் காண்க.

3. xy—தளத்தில் x-அச்சு, y-அச்சு, $x + y = a$ என்றகோடு இவற்றிலடங்கிய முக்கோணத்தைச் செங்குத்தாக வீழ்த்தும் (Orthogonal projection) $z = \sqrt{2xy}$ என்ற வளைவுத் தளத்தின் பரப்பைக் காண்க.

§ 84. மும்மாறித்தொகை ஈடுகள் (Triple Integrals)

$$\int_{l}^{m} \int_{n_1}^{v_2} \int_{u_1}^{u_2} f(x, y, z)\, dx \cdot dy \cdot dz.$$

இந்த அமைப்பை மும்மாறித் தொகை ஈடு என்கிறோம். m, l மாறிலிகள், v_1, v_2 மாறிலிகள் அல்லது z-ன் சார்புகள், u_1, u_2 மாறிலிகள் அல்லது y, z-களின் சார்புகள்.

தொகையிடும் முறை : முதலில்

y, z இவற்றை மாறிலிகளாக் கருதி

$$\int_{u_1}^{u_2} f(x, y, z)\, dx$$ என்று தொகையிடுகிறோம்.

$u_1\ u_2$ எல்லைகள் x-ஐயொட்டியதல்ல. ஆதலால் தொகை $F(y, z)$ போன்ற y, z-களின் சார்பாகும். பிறகு z-ஐ ஒரு மாறிலியாகக்கருதி,

$$\int_{v_1}^{v_2} F(y, z)\, dy$$ என்று தொகையிடுகிறோம்.

$v_1\ v_2$ எல்லைகள் x, y-களை ஒட்டியதல்ல. ஆதலால் தொகை $G(z)$ போன்ற z-ன் சார்பாகும்.

முடிவில் $\int_{l}^{m} G(z)\, dz$ என்று தொகையிட

மதிப்பு ஒரு மாறிலியாகவரும். இங்குக்கையாளப்பட்டது, உள்ளிருந்து வெளியே தொகையிடும் முறை.

உள்ளிருந்து வெளியே வரிசையாகத் தொகை ஈடு காண்பதை நினைவில் வைக்கும் அமைப்பு,

$$\int_{l}^{m} \left[\int_{v_1}^{v_2} \left[\int_{u_2}^{u_1} f(x, y, z,)\, dx \right] dy \right] dz$$

குறிப்பு : எல்லைகளனைத்தும் மாறிலிகளானால், வரிசையை மாற்றியும் தொகையிடலாம். ஒரு மாறியையொட்டித் தொகை காணும்போது மற்றவைகளை மாறிலியாகக் கருதவேண்டும்.

எ. கா. 1.

மதிப்பிடுக. $\int_0^{\frac{1}{2}} \int_0^{(1-z^2)^{-\frac{1}{6}}} \int_0^{x} x \cdot dy \cdot dx \; dz.$

$$= \int_0^{\frac{1}{2}} \int_0^{(1-z^2)^{-\frac{1}{6}}} [x \int_0^{x} \cdot dy] \, dx \cdot dz, \text{ (}x\text{-மாறிலி எனில்)}$$

$$= \int_0^{\frac{1}{2}} [\int_0^{(1-z^2)^{-\frac{1}{6}}} [x \cdot (y)_0^{x}] \, dx \cdot dz.$$

$$= \int_0^{\frac{1}{2}} [\int_0^{(1-z^2)^{-\frac{1}{6}}} x^2 \cdot dx] \, dz.$$

$$= \int_0^{\frac{1}{2}} \tfrac{1}{3} (x^3)_0^{(1-z^2)^{-\frac{1}{6}}} \, d .$$

$$= \tfrac{1}{3} \int_0^{\frac{1}{2}} (1-z^2)^{-\frac{1}{2}} \cdot dz = \tfrac{1}{3} \; (\sin^{-1} z)_0^{\frac{1}{2}}$$

$$= \frac{1}{3} \cdot \frac{\pi}{6} = \frac{\pi}{18}$$

எ. கா. 2.

$$\int_0^{a} \int_0^{b} \int_0^{c} (x + y + z) \, dx \cdot dy \cdot dz \text{ (}y, z \text{ மாறிலிகள் எனில்)}$$

$$I = \int_0^{a} \int_0^{b} \left(\frac{x^2}{2} + y \cdot x + z \cdot x \right)_{x=0}^{x=c} dy \cdot dz.$$

$$= \int_0^a \int_0^b \left(\frac{c^2}{2} + cy + cz\right) (\because \text{ மாறிலி}) \text{ எனில்}$$

$$= \int_0^a \left(\frac{c^2 y}{2} + \frac{c \cdot y^2}{2} + cy \cdot y\right)_0^b dz$$

$$= \int_0^a \left(\frac{c^2 b}{2} + \frac{cb^2}{2} + cz \cdot b\right) dz$$

$$= \left(\frac{c^2 b \cdot z}{2} \times \frac{cb^2}{2} + \frac{cb \cdot z^2}{2}\right)_0^a$$

$$= \frac{b^2 a}{2} + \frac{cb^2 a}{2} + \frac{cba^2}{2} = \frac{abc}{2}(a + b + c)$$

பயிற்சிகள் 60

தொகையிடுக :

1. $\int_0^1 dx \int_0^2 dy \int_1^2 x^2 y \cdot z \cdot dz$

2. $\int_0^{\pi} \int_0^{\frac{\pi}{2}} \int_0^{k} r^2 \sin\theta \cdot dr \cdot d\theta\, d\phi$

3. $\int_0^a \int_0^{\sqrt{a^2 - z^2}} \int_0^{\sqrt{a^2 - y^2 - z^2}} (x^2 + y^2 + z^2)\, dx \cdot dy \cdot dz$

4. $\int_0^{\log a} \int_0^{x} \int_0^{x+y} e^{x+y+z} \cdot dz \cdot dy \cdot dx$

5. $\int_0^3 \int_0^{(9 - x^2)^{\frac{1}{4}}} \int_{x-y}^{x+y} z \cdot dz \cdot dy \cdot dx$

6. $$\int_0^2 \int_0^{\sqrt{4-x^2}} \int_0^{(4-x^2-y^2)^{\frac{2}{3}}} (4-x^2-y^2)^{\frac{1}{3}}\, dz \cdot dy \cdot dx$$


7. $$\int_{\frac{\pi}{6}}^{\frac{\pi}{2}} \int_1^{\frac{\pi}{2x}} \int_0^{xy^2} \frac{x}{y} \cos \frac{z}{y} \cdot dz \cdot dy \cdot dx$$

8. $$\int_0^{\frac{\pi}{2}} \int_0^{4\cos x} \int_0^{y+4} z^{-\frac{3}{2}} \cdot dz \cdot dy \cdot dx$$

9. $$\int_0^{\frac{\pi}{2}} \int_0^{\sin\theta} \int_0^{4+r\cos\theta} r \cdot dz \cdot dr \cdot d\theta$$

10. $$\int_0^{\frac{\pi}{2}} \int_0^{2\phi} \int_0^{a\sqrt{1+\cos\theta}} r^3 \sin\theta \cdot \sin\phi \cdot dr \cdot d\theta \cdot d\phi$$

85. மும்மாறித் தொகையீட்டு முறையில் பருமங் காணல் (Volume by Triple Integral)



படம் 102

$Z = F\ (x, y)$ என்ற வளை தளம் மேல் எல்லையாகவும், xy-தளம் கீழ் எல்லையாகவும், சமதளங்கள் $x = a$, $x = b$; உருளை தளங்கள் $y = g\,(x)$, $y = f\,(x)$ நெடுக்கை (vertical)-ப் பக்க எல்லைகளாகவும் உள்ள ஒரு முப்பரிமாணப் பொருளின் பருமம் காண்போம்.

xy, yz, zx தளங்களுக்கு இணையாகவும், ஒன்றுக்கொன்று முறையே $\triangle z, \triangle x, \triangle y$ இடைவெளிகளில், கணக்கற்ற சம தளங்கள் வரைந்து பருமத்தை $\triangle z, \triangle x, \triangle y$ நீள, அகல உயர அளவுகளுள்ள நுண்ணிய பட்டகங்களாக்குவோம்.

ஒரு நுண் பகுதியின் பருமம் $= \triangle z \cdot \triangle x \cdot \triangle y$. படத்தில் கண்டவாறு Xy-தளத்தில் $\triangle x \cdot \triangle y$ நுண் பரப்பின் மேல் எண்ணற்ற நுண் பட்டகங்கள் $F\,(x, y)$ தளம் வரையில் z-உயரத்திற்கு ஒரு செவ்வக இணைகரத்திண்ம வடிவில் (Rectangular Parallelopiped) இருக்கும்.

$\triangle z \to 0$ எல்லையில் இத் திண்மத்தின் பருமம்

$$= \Sigma\ \triangle z\,(\triangle y \cdot \triangle x)$$

$$= \left[\int_0^{F(x,y)} \cdot\ dz \right] \triangle y \cdot \triangle x$$

$\triangle x$ மாருது, இந்நுண் திண்மங்களை $y = g\,(x)$ $y = f(x)$ வரையிலும் நகர்த்த ஒரு மெல்லிய தகடான பருமம் வரும்.
$\triangle y \leftarrow 0$ எனும்போது இத்தகட்டின்

$$\text{பருமம்} = \left\{ \underset{\triangle y \to 0}{\text{எல்லை}} \sum_{g(x)}^{f(x)} \left[\int_0^{F(x,y)} dz \right] \triangle y \right\} \triangle x$$

$$= \left\{ \int_a^b \int_{g(x)}^{f(x)} \int_0^{F(x,y)} dz \cdot dy \right\} \triangle x$$

அடுத்து,

$x = a$, $x = b$ என்ற எல்லைகளிலுள்ள மெல்லிய தகடுகளை ஒன்று சேர்க்க, $\triangle x \to 0$ எனும்போது பொருளின் பருமம்

$$V = \underset{\triangle x \to 0}{\text{எல்லை}} \sum_a^b \left[\int_{g(x)}^{f(x)} \int_0^{F(x,y)} dz \cdot dy \right] \triangle x$$

$$= \int_a^b \int_{g(x)}^{f(x)} \int_0^{F(x,y)} dz \cdot dy \cdot dx$$ என அமையும்.

எ. கா. 1.

$z = x + y^2$ மேல் தளமாகவும் XOY அடித்தளமாகவும், $y = 2\sqrt{x} = x = 2\sqrt{y}$ என்ற உருளைகளுக்குள் முதல் அரைக் கால் வட்டப்பகுதியில் உண்டாகும் பருமத்தை மதிப்பிடுக.

Z எல்லைகள் $z = 0, \quad z = x + y^2$

X எல்லைகள் $x = \frac{y^2}{4} \quad x = 2\sqrt{y}$

Y-எல்லைகளைக்காண,

$x = \frac{y^2}{4}$, $x = 2\sqrt{y}$ இவற்றிலிருந்து

$$\frac{y^2}{4} = 2\sqrt{y} \quad \frac{y^4}{16} = 4y$$

$$y(y^3 - 64) = 0 \qquad \therefore \quad y = 0, 4$$

$$\therefore \quad V = \int_0^4 \int_{\frac{y^2}{4}}^{2\sqrt{y}} \left[\int_0^{x+y^2} dz \right] \cdot dx \cdot dy$$

$$= \int_0^4 \left[\int_{\frac{y^2}{4}}^{2\sqrt{y}} (x + y^2)\, dx \right] dy$$

$$= \int_0^4 \left[\left(\tfrac{1}{2} x^2 + y^2 x \right)_{\frac{y^2}{4}}^{2\sqrt{y}} \right] dy$$

$$= \int_0^4 \left[\frac{1}{2} \cdot 4y + y^2 \cdot 2\sqrt{y} - \frac{1}{2} \cdot \frac{y^4}{16} - \frac{y^4}{4} \right] dy$$

$$= \int_0^4 \left(2y + 2y^{\frac{5}{2}} - \frac{9y^4}{32} \right) dy$$

$$= 4^2 + 2 \cdot \frac{2}{7} \cdot 4^{\frac{7}{2}} - \frac{9 \cdot 4^5}{32 \cdot 5}$$

$$= 16 + \tfrac{512}{7} - \tfrac{288}{5} - 16 + 73\tfrac{1}{7} - 57\tfrac{3}{5}$$

$$= 31\tfrac{19}{35}$$

$$= \tfrac{1104}{35}$$

எ. கா. 2.

$\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} + \frac{z^2}{c^2} = 1$ என்ற நீள்வட்டக் கோளத்தின் பருமனை முதல் அரைக்கால் வட்டப்பகுதியில் கணக்கிடுக. நீள் வட்டக் கோளம் அச்சுகளை $(a, 0, 0,)$ $(0, b, 0)$ $(0, b, c)$ புள்ளிகளில் வெட்டும்.

xy தளத்தில் எல்லை, நீள் வட்டம் $\frac{x^2}{a^2} + \frac{yx}{b^2} = 1$

$V = \int\int\int dz \cdot dy \cdot dx$ என்று கொண்டால் முதலில் z-ன் எல்லை முதல் எண் பகுதியில் (x, y களில் சார்பு)

$$z = 0, \; z = c \sqrt{1 - \frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2}}$$

y-ன் எல்லை XY-தளத்தில்

$$y = 0, \; y = b \sqrt{1 - \frac{x^2}{a^2}} \; (X\text{-ல் சார்பு})$$

x-ன் எல்லை, $x = 0$, $x = a$

$$\therefore \; V = \int_0^a \int_{y=0}^{y=b\sqrt{1-\frac{x^2}{a^2}}} \int_0^{z=c\sqrt{1-\frac{x^2}{a^2}-\frac{y^2}{b^2}}} dz \cdot dy \cdot dx$$

$$= c \int_0^a \left[\int_0^{b\sqrt{1 - \frac{x^2}{a^2}}} \sqrt{\left(1 - \frac{x^2}{a^2}\right) - \left(\frac{y^2}{b^2}\right)}\, dy \right] dx$$

$$= \frac{c}{b} \int_0^a \left[\int_0^{\frac{b}{a}\sqrt{a^2 - x^2}} \sqrt{b^2 \left(1 - \frac{x^2}{a^2}\right) - y^2}\, dy \right] dx$$

$$= \frac{c}{b} \int \left[\frac{y}{2} \sqrt{b^2 \left(1 - \frac{x^2}{a^2}\right) - y^2} + \frac{b^2}{2}\left(1 - \frac{x^2}{a^2}\right) \sin^{-1} \frac{y}{b\sqrt{1 - \frac{x^2}{a^2}}} \right]_{y=0}^{y = \frac{b}{a}\sqrt{a^2 - x^2}} dx$$

$$= \frac{c}{b} \int_0^a \frac{b^2}{2} \left(1 - \frac{x^2}{a^2}\right) \frac{\pi}{2} \cdot dx$$

$$= \frac{\pi bc}{4} \int_0^a \left(1 - \frac{x^2}{a^2}\right) dx$$

$$= \frac{\pi bc}{4} \left(x - \frac{x^3}{3a^2}\right)_0^a = \frac{\pi bc}{4} \left(a - \frac{a}{3}\right)$$

$$= \frac{\pi abc}{6}$$

∴ நீள்வட்டக்கோளத்தின்

$$\text{பருமம்} = 8 \times \frac{\pi abc}{6} = \frac{4}{3}\pi abc$$

எ. கா. 3.

$\int\int\int xyz\, dx \cdot dy \cdot dz$ என்ற தொகையீட்டை, $x^2 + y^2 + z^2 \leq a^2$ என்ற கோளத்தின் மிகை அரைக்கால் வட்டப்பகுதி முழுவதும் மதிப்பிடுக.

z-ன் எல்லைகள் $z = 0$, $z = \sqrt{a^2 - x^2 - y^2}$ (x, y-களின் சார்பு)

xy தளத்தில் y-ன் எல்லைகள்

$y = 0$, $y = \sqrt{a^2 - x^2}$ (x-ன் சார்பு)

x-ன் எல்லைகள் $x = 0$ $x = a$.

$$\therefore\ V = \int_0^a \int_{y=0}^{y=\sqrt{a^2-x^2}} \int_{z=0}^{z=\sqrt{a^2-x^2-y^2}} xyz \cdot dz \cdot dy \cdot dx.$$

$$= \int_0^a \int_0^{\sqrt{a^2-x^2}} x \cdot y \left(\frac{a^2 - x^2 - y^2}{2}\right) dy \cdot dx$$

$$= \frac{1}{2} \int_0^a \int^{y=\sqrt{a^2-x^2}} \left[x(a^2 - x^2)\, y - xy^3 \right] dy \cdot dx.$$

$$= \frac{1}{2} \int_0^a \left[x(a^2 - x^2) \frac{y^2}{2} - x\frac{y^4}{4} \right]_0^{\sqrt{a^2-x^2}} \cdot dx$$

$$= \frac{1}{8} \int_0^a \left[2x(a^2 - x^2)^2 - x(a^2 - x^2)^2 \right] dx$$

$$= \frac{1}{8} \int_0^a x(a^2 - x^2)^2 \cdot dx$$

$$= \frac{1}{8} \int_0^{\frac{\pi}{2}} a \sin\theta \cdot a^4 \cdot \cos^4\theta \cdot a \cos\theta \cdot d\theta$$

$x = a \sin\theta$ எனில்

$$= \frac{a^6}{8} \int_0^{\frac{\pi}{2}} \sin\theta \cdot \cos^5\theta \cdot d\theta.$$

$$= \frac{a^6}{8} \frac{4 \cdot 2}{6 \cdot 4} \cdot \frac{1}{2} = \frac{a^6}{48}$$

பயிற்சிகள் 61

மும்மாறித் தொகையீட்டு முறையில் கணக்கிடுக.

1. $4z = 16 - 4x^2 - y^2$ என்ற நீள்வட்டக்கன பரவளைவும் (Elliptic paraboloid), XOY தளமும் அடைக்கும் பருமத்தைக் காண்க.

2. $x^2 + y^2 = a^2$ என்ற கன பரவளைவும், XOY தளம், $x^2 + y^2 = 2ax$ என்ற உருளை, இவற்றுலடைபட்ட பகுதியின் பருமத்தை மதிப்பிடுக.

3. $x^2 + y^2 = 4$ என்ற உருளை, $y + z = 4$, $z = 0$ என்ற சமதளங்கள், இவற்றிற்கிடையிலுள்ள திண்மத்தின் (Solid) பருமம் எவ்வளவு?

4. $\frac{x}{a} + \frac{y}{b} + \frac{z}{c} = 1$, அச்சுத்தளங்கள், இவற்றிடைப்பட்ட பருமத்தை மதிப்பிடுக.

5. $z = 0$ என்ற சமதளம், $\frac{x^2}{1} + \frac{y^2}{4} + \frac{z^2}{1} = 1$ என்ற நீள் வட்டக் கோளத்தை வெட்டிய பகுதியின் பருமமெவ்வளவு?

6. மதிப்பிடுக. $\int\int\int \frac{1}{x^2 + y^2 + z^2} dx \cdot dy \cdot dz$ என்ற தொகையீட்டை $x^2 + y^2 + z^2 = a^2$ என்ற கோளம் முழுவதும்.


7. $z = 9x^2 + y^2$, $z = 18 - 9x^2 - y^2$ என்ற நீள்வட்டக் கன பரவளைவுகளாலடைபடும் பருமத்தை அளவிடுக.

8. $z = 4 - x^2$, $z = 4 - y^2$ என்ற உருளைகளால் அடைக்கப்பட்ட முதல் அரைக்கால் வட்டப்பகுதியிலுள்ள பருமத்தின் அளவென்ன ?

9. முதல் அரைக்கால் வட்டப் பகுதியில் $z = \dfrac{8}{x^2 + 4}$ என்ற உருளை சம தளங்கள் $y = \dfrac{x}{2}$, $x = 2$, $y = 0$, $z = 0$ இவற்றை எல்லைகளாகக் கொண்ட பருமத்தைக் காண்க.

10. $4x + 6y + 3z = 12$, ஆயதளங்கள், இவற்றுலுண்டாகும் நான்முகியின் (Tetrahedron) பருமத்தைக் கணக்கிடுக.

§ 86. கோள ஆய எண்கள் (Spherical Co-ordinates)



படம் 103

P எனும் புள்ளி (r, θ), Q என்பது $(r + dr, \theta + d\theta$
கோணம் $Z\hat{O}P = \theta$.

கோணம் ϕ என்பது ZOX, ZOP தளங்களுக்கு இடைக் கோணம்.

θ-ன் எல்லை $0 - \pi$, ϕ-ன் எல்லை $0 - 2\pi$. தெக்காட்டின் ஆய தூரங்களில் P என்பது (x, y, z) எனில்,

$$x = r \sin \theta \cdot \cos \phi$$

$$y = r \sin \theta \cdot \sin \phi$$

$$z = r \cos \theta, \text{ என்பது தெளிவு.}$$

இவற்றிலிருந்து, $x^2 + y^2 = r^2 \sin \theta$.

$$x^2 + y^2 + z^2 = r^2.$$

இப்போது, P என்ற புள்ளியை $(r \sin \theta \cdot \cos \phi, r \sin \theta \sin \phi, r \cos \theta)$, அல்லது $P(r, \theta, \phi)$ எனக் குறிக்கின்றோம்.

(r, θ, ϕ) அளவுகளைக் கோள ஆய எண்கள் (Spherical Co-ordinates) என்கிறோம்.

